மாதப் பத்திரிகை

ஆசிரியர்:

கா. வே. ராமசந்திரன்

முதல் வால்யூம் பஹுதான்ய வருஷம் சித்திரைப் பகுதி.

15—4—1939.

விஷய ஸூசிகை.

விஷயம்: பக்கம்.

கவிதா விமர்சம்—

ராமநம்பியின் தம்பியர்:

1	பரதன்	R. P. ஸேதுபிள்ளை B.A., B.L.,	201
2	இலட்சுமணன்	ராவ் சாஹிப் ச. வையாபுரிப்பிள்ளை B.A., B.L.,	205
3	சத்துருக்கன்	கௌசிகன்	209
4	குஹப்பெருமாள்	V. வேங்கடராஜுலு ரெட்டியார்	212
5	சுக்கிரீவன்	வே. நாராயணையர் M.A., B.L.,	215
6	விபீஷண நம்பி	ராவ் சாஹிப், பண்டித மு. ராகவையங்கார்	219
7	வால்மீகியின் 'து' வுக்குக் கம்பர் பொருளுரைத்தல்	தி. சுந்தராசாரியார் B.A., B.L., சீர்காழி	225
8	மேக தர்சனம்	மாயக்கூத்தன்	226

புதுக் கற்பனைகள்

1	கடிகாரங்கள்	கை. சு. வே.	228
2	பசுக்களின் மஹாநாடு	ஸ்ரீமதி அம்மணி அம்மாள்	230
3	மறைந்த மலர்	ரா. ஸ்ரீ. தேசிகன், M.A.,	233
4	புதிர்	ஸ்ரீ	237
5	பக்தியின் பெருமை	Y. மஹாலிங்க சாஸ்திரிகள் M.A., B.L.,	239
6	கைமேற் பணம்	P. கோதண்டராமன், M.A., B.L.,	240
7	கோலு	மஞ்சேரி ஸா. ஈச்வரன்	252

விஷயம்:		பக்கம்.

மொழிபெயர்ப்புப் பகுதி

1 கதைக் கடல் ... டாக்டர் வே. ராகவன் M.A.Ph. D., ... 256

2 துஞ்சீனன் காலத்துப் பஞ்சம்
3 அவந்திவர்மன் அரசியல் } Y. மஹாலிங்க சாஸ்திரிகள் M.A., B.L., ... 261

கீதப் பகுதி

1 பாபவிநாச முதலியார் பாடல்கள் ... பண்டித ச. சோமசுந்தர தேசிகர் உதவியது ... 265

சித்திரப் பகுதி

1 சென்னைச் சித்திரகாட்சி ... பார்க்கவன் ... 268

√ மாதக் குறிப்புகள் 269

புஸ்தக விமர்சனம்

1 அற்புத உலகம் ... மும்மொழியாளன் ... 271

PK 11½
Dr VR 9½
VN 9½
EA 2½
YM 5½
RSD 4
SSD 3
RPS 4
SVP 4½
VVR 3½
[illegible]R 6
TS 1½
KSV 2½
Sri 2
[illegible]

அறிவிப்பு.

'சில்பஸ்ரீ'க்குக் கட்டுரை எழுத விரும்புவோர் தைப்பகுதியில் 2, 3-வது பக்கங்களில் உள்ள 'சில்பஸ்ரீ மாதப் பத்திரிகையின் நோக்கங்கள்' 'சில்பஸ்ரீயில் எழுதப்படும் விஷயங்கள்' என்னும் குறிப்புகளைக் காண்க. அனுப்பப்படும் கட்டுரைகளைத் தாளின் ஒருபக்கத்திலே மட்டும் எழுதுமாறு பிரார்த்திக்கிறோம். பிரசுரிக்கப்படாத கட்டுரைகளைத் திரும்பப் பெற விரும்புவோர் தபால் தலையும் உடன் அனுப்புமாறும் பிரார்த்திக்கிறோம்.

இப்பத்திரிகையில் வெளிவரும் புனைந்துரைகளிலுள்ள பெயர்கள் யாரையும் குறிப்பன அல்ல; எல்லாம் கற்பனைப் பெயர்களே அவை. கட்டுரைகளிலே கூறப்படும் அபிப்பிராயங்கள் அவற்றை எழுதியவர்கள் அபிப்பிராயங்களே; அவைகளுக்கு பத்திரிகாசிரியர் ஜவாப்தாரி யல்ல.

சில்பஸ்ரீ

தமிழ் மொழியையும் கலைகளையும் வளர்ப்பதற்காகவே அமைந்ததொரு பத்திரிகை. டபிள் க்ரௌன் (Double Crown) அளவில் 64 பக்கங்கள் கொண்டு, மாதந்தோறும் வெளிவரும்.

தனிப்பிரதி விலை அணு **6.**

வருஷ சந்தா (உள்நாட்டுத் தபால் சார்ஜு உள்பட) ரூ. **4.**

கவிதா விமர்சம்.

பரதன்.

(R. P. சேதுப் பிள்ளை, B.A., B.L., எழுதியது.)

தசரதமன்னன் மக்களாய்த் தோன்றிய நால்வருள் பரதன் நீதியின் நிலையமாய் அமைந்தான். பாரதநாட்டின் தருமமே திரண்டு உருவெடுத்தாற் போன்ற பரதன் கைகேசியின் மைந்தனாய்ப் பிறந்து கோசலையின் காதல் மைந்தனாய் வளர்ந்தான். இளமையிலேயே நெறிமுறை வழுவாத பரதனது பெருமையை விசுவாமித்திர முனிவர் மிதிலை மன்னனிடம் அறிவிக்கும் திறம் அறியத்தக்கதாகும். அம் மன்னன் இயற்றிய வேள்வியைக் காணுமாறு முனிவர், இராமனையும் இலக்குவனையும் மிதிலை மாநகர்க்கு அழைத்துச் சென்றார். மிதிலையர் கோன், முனிவருக்குரிய வழிபாடுகளை முறையாகச் செய்த பின்னர், மைந்தர் இருவரையும் கண்களிப்பக் கண்டு அவர் குலத்தையும் நலத்தையும் அறிய அவாவினான். அந்நிலையில் சான்றோர் பலர் தோன்றிய பெருங்குலத்திற் பிறந்த இராமனது நலத்தினை மிதிலை மன்னன் உள்ளங்கொள்ள எடுத்துரைத்த முனிவர் அடுத்த மைந்தனான பரதன் பெருமையைப் பேசலுற்றார்.

> தள்ளரிய பெருநீதித் தனியாறு புகமண்டும்
> பள்ளமெனும் தகையானைப் பரதனெனும் பெயரானை
> எள்ளரிய குணத்தாலும் எழிலாலும் இவ் விருந்த
> வள்ளலையே அனையானைக் கேகயர்கோன் மகள் பயந்தாள்

என்று முனிவர் எடுத்துரைத்தார். எவ்வாற்றானும் தடுத்தற்கரிய நீதியென்னும் பெரு வெள்ளம் பாய்ந்து நிறைதற்குரிய பள்ளம் என்னும் தகையான் பரதன் எனும் பெயர் பெற்றான் என்பது முனிவர் கருத்து. குணத்தாலும் நலத்தாலும் இராமனையே நிகர்த்த பரதன் ஒப்பற்ற நியாய சாகரமாய் அமைந்தான் என்று முனிவர் கட்டுரைத்தார்.

ஆழிசூழ் உலகமெல்லாம் பரதனே ஆள வேண்டுமென்றும், தலைமகனான இராமன் தவக்கோலந் தாங்கி, பதினான்கு ஆண்டு கானகத்தில் அலையவேண்டும் என்றும் ஆணை

பிறந்தபொழுது கோசலையிடம் விடை பெறுமாறு இராமன் அவள் மாளிகையை அடைந்தான். மணிமுடி யணிந்த கோலத்தில் மைந்தனைக் காணலாம் என்று எண்ணி உள்ளம் தழைத்திருந்த கோசலையின் கண்ணெதிரே எளியனாய்த் தமியனாய் இராமன் சென்றான். மைந்தன் நிலைகண்டு மனந்திகைத்த கோசலை 'ஐயனே, நெடுமுடி புனைதற்கு எதும் இடையூறு நேர்ந்ததோ' என்று வினவினாள்.

மங்கை அம்மொழி கூறலும் மானவன்
செங்கை கூப்பி நின் காதல் திருமகன்
பங்கமில் குணத் தெம்பி பரதனே
துங்க மாமுடி சூடுகின்றான் என்றான்

'தாயே! நின் காதல் திருமகன், மனத்துக்கண் மாசற்ற என் தம்பி பரதனே மாமுடி சூடுகின்றான்' என மாற்றம் உரைத்தான். அவ்வுரை கேட்ட கோசலை, 'மூத்தோன் இருக்க இளையோன் முடி சூடுதல் முறைமையன்று என்பார்கள். அது ஒன்றேயன்றி, பரதன் மும்மையின் நிறைகுணத்தவன்; நின்னினும் நல்லவன்; குறைவிலன்' எனக் கூறினாள்.

கைகேசியின் சூழ்வினையால் தலைமகன் நாட்டை விட்டகன்றான் என்றறிந்து நெடுந் துயருற்ற பரதன், கானளச் சென்ற தமையனை அழைத்து வருமாறு நால்வகைச் சேனையோடும் நகரமாந்தரோடும் அயோத்தியினின்றும் புறப்பட்டுக் கங்கைக் கரையை அடைந்தான். நாட்டினின்றும் தமையனை வெளியேற்றிய தம்பி காட்டிலும் அவனைத் துன்புறுத்தக் கருதிப் படைதிரட்டி வந்தான் என்றெண்ணிய கங்கைக் காவலனாய குகன், பரதன்மீது பெருஞ் சீற்றமுற்றுப் போர் புரிய எழுந்தான்; கங்கையின் மறுகரையில் மரவுரியும் சடைமுடியும் புனைந்து மாசடைந்த மேனியனாய், மழை பொழியும் கண்ணினனாய் தமையனைத் திக்கு நோக்கித் தொழுது நின்ற பரதனைக் கண்ணுற்றான்; பண்புவாய்ந்த நம்பியைப் பகைவனெனக் கருதிப் பலபல பேசிய தன் சிறுமையை நினைந்து மனம் குழைந்தான்; அப்பொழுதே படகிலேறிப் பரதன் நின்ற கரையை அடைந்தான். உணர்ச்சி யொத்த இருவரும் ஒருவரை யொருவர் முறைமையில் தொழுத பின்பு, கரவறியாத குகன் பரதனை நோக்கி, 'நீ என் கானகம் நோக்கி வந்தாய்' என வினவினான்.

அவ்வுரைகேட்ட பரதன் குகனை அமர்ந்து நோக்கி, "ஐயனே!

முழுதுலகளித்த தந்தை முந்தையோர்
முறையினின்றும்
வழுவினன் அதனை நீக்க மன்னனைக்
கொணர்வான் வந்தேன்"

என மாற்றம் உரைத்தான். தொன்று தொட்டு வந்த முறைமையினின்றும் தந்தை வழுவினான் என்றும், காட்டிற் போந்த மன்னனை நாட்டிற்கு அழைத்துச் செல்லுதலே தன் கருத்தென்றும் பரதன் நேர்மையாயுரைத்த மாற்றம் கேட்டுக் குகன் மனம் குளிர்ந்தான்.

தாயுரை கொண்டு தாதை
உதவிய தரணி தன்னைத்
தீவினை யென்ன நீத்துச்
சிந்தனை முகத்தில் தேக்கிப்
போயினை யென்ற போழ்து
புகழினோய் தன்மை கண்டால்
ஆயிரம் இராமர் நின் கேள்
ஆவரோ தெரியின் அம்மா!

என்று நம்பியை மனமாரப் புகழ்ந்துரைத்தான். "தாய்பெற்ற வரத்தால் தந்தை யளித்த அரசுரிமையைத் தீவினை என அகற்றி, கவலை நிரம்பிய முகத்தோடு கானகம் நோக்கிப் போந்த நின் பெருமையை அறியுங்கால் ஆயிரம் இராமர் நினக்கு இணையாவரோ" என்று கரவறியாக் குகன் கூறி மகிழ்ந்தான்.

கங்கையாற்றைக் கடந்து தமையன் தங்கியிருந்த திரிகூட மலையின் மருங்கே வந்த பரதனையும் பரந்த சேனையையும் எற்றத்தினின்று கண்ட இலக்குவன் சீற்றங் கொண்டு,

இருமையும் இழந்த அப்பரதன் ஏந்து
தோள்
பருமையும், அன்னவன் படைத்த
சேனையின்
பெருமையும், நின்னொரு பின்புவந்த என்
ஒருமையும் கண்டு இனி உவத்தி உள்ளம் நீ'

என இராமன் முன்னின்று முழங்கினான். தன்பாற் கொண்ட அளவிறந்த அன்பினால் ஆறிய தம்பியின் நிலையைப் பிறழவுணர்ந்து சீறிநின்ற தம்பியை ஐயன் அமர்ந்து நோக்கி,

"சேணுயர் தருமத்தின் தேவைச்
செம்மையின்
ஆணியை அன்னது நினைக்கலாகுமோ"

என்று மனங் கசிந்துரைத்தான். அந்நிலையில் தொழுதுயர்ந்தகையினனாய், துவண்ட மேனியனாய், அழுதழிந்த கண்ணினனாய் நண்ணிய பரதனைக் கண்டு அகங்குழைந்த இராமன் இலக்குவனை நோக்கி

'ஆர்ப்புறு வரிசிலை இளைய ஐய! நீ
தேர்ப்பெருந்தானையாற் பரதன் சீறிய
போர்ப் பெருங்கோலத்தைப்
பொருந்த நோக்கு' வாய்

என்றபொழுது, இலக்குவன் கண்ணினின்றும் கண்ணீர் வடிந்தது; அவன் கையினின்றும் வரிசிலை வீழ்ந்தது.

சித்திரகூட மலையில் இராமன் பாதுகையைப் பெற்று மீண்ட பரதன், அயோத்திமா நகரினுள்ளே செல்ல ஒருப்படாது, அந்நகர்ப் புறத்தே யமைந்த நந்தியம்பதியில் ஐம்பொறிகளையும் வென்று அருந்தவம் புரிவானாயினன். அத்தவத்தின் பெருமையை

"வெயர்த்த மேனியன் விழிபொழி
மழையன் மூவினையைச்
செயிர்த்த சிந்தையன் தெருமரல்
உழந்துழந் திழிவான்
அயர்த்து நோக்கினும் தென்திசை
யன்றி வேறறியான்
பயத்த துன்பமே உருவுகொண்டா
லேனும் படியான்"

என்று பரத்துவாச மாமுனிவர் உருக்கமாக உரைத்தார். காமமாதி மூவினையைக் கடிந்து இராமன்பாற் கொண்ட காதலாற் கசிந்து கண்ணீர் பெருக்கி, அவன் சென்ற வழிமேல் விழி வைத்து அவலமே வடிவாய் அமைந்திருந்த பரதன் கோலம் முனிவர் வாக்கால் இனிது விளங்குவதாகும்.

இத்தகைய அருந்தவம்புரிந்த பெருந்தகையாளனைச் சீதை மனமாரப் போற்றினாள். நஞ்சினும் கொடிய இலங்கை வேந்தன் தன்னை வஞ்சித்துக் கவர்ந்தமையால் அயோத்தி மன்னரது குலத்திற்கு நேர்ந்த அரும்பழியை நினைந்து வருந்திய சீதை

வரதா இளையோய் மறுவேது மிலாப்
பரதா இளையோய் பழிபூணுதிரோ

என்று பன்னினாள். பின்பு அரக்கர் நகரிற் சிறையிருந்த தன்னை ஒரு பொருளெனக் கருதித் தலைவன் விடுவிக்க வருவானோ என்றெண்ணி ஏங்கிய சீதை,

'தன்னை நோக்கி உலகம் தளர்தற்கும்
அன்னை நோய்க்கும் பரதன் அங்காற்றுறும்
இன்னல் நோய்க்கும் அங்கேகுவ தன்றியே
என்னை நோக்கி இங்கு எங்ஙனம் எய்துமோ'

என்று வருந்தினாள். "அயோத்திமா நகர மக்களெல்லாம் இராமனைக் காணாது இடருறுகின்றார். தாயர் உள்ளம் நொந்து வருந்துகின்றார். தம்பி பரதன் நந்தியம்பதியில் நற்றவம் புரிகின்றான். அன்னார் துயரம் தீர்ப்பதற்கு என் தலைவன் அயோத்தியை நோக்கிச் செல்வானே யன்றி, ஏழையாய என்னை நினைந்து இங்கு வருதலும் இயலுமோ?" என்று சீதை தளர்ந்து கூறும் மொழிகளில் பரதனது தவத்தின் பெருமை நன்கு இலங்குகின்றது. இன்னும் இலங்கையர்கோன் மாயையால் அரக்கன் ஒருவனை மிதிலைமன்னன் போலாக்கிப் பாசத்தாற்பிணித்து அவனைச் சீதையின் கண்ணெதிரே கொணர்ந்து காட்டியபொழுது அம்மங்கை மனம் பதைத்து,

சரதம் மற்றிவனைத் தந்தார் தவம்புரி
யாற்றல் சான்ற
பரதனைக் கோணர்தற்கு
ஏதும் ஐயுறவில்லை

என்று பரதன் தவப் பெருமையை நினைந்து மயங்கினாள்.

பரதனைப் போன்ற தம்பி யொருவனைக் காண்டலரிதென்பது இராமன் கருத்து. வானர நாட்டில் வாலியின் தம்பி தன் தமையனுயிர்க்குக் கேடுசூழ்ந்ததை நினைந்து வருந்திய இலக்குவனைத் தேற்றக் கருதிய இராமன் "அத்தா! இதுகேள்,

"எத்தாயர் வயிற்றினும் பின்
பிறந்தார்களெல்லாம்
ஒத்தால் பரதன்
பெரிதுத்தமனுதலுண்டோ"

என்று பரதனது இணையற்ற பண்பினை எடுத்துரைத்தான்.

நீதியின் நிலையமாய பரதன் புகழ் பிறநாடுகளிலும் பரவியிருந்தது. மறைந்து நின்று இராமன் அம்பு விடுத்தமையால் வில்லறம் மாசுற்றதென்று கருதிய வாலி

வாய்மையும் மரபுங்காத்து
மன்னுயிர் துறந்த வள்ளல்
தூயவன் மைந்தனே நீ
பரதன் முன் தோன்றினுயே

என்று மனங்கொதித்துக் கூறுமாற்றல் அவ் வானர மன்னன் பரதனை மதித்த பான்மை நன்கு விளங்குகின்றது.

பெற்ருராயினும் உற்ருராயினும் நெறி திறம்பியோரை வெறுத்து நீக்கும் சீலம் பரதனிடம் சிறந்து விளங்கிற்று. தன்னை ஈன்ற தாய் மன்னனிடம் வரம்பெற்றுத் தவறிழைத்தாள் என்றறிந்தபொழுது பெருஞ்சிற்ற முற்ற பரதன்

நீயினம் இருந்தனை யானும் நின்றனேன்
ஏயெனும் மாத்திரத் தெற்று கிற்றிலேன்
ஆயகன் முனியும் என்றஞ்சினேனலால்
தாயெனும் பெயர் எனைத் தடுக்கற் பாலதோ

என்று கனன்றுரைத்தான். இன்னும் 'படர் எலாம் படைத்தவள்' என்றும், 'பழிவளர்க்கும் செவிலி' என்றும் தன் தாயை உலகறியப் பழித்துரைத்தான்.

இத்தகைய பரதன் பதினன்காண்டு முடிந்ததும் வாக்களித்தவாறு அரசுரிமையை ஏற்றுக்கொள்ள இராமன் வாராமை கண்டு மனம் வருந்தி எரியில் விழுந்து இறக்கத் துணிந்தான். அயோத்தி நகர மயானத்தில் பெருந்தீ வளர்த்து அதனுள்ளே இறங்க விரைந்து சென்ற பரதனைக் கோசலை இடைநின்று தடுத்து,

எண்ணில் கோடி இராமர்கள் என்னினும்
அண்ணல் நின்னருளுக் கருகாவரோ
புண்ணியம் எனும் நின்னுயிர் போயினல்
மண்ணும் வானும் உயிர்களும் வாழுமோ

என்று கண்ணீர் வடித்துக் கதறினள். தாயின் நிலை கண்ட பரதன் இறையளவும் மனந் துளங்காது முன்னமே சூளுரைத்தவாறு உயிர் துறக்கத் துணிந்தான். அந் நிலையில் இராம தூதன் தோன்றி ஐயன் வரவை அறிவித்து ஓங்கியெழுந்த எரியினைக் கையாற்பிசைந்து கரியாக்கினன். பின்பு அரியாசனத்தை அனுமன் தாங்க, அங்கதன் உடைவாளேந்தி அருகே நிற்க, இலக்குவனும் சத்துருக்கனும் கவரிவீச, பரதன் வெண்குடை கவிக்க, திருமகளோடினிதமர்ந்து இருமையும் தரும் பெருமானுகிய இராமன் அரசு செலுத்துவானுயினன். மும்மைசால் உலகுக்கெல்லாம் முதல்வனுகிய இராமன் மணிமுடி தாங்க இசைந்தபொழுது, அரசநீதியின் அடையாளமாகிய வெண்குடையினைக் கவிக்கும் உரிமை, நீதியின் நிலையமாய பரதனுக்கு வாய்த்ததுவும் வியப்பாமோ?

இலட்சுமணன்.

(ராவ் ஸாஹிப். ச. வையாபுரிப் பிள்ளையவர்கள் எழுதியது.)

இராமனோடு உடன் பிறந்தவர்கள் மூவ ரென்பது உலகப் பிரஸித்தம். இராமசரிதம் எழுதிய கம்பர் இம்மூவர் தவிர வேறு மூவரை யும் தன் உடன்பிறந்தோராக இராமன் கொண்டருளினனென்று கூறினர். பிற்கூறிய மூவராவார்: குகன், சுக்கிரீவன், விபீஷணன் என்பார். குகன் வேட்டுவமரபினன்; சுக்கிரீ வன் குரங்கினத்தரசன்; விபீஷணன் அரக்கர் கள் தலைவன். இன்னோருடைய நிலைமைகளை நோக்கும்போது, பிறப்பு முதலிய எவ்வகை வேறுபாடுகளையுங் கருதாது குணமேம்பாடு ஒன்றனையே கருதி இராமபிரான் தோழமை பூண்டருளினனென்பது நன்கு விளங்கும். அவனது ஸௌலப்ய குணம் இங்கே இனிது புலப்படுகின்றது. 'நினைவருங் குணங் கொ டன்றோ இராமன் மேல் நிமிர்ந்த காதல்' என் றனர் கம்பரும். இக்காலத்தே பெருநோக்கா கக் கொள்ளப்படும் 'ஸர்வஜீவ ஸஹோதரத் துவம்' (Universal brotherhood) என் னும் உயரிய கொள்கையைக் கம்பரும் தமது திருமனத்தால் கூர்ந்து உணர்ந்துள்ளாரென் பதை எண்ணுந்தோறும் நாம் பெரிதும் மகிழ்ச்சி கொள்கின்றோம்.

உடன்பிறந்த மூவருள் இலட்சுமணனுக்கே தனித்துரிய சிறப்பொன்று உளது. இவனே தன் காலமனைத்தையும் இராமனோடு உடன் கழித்தவன். பிள்ளைப்பருவ முதற்கொண்டே இருவரும் ஒன்றாக ஓடியாடித் திரிந்தவர்கள். கம்பரும்,

> 'மைதவழ் பொழில்களும் வாவியு மருவி
> செய்குழ லுறுமிழை யெனநிலை திரிவார்'

எனக் கூறுகின்றார். பதினான்கு வருஷகாலம் இருவரும் வனப்பிரதேசங்களில் பகைவருக் கிடையில் அவர்களோடு போராடி வாழ்ந்து வந்திருக்கிறார்கள். இராமன் துன்புற்று வருந் தும் நிலைகளிலெல்லாம் இலட்சுமணனும் உட னிருந்து அத்துன்பத்தில் தானும் உழந்திருக் கின்றான்: எல்லையற்ற இடர்களை யெல்லாம் இருவரும் ஒக்க அனுபவித்திருக்கிறார்கள். இராமன் பொருட்டாகவே இவ்விடர்களை யெல் லாம் இலட்சுமணன் ஏற்றனனே யன்றித் தன் பொருட்டன்று. உத்தம வுடன்பிறப்பிற்கு லட்சியமாகவும் மேல்வரம்பாகவும் இலட்சு மணன் அமைந்துளான் என்பது தெள்ளிது.

உடன்பிறப்பிற்கு உத்தமலட்சியம் நமது பண்டை நூல்களிலே பலவிடங்களிலும் கூறப்பட்டிருக்கிறது.

> அரச னுவாத்தியான் தாய்தந்தை தம்முன்
> நிகரில் குரவரிவ் வைவ ரிவரிவரைத்
> தேவரைப் போலத் தொழுதெழுக வென்பதே
> யாவருங் கண்ட நெறி

என்பது ஆசாரக் கோவை. இங்கே தமை யனை ஐங்குரவருள் ஒருவனாக வைத்தெண்ணு வதும் அவனைத் தெய்வத்தைப் போலத் தொழுது ஒழுகுக என்று கூறுவதும் கவனிக் கத் தக்கன. 'எழுக' என்று செய்யுளில் வந் தது உபலட்சணமாக ஒழுகுதலைக் குறித்தது என்று கொள்ளுகலே தகுதி. இந்த இலட்சி யத்திற்குத் தானும் இணங்க ஒழுகுதல் அரிய தொரு காரியமாம். ஆனால் இலட்சுமணனது ஒழுக்கத்தை நோக்குங்கால் இந்த இலட்சி யத்தையுங் கடந்து சென்று, இதனினும் எட்டு தற்கரியதோர் இலட்சியமாக விளங்குகின் றான்.

இலட்சுமணனது அன்பின் திறத்தை எடுத்துக் கொள்வோம். பொதுவாக ஒருவன் கொள்ளும் அன்பு அவனுக்கு ஏதாவதொரு வகையிற் பயன் விளைக்கத்தக்கதாயிருக்கும். இலட்சுமணனிடம் நாம் காணும் அன்போ இத்தன்மையதன்று. அவனது மனம் இரா மன்மீது கொண்ட அன்பினாலே இழைத்த தென்றே சொல்லத்தக்கது. அன்பிற்கு எல் லையாகிய காதலன் காதலிகளது அன்பே அவ னது அன்போடு ஒப்பிடக்கூடியது. காதல னுக்கும் காதலிக்கும் வாழ்வு ஒன்று. ஒருவ ரின்றி மற்றவரில்லை. ஒருவர் பிரிவு மற்றவர் மரணம். ஒருவர் முன்னிலையில் இருப்பதே மற்றவர்க்கு எல்லையற்ற இன்பம். இக்கருத்து

நீருள வெனினுள மீனும் நீலமும்
பாருள வெனினுள யாவும் பார்ப்புறின்
நாருள தனுவுளாய் நானுஞ் சீதையும்
ஆருள ரெனினுளேம் அருளுவா யென்றான்

என இலட்சுமணன் கூறுவதிலே வெளிப்படு கின்றது.

இவ்வகையான பேரன்பு இராமன் முடி சூடும் பெருநிகழ்ச்சியை ஆவலுடன் எதிர் பார்த்திருந்தது. தந்தையின் வரத்தால் பரதன் முடிசூட, இராமன் காடு செல்கின்றா னென்பதை யுணர்ந்ததும், இப்பேரன்பு முழுதும் ஆற்றவொணாத பெருங்கோபமாக மாறுகின்றது. தந்தையின் முதுமைச் செயலை யெண்ணி யெண்ணி மனங்கொதிக்கின்றது. அரசுசெல்ல வேண்டுந் தாயமுறை ஒழிக்கப் பட்டது ஒருபுறமிருக்க, அவ்வரசுரிமையை இராமனுக்கு முன் ஈந்துவைத்துப் பின் இல்லை யென்ற அநீதி தாங்குதற்கரியதாய் முடிகின்றது. இவ்வநீதிக்குக் காரணமாயிருந்தார் முன்னிலையில் இராமனுக்குக் கொற்ற மௌலி கவித்துப் பார்க்கவேண்டுமென்னும் அவாப் பொங்கி யெழுகின்றது. இங்ஙனமெழுந்த கோபத்திற்கு மாற்று யாது? அன்பே அத் தீயை அவித்தது :

கால்தாக்க நிமிர்ந்து புகைந்து கனன்று பொங்கும்
ஆருக்கன லாற்றுமொ ரஞ்சன மேகமென்ன

இராமன் வந்து சில சில சொல்லிய வளவில்

சீற்றந் துறந்தா னெதிர்நின்று தெரிந்துசெப்பும்
மாற்றந் துறந்தான் மறைநான்கென வாங்கல் செல்லா
நாற்றெண்டிரை வேலியினம்பிதனுணையாலே
ஏற்றந்தொடங்காக் கடலிற்றணிவெய்திநின்றான்

இங்கே அன்பு பணிவாக மாறி அமைந்து நிற்பதைக் காண்கிறோம். காரணமின்றியேயும் ஐயுற்றுக் கனலெழ விழிக்கும்படி இவ்வன்பு செய்யவல்லதென்பது பிறிதோரிடத்து வெளியாகின்றது. பரதன் இராமனைக் கண்டு மீண்டும் அயோத்திக்கு அழைத்துவரச் சேனைகளுடன் செல்கின்றான். காட்டிலும் இராமனைத் தொடர்ந்து துன்புறுத்த அவன் வருகின்றானென ஐயுற்று இலட்சுமணன் வெகுண்டெழுகின்றான். அப்போதும் இராமன் அவனைத் தணிவித்துப் பரதன் குணவிசேஷங்களை யெடுத்துக்கூறி, அவனை ஐயுறுதல் தக்கதன் றென வற்புறுத்துகிறான்.

சேனையர் தருமத்தின் தேவைச் செம்மையின்
ஆணியை யன்னது நினைக்க லாகுமோ?

எனைத்துள மறையவை யியம்பற் பாலன
பனைத்திரள் கரக்கரிப் பரதன் செய்கையே
அனைத்திற மல்லன வல்ல; அன்னது
நினைத்திலை யென்வயி னேய நெஞ்சினால்.

தன்மீது கொண்ட அன்பு காரணமாகவே பரதனை ஐயுறுகின்றானென அவ்விராமன் கொண்டருளினனென்று கம்பர் கூறுவது சிந்திக்கத் தக்கது. இராமனது திருமொழியும் பரதனது அவலமெழுதிய திருமேனியும் இலட்சுமணனை உணர்வுசோரச் செய்து பணிவித்தன.

ஆனால் எரிமலையின் அனற்பிரவாகம் போன்று ஏகதேசமாகப் பொங்கிப் பெருகுவதனோடு மட்டும் அன்பு அமைந்து விடுவதன்று. அன்புக்குரிய தலைவன்மீது இடையறாத சிந்தை: அவனது சுகவாழ்விற்குரியனவற்றை இடைவிடாது ஆராய்ந்து தெளிகை: அங்ஙனம் தெளிந்தவற்றை இடம் வாய்க்குந்தோறும் அன்புதோன்றச் செய்கை: அவனது துக்கத்தைப் பலவழியாலும் தணிக்க முயலுகை: அத்துக்கத்தை மாற்ற முயலுகை: அத்துக்கத்தை அறவே யொழிக்க முயலுகை : இங்ஙனமாக எப்பொழுதும் அவன் நினைவாகவே யிருந்து அவனுக்கு அன்பு வழிபாடாற்றுகையே சிறந்த அன்பிற்குச் சிறந்த அறிகுறியாக வுள்ளது. இலட்சுமணனது வாழ்வு முழுதும் இங்குக் கூறிய செயல்களால் நிரம்பியுள்ளமை இராமகாதையிற் சிறிது பயிற்சியுடையாரும் அறிவர். காளிந்தி நதியைக் கடந்து செல்வதெவ்வாறென்று இராமன் சிந்தித்திருக்குமளவில், இளையோன் மூங்கிற்கழைகளைத் துணித்து மாணைக்கொடியாற் கட்டித் தெப்பம் அமைத்த செய்தி வனம்புகு படலத்திற் கூறப்படுகின்றது. சீதையும் இராமனும் தங்குவதற்கு இலட்சுமணன் சாலை சமைத்த செய்தி சித்திரகூடப் படலத்தில் பதந்தோறும் அன்பு ததும்ப வருணிக்கப்படுகின்றது :

மாய நீங்கிய சிந்தனை மாமறை
தூய பாற்கடல் வைகுந்தம் சொல்லலாம்
ஆய சாலை யரும்பெற லன்பினன்
நேய நெஞ்சின் விருப்பி னிரப்பினன்

மேவு கான மிதிலையர் கோமகள்
பூவின் மெல்லிய பாதமும் போக்தன
தாவி லெம்பிகை சாலை சமைத்தன
யாவை யாது மிலார்க்கியை யாதவே

என்று சிந்தித் திளையவற் பார்த்திரு
குன்று போலக் குவவிய தோளினாய்
என்று கற்றனை நீயிது போலென்றான்
துன்று தாமரைக் கண்பனி சோர்கின்றான்.

இது போன்ற அன்புச் செயல்களுக்குச் சிகரம் வைத்தது போன்ற ஓர் அரிய செய்தி இலட்சுமணனைப் பற்றிக் கூறப்படுகின்றது.

மாலைவாய் நியமஞ் செய்து மரபுளி
யியற்றி வைகல்
வேலைவா யமிர்தன் னாளும் வீரனும்
விரித்த நாணல்
மாலைவாய்ப் பாரின் பாயல் வைகினன்
வரிவி லேந்திக்
காலைவா யளவுந் தம்பி யிமைப்பிலன்
காத்து நின்றான்

இதனை நோக்கிக் கொண்டிருந்த குகன் மனத்திலே என்றும் அழியாத துக்கசித்திரமொன்று பதிந்து விட்டது:

தம்பிநின் றானை நோக்கித் தலைமகன்
தன்மை நோக்கி
அம்பியின் தலைவன் கண்ணீ ரருவிசோர்
குன்றி னின்றான்.

இங்கே குறித்த துக்க சித்திரத்தைத் குகன் பரதனுக்கு உணர்த்துகின்றான்:

அல்லையாண் டமைந்த மேனி யழகனு
மவளுந் துஞ்ச
வில்லையூன் றியகை யோடும் வெய்துயிர்ப்
போடும் வீரன்
கல்லையாண் டுயர்ந்த தோளாய் கண்கணீர்
சொரியக் கங்குல்
எல்லைகாண் பளவு நின்றா னிமைப்பில
னயன மென்றான்.

இதனைக் கேட்ட பரதன் தனது அன்பின்மையையும் இலட்சுமணனது பேரன்பினையும் பின்வருமாறு உளம் நைந்துருகிக் கூறுகின்றான்:

என்பத்தைக் கேட்ட மைந்தன் இராமனுக்
கிளையா ரென்று
முன்பொத்த தோற்றத் தேமில் யானென்று
முடிவி லாத
துன்பத்துக் கேது வானே னவனது
துடைக்க நின்றான்
அன்பத்துக் கெல்லை யுண்டே அழகிதென்
னடிமை யென்றான்.

இங்ஙனம் இலட்சுமணன் கண் இமையாது இரவிற் காத்து வந்தது ஒருநாள் இருநாளன்று; பதினான்கு வருஷகாலமும் இவ்வாறு காத்தனனென்பது சரித்திரம். ‘துஞ்சலில் நயனத்தைய’ (விபீஷணன் 144) என்பதுபோன்ற தொடர்களால் இச்செய்தியைப் பலவிடங்களிலும் கம்பர் உணர்த்துவர். இக்காலத்தும் ‘உறங்காவில்லி’ என்ற பெயர் இவ்வரிய செயலையே புலப்படுத்துகின்றது. இலட்சுமணனது இடையறாத அன்புப் பணிவிடைக்கு இப்பெயரைக் காட்டிலும் சிறந்ததோர் குறியீடு இல்லை. இத்தகைய அன்பினை நாம் என்னென்று கூறுவது? ‘அன்பத்துக் கெல்லையுண்டே’ என அதிசயித்து நாமும் கனிந்துருகுவதல்லது, பொருள்களை அளந்தறியும் சாமானிய அறிவினால் ஒன்றும் அறியமாட்டாதவர்களாகின்றோம்.

இப்பேரன்பு இணையற்ற பெருவீரனொருவனிடத்தேதான் தோன்றுதல் இயல்பு. இலட்சுமணன் இத்தகைய பெருவீரனென்பது சொல்ல வேண்டா. இவனது வில்லின் டங்கார வோசையைக் கேட்டு இராவணனும் இவனொரு மனிதனுவென்று ஆச்சரியமெய்தித் தன் மகுடத்தை ஏற்றினனென்று சொல்லப்படுகிறது. இவனோடு விற்போர் செய்து சலித்து ‘வில்லினா லிவன் வெலப்படான்’ என்று தெரிந்து இராவணன் வேறு வகைப் போர் செய்யத் தொடங்கினமையும் சொல்லப்படுகிறது. மயங்கிக் கிடந்தவனை யெடுக்கப் புகுந்த இராவணன் வெள்ளியங் கிரியை யெடுத்தற்கு அவன் பட்டபாடெல்லாம் பட்டானென்றும், அப்படி முயன்றும் அவனை

யெடுத்தற்கு முடியவில்லையென்றும் தெரிகின்றோம். இராவணனது போர்வீரர்களுள்ளே தலைசிறந்து விளங்கியவனாகிய இந்திரசித்தையும் இலட்சுமணன் போரில் வென்று அழித்தானென்றால், இவன் ஒப்புயர்வற்ற பெருவீரனென்பதிற் சிறிதும் ஐயமுண்டோ?

இலட்சுமணனிடத்தே நிறைந்து விளங்கிய இவ்வீரமானது இவனது அன்பிற்கு ஒரு காம்பீர்யத்தைக் கொடுத்து நம்மை மகிழச் செய்கின்றது. அச்சமென்பது இவன் அறியாத வொரு பொருள். தனது முன்னோனாகிய இராமனுக்கும் அஞ்சான். ஆகவே, இவன் துணிந்து சில உறுதிமொழிகளை இராமனுக்குக் கூறுகின்றான். மாயமானைப் பின் தொடர்ந்து செல்லுதல் தக்கதன்றென உரைக்கின்றான். வாலி சுக்கிரீவ யுத்தம் 'குரங்கின் எள்ளற் கரும்போர்'; அதில் தலையிடுதல் தக்கதன்றெனக் குறிப்பிக்கின்றான். இராமன் தளர்ச்சியுற்று வருந்துங்காலங்களில் ஊக்கம் அளிக்கின்றான். சீதையைத் தேடிக்காணும் முயற்சியே எப்பொழுதும் கைக்கொள்ளலாவதென்கின்றான். அவள் பொருட்டுப் புலம்பி நாட்கழித்தல் தம்போன்ற வீரருக்குத் தக்கதன்றென உணர்த்துகின்றான். தமிழிலே துணைவன் என்ற சொல்லுக்கு 'உடன்பிறந்தவன்' என்ற பொருளோடு 'மந்திரி' என்ற பொருளும் உண்டு. இவ்விரு பொருளுக்கும் உரியவனாக இலட்சுமணன் விளங்குகின்றான். தம்பித் துணைவனாகவும் மந்திரித் துணைவனாகவும் இவன் இராமனுக்குப் பணிபுரிந்தானென்பது நாம் அறியத்தக்கது.

மந்திரித் துணைவனா யுதவும்போது இராமன் நினைத்ததையே நினையாதபடி, தனக்கெனத் தனிப்பாங்கொன்று உண்டென நினைத்து விஷயங்களை ஆராய்ந்தறிந்தது போல, தன்னை வீரனாக நினைத்தமாத்திரத்தில், தனக்கெனத் தனிப்பாங்கொன்று உண்டு என்பதனை நன்குணர்ந்தவன். தன்னோடொத்த வீரர்கள் யாருமில்லை யென்பதை நன்கு தெரிந்தவன். இவன் பலவிடங்களிலும் கூறும் வீரவசனங்களால் இதை நாம் அறியலாம். இவ்வசனங்களால் இவனைத் தற்பெருமைக்காரன் என்று எண்ணுதல் தக்கதன்று. வீரத்தின் விளைவே இவ்வாசகங்களென்று நாம் உணர்தல் வேண்டும்.

அன்புச் செயல்களுக்குச் சிகரமாக இவன் இமைகொட்டாது ஆற்றிய காவற் பணிவிடையைக் கூறினேன். இவனது வீரச்செயல்களுக்குச் சிகரமாக இந்திரசித்தின் தலை துமித்ததைக் கூறல் வேண்டும். வில்லாளரானார்க்கெல்லாம் மேலவனாகிய இராவணியின் தலை இலட்சுமணன் அம்பினால் வெட்டுற்று வீழ்ந்தது. அங்கதன் அத்தலையைக் கையிலெடுத்து முன் செல்ல, அநுமான்மீது ஆரோகணித்து இலட்சுமணன் செல்கின்றான். தேவர்கள் சொரிந்த பூமாரி பந்தராக அமைந்தது. தம்பி வெற்றியுடன் மீண்டு வரவேண்டுமே யென்று கவலையுடன் தருமத்தைப் பிரார்த்திக்கொண்டிருந்த இராமன்

விரதம்பூண் டயிரி னோடுந் தன்னுடை
  மீட்சி நோக்கும்
பரதன் போன் றிருந்தான் தம்பி வருகின்ற
  பரிசைப் பார்த்தான்

அவனுடைய திருநயனங்கள் அருவிமாரி பொழிந்தன.

வன்புலங் கடிந்து மீளுந்
  தம்பிமேல் வைத்த மாலைத்
தன்புல நயன மென்னுந்
  தாமரை சொரியுந் தாரை
அன்புகொல் அழுக ணீர்கொல்
  ஆனந்த வாரியே கொல்
என்புக ளுருகிச் சோருங்
  கருணைகொல் யார தோர்வார்.

இராமன் திருமுன்பிலே இராவணியின் சிரம் அடியுறையாக வைக்கப்படுகின்றது. அப்பொழுது இராமனது பார்வையில் தோன்றிய திருக்குறிப்பே இலட்சுமணனது வீரச் செயலுக்கு ஏற்ற பரிசாக அமைந்தது.

தலையினை நோக்குந் தம்பி
  கொற்றவை தழீஇய பொற்றோள்
மலையினை நோக்கும நின்ற
  மாருதி வலியை நோக்கும்
சிலையினை நோக்கும் தேவர்
  செய்கையை நோக்கும் செய்த
கொலையினை நோக்கும் ஒன்று முறைத்திலன்
  களிப்புட் கொண்டான்.

இராமனுக்கு இத்தகைய பெருங்களிப்பு நல்கிய பெருவீரன் அவனை ஈன்றெடுத்த சுமித்திரா தேவிக்கு எத்தனை யினியன் என்பதைக் கூறவும் வேண்டுமோ? தன் அருமைப் புதல்வன் இராமனோடும் சீதையோடுங் கானகஞ் செல்லுதற்கு விடை பெற வந்தபொழுது அவள் கூறியது ஞாபகமிருக்கலாம்.

ஆகாத தன்றா லுனக் கவ்வன மிவ்வயோத்தி
மாகாத விராமனம் மன்னவன் வைய மீந்தும்
போகா வுயிர்த்தாயர் பூங்குழற் சீதை யென்றே
ஏகா யினியிவ்வயி னிற்றலும் ஏதமென்றாள்.

பின்னும் பகர்வாள், 'மகனே,
யிவன் பின்செல் தம்பி
யென்னும் படியன்று; அடியாரினில்
ஏவல் செய்தி;
மன்னும் நகர்க்கே யிவன்
வந்திடின் வா; அதன்றேல்
முன்னம் முடி' யென்றனள்
பான்முலை சோர நின்றாள்.

இக் கட்டளைகளிலே சிறிதும் வழுவாதபடி யொழுகிய பெருந்தகையே பெருந்தகை. இராமனுக்கு யாரினுமினிய பேரன்பினனாகவும், உலகோர்க்கு அறந் தலையெடுக்கச் செய்த பெருவீரனாகவும், தாய் சொற் கடவாத தனிப் பெருங் கடமை பூண்டோனாகவும் விளங்குபவன் இலட்சுமணன். இவன் புகழ் நம்மால் என்றும் போற்றப்படுவதாக.

சத்துருக்கன்.

இராமபிரானது தம்பியர் அறுவருள் இயற்கைத் தம்பியர் மூவர், செயற்கைத் தம்பியர் மூவர்; இயற்கைத் தம்பியருள் இளையோனும் செயற்கைத் தம்பியருக்கும் தம்பியாய் அறுவருக்கும் தம்பி என்னும் சிறப்புப் பெற்றவன் சத்துருக்கன்; எல்லோருக்கும் பணிவிடை செய்யும் பாக்கியம் பெறுவதற்கென்றே தசரதச் சக்கரவர்த்தி பெற்றெடுத்த பிள்ளை; மற்றை மூன்று இராகவர்களும் புதல்வரை வேண்டிய தத் தமது அன்னையருக்குப் புதல்வராகப் பிறந்தனர்; இவர்களுக்கு அமிர்தத்தைப் பகிர்ந்தளித்த தசரத மன்னன் "பிதிர்ந்து வீழ்ந்ததுதன்னையும் சுமித்திரை தனக்கு நல்கினன்". இதுவே மூன்று தமையன்மாருக்கும் சத்துருக்கன் அடியானாகும் பேறு பெறுவதற்குக் காரணமாய் அமைந்தது. இராமபிரானது செயற்கைத் தம்பியரும் இம் மூன்று சகோதரர்களின் இணைகளானார்கள்; சுக்கிரீவன் வேறு இராமன் வேறு என்று இல்லை; இளையவற் கவித்த மௌலியை விரும்பிய விபீஷணனும் பரதனுக்கு நிகரானன். இலட்சுமணனுக்குத் துணையாகக் கருதுதற்குரியவன் குகனேயன்றோ? இவ்வாறு 'மூன்றிரட்டிய' அண்ணன்மார்களைப் படைத்த பெருமையாலன்றோ இவன் 'இலவணாசுரன் முதலிய சத்துருக்களைக் களைந்தெறிந்து வா' என்று ஏவப்பட்டான். இதனை யுட்கொண்டும் இவன் பிறந்தபோதே ஒன்னலர்க்கு இடமும் வேறு உயிர்களுக்கெல்லாம் வலமும் துள்ளுவதைக்கண்டும் இவனுக்குச் சத்துருக்கனென்று பெயரிட்டனர் வசிஷ்ட முனிவர். சத்துருக்களை வெல்லும் இவனது வீரம் கௌசிகமுனிவராலும் பாராட்டப் பெற்றது; மிதிலைமன்னனுக்கு கோசல மன்னரின் குலமுறையைக் கிளத்தும் அம் முனிவர், வீரத்தாலும் வேறு எத்தாலும் இலக்குவனுக்குச் சத்துருக்கன் இளைத்தவனல்லன் என்பது தோன்ற,

அருவலிய திறலினராய் அறங்கெடுக்கும்
விறலரக்கர்
வெருவருதிண் டிறலார்கள் வில்லேந்து
மெனிற் செம்பொற்
பருவரையு நெடு வெள்ளிப் பருப்பதமும்
போல்வார்கள்
இருவரையு மிவ்விருவர்க் கிளையாளு மீன்
றெடுத்தாள்

என்று சுமித்திராதேவி பெற்ற பேறுகளைப் பேசுகிறார்.

பிறந்தது முதலே, தம்பி எப்படி நடந்து கொள்ள வேண்டுமென்பதற்குச் சிறந்த வழி காட்டி சத்துருக்கனுக்குக் கிடைத்தது. இலட்சுமணனோடு பத்து மாதம் ஒரு குடலில் உறைந்த பலன் அது; அதனாலேயே சத்துருக்கனும் பரதனை, இராமனை இலட்சுமணன் போலவே, ஒரு நொடிப்பொழுதும் பிரியாது 'இரதமும் இவுளியும் இவரினும், மறைநூலுரைதரு பொழுதினும் ஒழிகிலாது' ஒழிவில் காலமெல்லாம் உடனாக மன்னி அழிவிலா அடிமை செய்து வந்தான். பரதசத்துருக்கனர்களுக்கு இராம ராமானுசர்கள் வழிகாட்டிகள் ஆனார்கள் என்பதை விளக்கவே, சீதாகல்யாணத்திற்கு அயோத்தியினின்று செல்லும் திருக்கூட்டத்திலே பரதசத்துருக்கனர்கள் வசிஷ்ட முனிவருக்குப் பின் செல்வோராய்,

திருவளர் மார்பர் தெய்வச்சிலையினர்
 தோர் வீரர்
இருவரும் முனிபின்போன
 இருவருமென்னப் போனார்

என்று கம்பரால் பாடப்பெற்றனர். தம்பி நடக்கவேண்டிய முறையைக் கற்பிப்பதிலே இலட்சுமணனோடு பரதனும் சத்துருக்கனுக்கு வழிகாட்டியானான். இவர்கள் மிதிலை சென்றதும், பரதன் இராமனை வணங்க, இவன் இலட்சுமணனை வணங்கினான் என்று கம்பர் பாடுவதும் இதனையே.

பொருவருங் குமரர்தம் புனைநறுங்குஞ்சியால்
இருவர்பைங்கழலும் வந்திருவரும் வருடினர்.

ஆயினும் காலக்கிரமத்திலே இவன் பரதனையும் வென்றுவிட்டான் என்பது கம்பரது திருவுள்ளம். 'மன் முன்னே தழுவிக்கொண்ட மனக்கினிய துணைவ'னான குகனைக் காண்பதற்குப் பரதனுடைய காதல் எழுந்தது; அதற்கு முன்பே சத்துருக்கன் எழுந்து விட்டான், குகனைக்காண' என்பர் கம்பர்,

என்றெழுந்த தம்பியொடும்
எழுகின்ற காதலொடும்

என்னும் அடியிலே. கிளைகண்டு நீங்கு படலத்திலும் இவ்வாறே,

நிமிர்ந்த சேனையைப்
பின்தருகென்று தன்பிரிவில் காதலில்
தன் துணைத்தம்பியும் தானும் முந்தினான்

என்று தம்பியை முன் வைத்துப் பாடுகிறார்.

துன்பத்துக்கெல்லாம் காரணமாயிருந்த கூனியைக் கண்டபோது சத்துருக்கன் 'ஓடி ஆர்த்து அந்தரத்து எற்றுதற்கு அவளைப் பற்றினான்; அச்செயல் அவன் இலக்குவனது தம்பியாதலை விளக்கிற்று. ஒரு பெண் கொடியை வதைசெய்தான்' என்று தன்னை இராமன் இகழ்வான் என்று பரதன் விளக்கிய பின்னரே, அவனுடைய சீற்றம் தணிந்தது. இலக்குவனைப்போல அண்ணனருகிலே நின்று இவன் பணிசெய்வதைக் கண்டன்றோ குகன் 'என் பெருமான் பின்பிறந்தார் இழைப்பரோ பிழைப்பு' என்றான்?

இராவணி மாயா சீதையை மாய்த்து பரத சத்துருக்கனர் மேற் சென்றதைக் கேட்ட இராமன் தன் தீவினையை நொந்து 'தாதைக்கும் சடாயுவான தந்தைக்கும் தமியளாய சீதைக்கும் கூற்றங்காட்டியதோடு தவிராது பிழைப்பிலாத காதற் றம்பியர்க்கும் கூற்றம் காட்டுவனோ இவ்விந்திரசித்து' என்று அஞ்சினான் என்று வருணித்து பரதனோடு ஒப்ப சத்துருக்கனுடைய தூய்மையையும் அவனிடம் இராமனுக்கிருந்த சகோதர வாஞ்சையையும் விளக்குகிறார் கம்பர்.

அன்னை கைகேசி செய்த தீமையால் அரசன் தன்னையும் துறந்தான் என்று கேட்டபோது, என்றும் எப்பொழுதும் தன்னைத் துறவாத தம்பி யொருவன் தன்னருகே இருந்ததாலன்றோ பரதன் உயிர் துறக்கவில்லை; இவ்வாறு தன் துணைவனது இன்னுயிரைக் காத்த சத்துருக்கன், பரதன் உயிர் நீத்தால் உடன் உயிர் நீப்பதென்று துணிந்தான். இது அவனுக்குப் பிறவிக்குணமாக அமைந்தது.

'முத்துருக் கொண்டு செம்முளரி அலர்ந்தாலொத்திருக்கும் எழிலுடைய ஒளியால்

எத்திருக்கும் கெடும்' என்று கண்ட வசிஷ்ட முனிவரால் சத்துருக்கன் என்று பெயரிடப் பெற்றவன் அப்பெயரைப் பொருளுடைய தாக்கிச் சொன்ன உரை எது என்பதை 'முத்துருக் கொண்டமைந்தனைய முழு வெள்ளிக் கொழுநிறத்து முளரிச் செங்கட் சத்துருக்கன் அஃது உரைப்ப' என்னும் தொடரால் கம்பர் விளக்குகிறார். பதினான்கு ஆண்டு கழிந்தும் இராமபிரான் வாராததைக் கண்ட பரதன் சத்துருக்கனை நோக்கி

'மின்னு தீயிடையானினி வீடுவேன்;
மன்னுதி; என்சொல்லை மறுது'

என்றான். அதைக்கேட்டதும் தனுக்குற்றுச் செவிபொத்தி நஞ்ச முண்டவன்போல் நாட்டமும் மனமும் நடுநடுங்க வெய்துயிர்த்துப் பரதனை நோக்கி "நான் உனக்கென்ன பிழை செய்தேன்" என்று அரற்றினான் சத்துருக்கன்.

கானாள நிலமகளைக் கைவிட்டுப்
போவானைக் காத்துப் பின்பு
போனானுமொரு தம்பி; போனவர்கள்
வருமவதி போயிற் றென்று
ஆனதவுயிர்விட வென்றமைவானும்
ஒருதம்பி; அயலே நானுதி
யானுமிவ்வரசாள்வென் என்னே
இவ்வரசாட்சி யினிதே யம்மா

என்ற உரைதான் அச்சிரிய உரை. பின்னும் அவன் பரதனை நோக்கி,

மன்னிற் பின் வள நகரம் புக்கிருந்து
வாழ்ந்தானே பரதனென்னும்
சொன்னிற்கு மென்றஞ்சிப் புறத்திருந்து
மருந்தவமே தொடங்கினையே
யென்னிற்பின் னிவனுளனு மென்றே
பின்னடிமை யுனக்கிருந் தேனும்
உன்னிற் பின்னிருந்ததுவு மொருகுடைக்
கீழிருப்பதுவு மொக்கு மென்றான்.

இவ்வாறு சத்துருக்கன் சொல்லக் கேட்ட பரதன் 'நீயும் என்னுடன் எரிபுகலாம்' என்று அனுமதிப்பானாய், "நான் இங்கு இருத்தலாலன்றோ இராமன் தாழ்க்கின்றான்; நான் உலந்தால், பின் இவ்வுலகை உலையவொட்டான்; எத் திருக்கும் கெடும்; அவன் அரசாள வருவான்; ஆதலால் நீ எரி அமைப்பாயாக" என்றான். 'பரதனோடு சத்துருக்கன் எரி வீழ்வதைத் தடுத்தன அனுமான் சொல்லும் அவன் காட்டிய மோதிரமும்' என்று உணர்த்தும் கம்பர், அம் மோதிரமானது

ஊட்டியநன் மருந்தொத்த தாமரோ
ஈட்டிய வுலகர்க்குமிளைய வேந்தர்க்கும்

என்று பாடுகிறார். பின்பு இராமன் இலட்சுமணன் சீதை முதலானோர் புஷ்பக விமானத்தினின்றும் இறங்கியதும்,

மூவர்க்கும் இளைய வள்ளல்
முடிமிசை முகிழ்த்த கையன்
பூவர்க்கம் பொழிந்து வீழ்ந்தான்,
எடுத்தனர் பொருந்தப் புல்லி,
வாவிக்குளன்ன மன்னாள்
மலரடித் தலத்து வீழ்ந்தான்.

தம்பியாக்கப்பட்ட குகனை சத்துருக்கன் முன்பே அறிவான்; பரதனையும் தன்னையும் போலவே அவனும் நாடுறைந்துலைந்த மெய்யனாய் நின்றான்; கானஞ்சென்று பெற்ற தம்பிகளை இராமன் பரத சத்துருக்கனருக்கு அறிமுகப்படுத்தினான். அந்த ஸமாகமத்தைக் கண்டு எல்லோரும் வியந்தார்கள்.

காடுறைந் துலந்த மெய்யோ
கையறு கவலைகூர
நாடுறைந் துலந்த மெய்யோ
நைந்ததென் றுலகம்நைய

இராம நம்பி ஆறு தம்பிகளோடும் நந்தியம் பதிக்குச் சென்று 'கோசலை குளிர் பொற் பாதம் தம்பியரோடும் தாழ்ந்தான்'. தாழவே, ஒருவனைப் பெற்றபொழுதினும், கோசலை எழுமடங்கு அதிகமாக உவகை பூத்தனள், ஏழுவரைப் பெற்ற பாக்கியத்தாலே.

குகப் பெருமாள்.

(ஸ்ரீ. V. வேங்கடராஜுலு ரெட்டியாரவர்கள் எழுதியது.)

திருமாலின் அவதாரம் பத்தனுள் இராமாவதாரம் கிருஷ்ணாவதாரம் இவ்விரண்டே மிக்க சிறப்புடையன என்பது ஆன்றோர்கொள்கை. மாந்தர் பெற்றோரிடத்தும் உடன்பிறந்தாரிடத்தும் மனைவியிடத்தும் நண்பினரிடத்தும் ஒழுகுதற்குரிய சாமானிய தருமத்தை, இராமர் தமது வாழ்க்கையில் ஒழுகி உலகிற்கு அறிவித்தார் என்பர். [1]'பித்ருவசன பரிபாலனாதிகளாலே ஸாமான்ய தருமத்தை அனுஷ்டித்தார் பெருமாள்' என்பதனால் இவ்வுண்மை அறியலாகும். இராமர் அத்தகையராகலானே நண்பரை உடன்பிறந்தாராகக் கொண்டு ஒழுகினார். அவ்வாறு உடன்பிறந்தாராக அவரால் கொள்ளப்பட்ட நண்பினர் மூவர். அவர், குகன் சுக்ரீவன் விபீடணன் என்பவர். அவரை, முறையே குகப்பெருமாள் மஹாராஜர் விபீஷணாழ்வார் என்று வழங்குவது வைஷ்ணவமரபு. ஈண்டு, குகனைப் பற்றிச் சிறிது நோக்குவோம்:

குகன் கங்கைக் கரையினதாகிய சிருங்கிபேரம் என்னும் ஊரில் வாழ்ந்தவன்; வேடுவர்களுக்குத் தலைவன்; விற்போரில் வல்லவன்; வீரம் மிக்கவன். [2]அவன் கங்கைக் கரையில் இராமர் வந்திருத்தலை யறிந்து அவரைக் காணச் சென்றான். சென்றவன், தன் சுற்றத்தாரைப் புறத்தே நிறுத்தி, வில்லுங் கணையுந் துறந்து, வாளை ஒழித்து, இராமரிருந்த தவப்பள்ளியின் வாயிலை அடைந்தான்; அங்கு இலக்குவனிடம் தன் வரவினை அறிவித்தான். இலக்குவன் இராமரது கட்டளையைப் பெற்றுக் குகனை அழைத்துச் சென்றான்.[3] குகன் இராமரைக் கண்டு, பார்மேல் வீழ்ந்து வணங்கி, தான் கையுறையாகக் கொண்டுபோன தேனும் மீனும்[4] அமுது செய்தருளுமாறு வேண்டினான். இராமர், 'உள்ளன்போடு கொணர்ந்தவை அமிர்தினுஞ் சிறந்தவையாகும்; ஆயினும், யாம் இப்பொழுதே உண்டேதாமாகலின் இவற்றை உண்ணுதற்கு இயலவில்லை' என்று அன்புரை கூறி, 'நீ நாளைக் காலையில் நாவாயோடு வருதி' என்றார். அது கேட்ட குகன், 'அடியேன் தேவரீரைப் பிரியகில்லேன்' என்றான். இராமர் அவனது அன்பின் பெருக்கினை யறிந்து அங்கே இருக்குமாறு பணித்தார்.

பின்பு இரவில், இராமரும் சீதையும் துயில்கையில் இலக்குவன் புறத்தே நின்று உறங்காமல் காத்திருந்தான். குகனும் அங்குநின்று அகலாமற் காவல் செய்தான். மறுநாட் காலையில் இராமர் நாவாய் கொணருமாறு கூற, குகன் அவரை வணங்கி, 'ஐய, இங்குத் தங்கட்கு வேண்டும் பொருள்களெல்லாம் உள்ளன.

தேனுள திணைஉண்டால் தேவரும் நுகர்தற்காம்
ஊனுள துணைநாயேம் உயிருள விளையாடக்
கானுள புனலாடக் கங்கையும் உளதன்றோ?

தோலுள துகில்போலுஞ் சுவைஉள தொடர்மஞ்சம்
போலுள பரண்வைகும் புரையுள கடிதோடுங்
காலுள சிலைபூணுங் கையுள கலிவானின்
மேலுள பொருளேனும் விரைவொடு கொணர்வேமால்.

---

1. கண்ணிநுண் சிறுத்தாம்பு ப்ரவேசம்.

2. குகன் இராமருக்கு ஆருயிர் நண்பன் என்பது வால்மீகத்தால் அறியப்படுகின்றது. 'தத்ர ராஜா குஹோ நாம ராமஸ்யாத்மஸம: ஸகா' (அயோத்யா. 50: 32.) வேட்டை முதலியவற்றால் நட்பு உண்டாயிற்று என்பது கோவிந்தராஜீயம்.

3. குகன் வருதலை யறிந்து இராமர் இலக்குவனோடு எதிர்சென்று அவனை அடைந்தார் என்பது வால்மீகம்.

'ததோ நிஷாதாதிபதிம் த்ருஷ்ட்வா தூராதுபஸ்த்திதம்
ஸஹ ஸௌமித்ரிணா ராம: ஸமாகச்சத் குஹேன ஸ:' (அயோத். 50: 34)

4. மாம்ஸம் முதலியவற்றால் பலவகை உணவு என்பது கோவிந்தராஜீயம்.

ஆகலின், அடியேன் உயிர்வாழ்ந்திருக்குமளவும் எம்மூரில் தங்கியிருத்தல் வேண்டும்' என்று வேண்டினான். இராமர் 'யாம் தீர்த்தங்களில் நீராடித் தவம்புரிய வந்துளேம்; குறித்த காலம் கடந்தபின் மீண்டு வருங்கால் நின்பால் வருவேம்' என, அவர்கருத்தினையறிந்த குகன் நாவாய் தருவித்தான். இராமர் முதலியோர் அதில் ஏறினர். [5]குகன் அதனைச் செலுத்தினான். தென்கரை அடைந்ததும், இராமர் சித்திரகூடத்துக்கு வழி வினவினர். குகன் தானும் உடன்செல்ல விழைந்து, இராமரிடம் அனுமதி வேண்டினான். அவனது அன்பின் பெருக்கினை அறிந்த இராமர்,

என்னுயி ரனையாய்நீ இளவலுன் இளையான் இந்
நன்னுத லவள்நின்கேள் நளிர்கட லிலமெல்லாம்
உன்னுடை யதுநானுன் றொழிலுரி மையிலுள்
ளேன்.

துன்புள தெனினன்றோ சுகமுள ததுவன்றிப்
பின்புள திடைமன்னும் பிரிவுள தெனவுன்னேல்
முன்புளெம் ஒருநால்வேம் முடிவுள தெனவன்னா
அன்புள இனிநாமோர் ஐவர்க ளுளரானோம்.

அங்துள கிளைகாவற் கமைதியி னுளனும்பி
இங்துள கிளைகாவற் கியாருள ருரைசெய்யாய்
உன்கிளை எனதன்றே உறுதுய றுறலாமோ
என்கிளை இதுகாஎன் னேவலின் இனிது'

என்று கூறினர். அவர் கட்டளைப்படி குகன் தன்னூருக்கு மீண்டான்.

இராமர் குகனைத் தம்மோடுடன்பிறந்தானாகக் கொண்ட செய்தி கம்பராமாயணத்திற் பலவிடங்களிற் கூறப்பட்டுளது. இராமர் தம்மை யடைந்த விபீடணனை நோக்கிக் கூறுமிடத்து, [1]குகனொடும் ஐவ ரானோம் முன்பு' என்று தெரிவித்துள்ளார். பரதன் கோசலைக்குக் குகனைக் காட்டி அறிவிக்குமிடத்து,

'இன்றுணைவன் இராகவனுக் கிலக்குவற்கு
மிளையவற்கும் எனக்கும் மூத்தான்
குன்றனைய திருநெடுந்தோட்
குகனென்பான் இந்நின்ற குரிசில்'

என்று உரைத்தான். அது கேட்ட கோசலை,

'நைவீரலீர் மைந்தீர் இனித்துயரால்
நாடிறந்து காடு நோக்கி
மெய்வீரர் பெயர்ந்ததுவும் நலமாயிற்
றுமன்றே விலங்கற் றிண்டோட்
கைவீரக் களிறனைய காளையிவன்
றன்னோடு கலந்து நீங்கள்
ஐவீரு மொருவீராய் அகலிடத்தை
நெடுங்காலம் அளித்திர்'

என்று அன்பு ததும்பக் கூறினர். சீதாபிராட்டியார் சிறையிலிருக்கும்பொழுது இராமரது குணங்களையும் செயல்களையும் நினைந்து வருந்துகையில்,

'ஆழ நீர்க்கங்கை அம்பி கடாவிய
ஏழை வேடனுக் கெம்பிநின் றம்பிநீ
தோழன் மங்கை கொழுந்தி எனச்சொன்ன
ஆழி நண்பினை உன்னி'

அழுங்கினர். இவற்றால், இராமர் குகனிடம் கொண்ட உறவினை அவருடன்பிறந்தாரும் தாயாரும் தேவியும் ஏற்றுக் கொண்டமை அறியப்படும்.

ஆயின், இச் செய்தி வால்மீக ராமாயணத்தில் இல்லாததனால், கம்பர் தாமே புதிதாக அமைத்துக்கொண்டதாகும் எனின், அன்று. கம்பர்காலத்திற்குச் சில நூற்றாண்டுகட்கு முன் வாழ்ந்திருந்த ஆழ்வார்கள் இச்செய்தியை அருளிச் செய்துள்ளனர். திருமங்கையாழ்வார்,

[6]ஏழை ஏதலன் கீழ்மகன் என்னா
திரங்கி மற்றவற் கின்னருள் சுரந்து
மாழை மான்மட நோக்கிஉன் தோழி
உம்பி எம்பிஎன் றொழிந்திலை உகந்து
தோழன் நீஎனக் கிங்கொழி என்ற
சொற்கள் வந்தடி யேன்மனத் திருந்திட
ஆழி வண்ணநின் னடியிணை யடைந்தேன்
அணிபொ ழிற்றிரு வரங்கத்தம் மானே'

என்னும் பாசுரத்தில் விரிவாக அருளிச் செய்திருப்பது காண்க. பெரியாழ்வார்,

---

5. குகன் படகு செலுத்துமாறு தன் சுற்றத்தாரை ஏவினான் என்பது வால்மீகம்.
'அதாருரோஹ தேஜஸ்வீ ஸ்வயம் லக்ஷ்மணபூர்வஜ:
ததோ நிஷாதாதிபதிர் குஹோ ஜ்ஞாதீநசோதயத். (அயோத். 52: 77.)

6. பெரிய திருமொழி. 5. 8: 1

7'தேரணிந்த அயோத்தியர்கோன்
  பெருந்தேவீ கேட்டருளாய்
கூரணிந்த வேல்வலவன்
  குகனோடுங் கங்கைதன்னிற்
சீரணிந்த தோழமை
  கொண்டதுமோ ரடையாளம்'

என்னும் பாசுரத்திற் சுருங்க அருளிச் செய்துள்ளார். திருமங்கையாழ்வார் பாசுரத்தை யுட்கொண்டே கம்பநாடர்

'என்னுயி ரனையாய்நீ இளவலுன் இளையான்இந்
நன்னுத லவள்நின்கேள்'

என்று கூறினராவர். அன்றியும், பிராட்டி கூற்றாயுள்ள செய்யுளில், 'ஏழை வேடன்' என்றதும் இவர் (திருமங்கையாழ்வார்) பாசுரத்திலுள்ள 'ஏழை......கீழ்மகன்' என்றதனை நோக்கியதாகும்.

அழகியமணவாளப் பெருமாள் நாயனார், 'கீழ்மகன், தலைமகனுக்கு ஸமஸகாவாய், தம்பிக்கு முன்பிறந்து, வேலும் வில்லுங்கொண்டு பின்பிறந்தாரைச் சோதித்துத் தமையனுக்கு இளையோன் ஸத்பாவஞ் சொல்லும்படி ஏக குலமானமையும்'[8] என்று அருளிச்செய்திருப்பது இங்கு நினைக்கத்தகும். [கீழ்மகன்—குகன். தம்பி—இலக்குவன். 'உம்பி எம்பி' என்று பெருமாள் அருளிச்செய்ததனால் குகன் இலக்குவனுக்கு மூத்தவனாவானாகலின் 'தம்பிக்கு முன்பிறந்து' என்றார். தமையன்—இலக்குவனுக்கு மூத்தவனாகிய பரதன். இளையோன்—இலக்குவன்.]

இக்கூறியவற்றால், கம்பராமாயணத்திற் கூறப்பட்டுள்ள செய்தி ஆழ்வார் ஆசார்யர்களால் அருளிச்செய்யப் பட்டது அறியப்படும்.

ஆயின், [9]இழிந்தானோடு நட்புச் செய்தலும் கூடாது என்பது அறநூற் கொள்கையாயிருப்ப, இராமர் குகனைத் தம் உடன்பிறந்தானாகக் கொண்டது அறமாகாதன்றோ எனின், அன்று என்பது ஆன்றோர்கொள்கை. 'ஆசார்யஹ்ருதய' த்தினின்று மேற்காட்டிய வாக்கியம் முழுவதும்[10] அறிதற்பாலது. அன்றியும், 'அஜ்ஞர் ப்ரமிக்கிற வர்ணாச்ரம வித்யா வ்ருத்தங்களைக் கர்த்தப ஜன்மம் ஸ்வபசாதமம் சில்பநைபுணம் பஸ்மாஹுதி சவவிதவாலங்காரம் என்று கழிப்பர்கள்' என்று 'ஆசார்யஹ்ருதயம்' கூறியிருப்பதுவும் எண்ணத்தகும்.

---

7. பெரியாழ்வார். 3. 10: 3

8. ஆசார்யஹ்ருதயம். 1: 85

9. இராமர் இழிந்தவனான குகனோடு நட்பு கொண்டது தகுமா என்னும் வினாவிற்குக் கோவிந்தராஜர்,

'நசூத்ரா பகவத் பக்தா விப்ரா பாகவதா: ஸ்ம்ருதா:
ஸர்வவர்ணேஷு தேசூத்ரா யேஹ்யபக்தா ஜநார்த்தனே'

என்னுஞ் சுலோகத்தைக் காட்டிக் கூறியிருக்குஞ் சமாதானம் நோக்கத்தக்கது.

10. 'ம்லேச்சனும் பக்தனானல் சதுர்வேதிகள் அநுவர்த்திக்க அறிவுகொடுத்துக் குலதெய்வத்தோடொக்கப் பூஜைகொண்டு பாவனதீர்த்த ப்ரஸாதனும் என்கிற திருமுகப்படியும், விஸ்வாமித்ர விஷ்ணுசித்த துளஸீ ப்ருத்யரோடே உள்கலந்து தொழுகுலமானவர் நிலையார்பாடலாலே ப்ராம்ஹண வேள்விக்குறை முடித்தமையும், கீழ்மகன் தலைமகனுக்கு ஸமஸகாவாய்த் தம்பிக்கு முன்பிறந்து வேலும் வில்லுங்கொண்டு பின்பிறந்தாரைச் சோதித்துத் தமையனுக்கு இளையோன் ஸத்பாவஞ் சொல்லும்படி ஏககுலமானமையும், தூதுமொழிந்து நடந்து வந்தவர்களுடைய ஸம்யக் ஸகுண ஸஹபோஜனமும், ஒருபிறவியிலே இருபிறவியானருவர்க்குத் தர்மஸூனு ஸ்வாமிகள் அக்ரபூஜை கொடுத்தமையும், ஐவரில் நால்வரில் மூவரில் முற்பட்டவர்கள் ஸந்தேஹியாமல் ஸஹஜரோடே புரோடாசமாகச் செய்த புத்ரக்ருத்யமும், புஷ்பத்யாக போகமண்டபங்களில் பணிப்பூவும் ஆலவட்டமும் வீணையுங்கையுமான முடிமன்னனும் வைதிகோத்தமரும் மஹாமுனியும் அனுவர்த்தித்த க்ரமமும், யாகாநுயாகோத்தர வீதிகளில் காயான்ன ஸ்த்தல சுத்தி பண்ணின வ்ருத்தாசாரமும் அறிவார்க்கிறே ஜன்மோத்கர்ஷாபகார்ஷங்கள் தெரிவது.

இராமரால் தோழனாகக் கொள்ளப்பட்ட குகன் அவருக்கு உற்ற துணைவனாய் ஒழுகி வந்தான். இராமரைவிட்டு நீங்காத இளைய பெருமாளிடத்தும் ஐயங்கொண்டு இரவு முழுவதும் இமைக்காமல் காவல் செய்தான். இராமரிடத்தில் பக்தி மிக்க பரதனையும் ஐயுற்றுப் போருக்குப் புறப்பட்டான். 'பின் பிறந்தாரைச் சோதித்து' என்பதனால் இவற்றையே 'ஆசார்ய ஹ்ருதயம்' வெளியிட்டது.

இராமரிடத்தில் வைத்த பேரன்பினால் பரதனை ஐயுற்ற திறத்தில் இலக்குவனது இயல்பும், இராமர்கட்டளைப்படி தன்னூருக்கு மீண்ட தன்மையில், 'சேஷி உகந்த அடிமையே சேஷபூதனுக்குக் கர்த்தவ்யம்'* என்னுந் தருமத்தை வெளியிட்ட பரதனது பண்பும் குகனிடம் அமைந்து விளங்கின. பெருமாளிடம் அன்பு பூண்டொழுகியவனான குகனைக் குகப்பெருமாள் என்று வைஷ்ணவர்கள் கொண்டாடுவாராயினர்.

---

* கண்ணிநுண் சிறுத்தாம்பு. ப்ரவேசம்.

சுக்கிரீவன்.

(ஸ்ரீ வே. நாராயணையரவர்கள் எழுதியது.)

ஸ்ரீராமபிரானுடைய அனந்த கல்யாண குணகணங்கள் உடன்பிறந்தாரையும் தாஸர்களாக்குகின்றன; அவனுடைய ஔதாரியம் அடிச் சேர்ந்தாரையும் அனுஜர்களாக்குகின்றது. இராமானுஜன் என்பதற்கும் இராமதாஸன் என்பதற்கும் பொருள் ஒன்றே என்னலாம்படி ஆகின்றது.

இவ்வுண்மை வால்மீகி ராமாயணத்திலுள்ள சுலோகங்களால் விளங்குகிறது. அனுமான் இராம லட்சுமணர்களைப் பார்த்து "நீங்கள் யார்" என்று கேட்டபோது இலட்சுமணன் "இவன் தசரதச் சக்கரவத்தியின் மகன் இராமன்' என்று கூறியபின், "நான் இவனுடைய தம்பி; இவனுடைய குணங்களாலே அடிமையாக்கப் பெற்றேன்" என்பதாக உள்ளது ஒரு சுலோகம். மற்றொன்று தாரை இலட்சுமணனைப் பார்த்துச் சொல்வதாக உள்ளது. சுக்கிரீவனைக் காட்டி அவள் இலட்சுமணனைப் பார்த்து 'உன்னுடைய அண்ணனான வானரவம்சநாதன்' என்கிறாள். இவ்விரண்டு சுலோகங்களும் முறையே இராமகுணங்கள் தம்பியை அடிமையாக்கியதற்கும் அடிச்சேர்ந்தவனை அத்தம்பிக்கு அண்ணனாக்கியதற்கும் பிரமாணங்கள் ஆகின்றன. இராமபிரானுடைய தம்பியாவதற்கு வேண்டிய தன்மை அடிமைத் தன்மையே. 'ஏழை' என்றும், 'ஏதிலன்' என்றும் 'கீழ்மகன்' என்றும் அவன் பார்ப்பதில்லை என்பது குகப்பெருமாள் விருத்தாந்தத்தாலும் வாலியை வதைத்த பின்,

ஆதலானும் அவனெனக் காருயிர்க்
காதலானெனலானு நிற்கட்டனேன்;
ஏதிலாரு மெளியரென்று ரையுந்
தீது தீர்ப்பதென் சிந்தைச் கருத்தரோ

என்று அவன் பேசின பேச்சாலும் அறியலாம்.

குகப்பெருமாள் "உத்தமனே! அடிநாயேன் ஓதுவது ஒன்று உளது; மலரடி பிரியாது உடன் போதுவேன்" என்றதுமே, அவனது அடிமைத் திறனைக்கொண்டே அவனை அனுஜனாக அங்கீகரித்தான் இராமபிரான்,

'என்னுயிரனையாய் நீ; இளவல் உன் இளை யான்; இந் நன்னுதலவள் நின்கேள்' என்று. இதுபோன்றே சுக்கிரீவன் "சரணனைப் புகுந் தேன் என்னைத் தாங்குதல் தருமம்" என்றான்.

என்றவக் குரக்குவேந்தை
   யிராமனுமிரங்கி நோக்கி,
'உன்றனக்குரிய வின்ப
   துன்பங்களுள்ள முன்னாள்
சென்றன போக்கி மேல் வந்
   துறுவன தீர்ப்பல்; அன்ன
நின்றன வெனக்கு நிற்கு
   நேரென மொழியு நேரா
மற்றினி யுரைப்ப தென்னே
   வானிடை மண்ணினின்னைச்
செற்றவரென்னைச் செற்றார்
   தீயரே யெனினு முன்னோ
டுற்றவரெனக்கு முற்றார்;
   உன்கிளை யெனது; என் காதற்
சுற்றமுன் சுற்றம்; நீயே
   இன்னுயிர்த் துணைவன்' என்றான்.

தம்பியுரிமை பெற்ற சுக்கிரீவனும் அவ்வுரி மை பெறுவதற்கு அடியான அடிமையை மறவாது, "ஈண்டு நம் கோயிலெய்தி இனி தின் நின் இருக்கை காணவேண்டும்; நம் அரு ளென்?" என்று விண்ணப்பித்தான். இருசிய மூக மலையிலேயுள்ள சுக்கிரீவனது அடிக் குடிலை அடைந்தார்கள் இராமனும் இராமா னுஜனும். விருந்து கண்ட போதல்லவா மனைக்குரிய பூவையைப் பிரிந்த வருத்தம் வெளிப்படும்; சுக்கிரீவன் வருந்துவதைக் கண் டுணர்ந்த இறைவன், "பொருந்து நன் மனைக் குரிய பூவையைப் பிரிந்துளாய் கொலோ நீயும் பின்?" என்று வினவினான். அப்பொழுது தான் ஹனுமான் வாலி விருத்தாந்தத்தை விண்ணப்பித்து,

உரிமை யென்றிவற்குரிய தாரமாம்
அருமருந் தையுமவன் விரும்பினான்

என்று கூறினான். அதைக் கேட்டதும், தம் பிக்குத் தன்னரசுரிமை யீந்தவன், 'ஒருவன் தன் இளையோன் றாரம் வெளவினன்' என்ற சொற் றரிக்காமல், "தலைமையோடு நின் தார மும் உனக்கு இன்று தருவேன்" என்று உறுதிமொழி புகன்றான்.

இவ்வாறு இராமன் சுக்கிரீவனைத் தம்பி யாக ஏற்றுக்கொண்டதைத் திடப்படுத்தியது வாலியின் அந்தியப் பிரார்த்தனை.

அனுமனென்பவனை யாழி
   யைய நின் செய்ய செங்கைத்
தனுவென நினைதி; மற்றென்
   றம்பி நின் றம்பியாக நினைதி

என்றும், 'இன்னுமொன்றுரைப்பதுண்டால்; எம்பியை நும்பிமார்கள் தம்முனைக் கொல்வித் தான் என்று இகழ்வரேற் றடுத்தி தக்கோய்' என்றும் பிரார்த்தித்து, சுக்கிரீவனை நோக்கி, வருவதை யுணர்ந்தவனாய், "இவ்வள்ளலுக்குத் தம்பியாகும் வாழ்வுயர் நிலையை, நீ இணையடி இறைஞ்சி ஏவல் செய்து பெறுவாயாக; மதவி யல் குரக்குச் செய்கையை மயர்வொடு மாற் றுவாயாக; சிற்றடிமை செய்யும் குற்றத்தைப் பொறுப்பர் பெரியோர் என்று எண்ணாதே; மன்னர் தீ போன்றவரென்றே எண்ணுதி" என்று அந்திமோபதேசம் செய்தான்.

தம்பியாகப் பிறந்தும் தாஸ்யத்திலேயே ஊற்றங்கொண்டு தமையனுக்கு ஸகலவித கைங்கரியங்களையும் தானே செய்யவேண்டு மென்று மனோரதித்த இலட்சுமணனுக்கு இவ் வாறு தம்பியர் அதிகரிப்பதில் இஷ்டமிரா தல்லவா? மேலும், பரதனையே சங்கித்த மனம் 'தன் தமையனை வேற்றுமெனக் கொல்ல முன் வந்து நிற்பவனை' ஏற்றுக்கொள்ளுமோ? 'இவனை நாம் எப்படி நம்பலாம்' என்றபோது, இராமன் 'பித்தாய விலங்கி னொழுக்கினைப் பேசலாமோ' என்று சமாதானம் கூறினான். ஏனெனில், தம்பியாக்கப்பட்ட பின்பும் சிறிது காலம் விலங்கின் தன்மை சுக்கிரீவனுக்கு எஞ்சியிருந்தது. ஆயினும், 'அனன்னியனாய் இறைவனடி சேர்பவன் ஸுதுராசாரனாயிருந் தாலும் அவனை ஸாதுவாகவே கொள்ளல் வேண்டும்; அவன் நல் வழியிலே திரும்பிய வனன்றோ? அதிசீக்கிரத்திலே அவன் தர்மாத் துமா ஆகின்றான்; சாசுவதமான சாந்த நிலை யைப் பெறுகின்றான். அவனுக்கு ஒருபடியா லும் அழிவில்லை' என்னும் உறுதிமொழியின் படியே, சுக்கிரீவனும் சிலகாலம் சிற்றின்ப சுகத்தை அனுபவித்து அதனால் வரும் [illegible]டி யையும் அடிமை செய்வதால் வரும் பேரின்

பத்தையும் இலட்சுமணன் மூலமாகப் பிரத்தியக்ஷமாகக் கண்டு கொண்டான்.

கார்காலம் நீங்கியும் சுக்கிரீவன் தாமதித்தான் என்று இராமன் தன் தம்பியைக் கிட்கிந்தைக் கனுப்ப, அவன் கோபத்தோடு வருவதைக் கண்ட அனுமான் "கபியின் வேந்தன் மறந்திலன்; அவன் தன் வாய்மையை அழிப்பானுயின், அவன் பிறந்திலன்" என்று சாந்தப்படுத்தி, சுக்கிரீவன் ராமானுஜனுகப் புனர்ஜன்மமெடுத்ததைக் குறிப்பாலுணர்த்துவானுய், 'ஐய, நீர் அளித்த செல்வம் காண்டியால், உன் முன் வந்த கவிக்குலக் கோனேடு" என்றும் "போந்து உன் முனைச் சார்தி" என்றும் கூறி அழைத்துவந்தான். சுக்கிரீவனும் மதுவுண்டும் காமம் நுகர்ந்தும் தான் மெய்மறந்து போக நேர்ந்ததே ஐயனிணையடி பிரியாதவனையும் பிரிவித்தற்கு ஏது ஆயிற்று என்று வருந்தினன். தன் கடமையை மறக்கச் செய்த காமத்தையும் மதுவையும் வெறுத்தான். இலட்சுமணனுக்கு மெல்லணை யிட்ட போதும் அவனை அமுதுண்ண அழைத்த போதும் அவன் அவற்றை மறுத்துக்கூறிய வாசகங்கள் சுக்கிரீவனுடைய பிழைகளைத் தீயினில் தூசாக்கின. உடனே அவன் இராமபிரானைக் காண இலட்சுமணனுடன் புறப்பட்டான்; இலட்சுமணன் சிவிகையேருமல் நடக்கவே, சுக்கிரீவனும் தேர்போல அவன் பின் சென்றான்.

> வீரனுக் கிளையவன் விளங்கு சேவடி
> பாரினிற் சேறலிற் பரிதி மைந்தனுந்
> தாரினிற் பொலங்கழ றழங்கத் தாரணித்
> தேரினிற் சென்றனன் சிவிகை பின்செல.

அவன் மலைமீதேறிச் சென்ற வேகத்தில் அவனுடன் சென்ற சேனை பின் தங்கியது; ஆனல் அவன் காதலோ அவனைவிட வேகமாய் முன் சென்றது. அவனைப் பார்த்தால் இராமபிரானைக் காண்பதற்குச் சித்திரகூட பர்வதத்திலே ஏறிச்சென்ற பரதனைப் போலத் தோன்றிற்று.

> கண்ணிய கணிப்பருஞ் செல்வக் காதல்விட்
> டண்ணலை யடிதொழ அணையுமன் பினல்
> நண்ணிய கவிக்குலத் தரசன் நாடோறும்
> புண்ணியற் றேழுகழற் பரதன் போன்றனன்.

உத்தமத் தம்பியான பரதனைப் போலவே சுக்கிரீவனும் வேகமாயோடிச் சென்று இராமபிரானுடைய செறிமலர்ச் சேவடியை முடியில் தீண்டினன். அடி வணங்கி அபராத க்ஷமாபணம் வேண்டி நின்று.

> மன்னவ! நின்பணி மறுத்து வைகி யேன்
> புன்னிலைக் குரக்கியல் புதுக்கினேனென்றன்.

அதைக் கேட்ட அருளாளனும், 'தம்பியான பின்பு இவ்வாறு பேசுவது முறையன்று' என்பது தோன்ற, "பரதன் நீ; இனையன பகரற்பாலையோ?" என்று தேற்றினன். இவ்வாறு அடிமை செய்து தன் புன்மையைப் போக்கிய வானர ராஜனுக்கு சுக்கிரீவன் என்ற பெயர் பொருளுடையதாயிற்று. கிரீவத்தாற் பெயர் பெற்றார் ராமாயண கதாபுருஷர் இருவர். எம்பெருமானை வணங்கிய கழுத்தையுடையவன் அக்கழுத்துக்குப் பூணாரமிடப் பெற்று வெள்ளுயிராக்கப் பெற்றுன். வணங்காது பணைத்தெழுந்த கழுத்துக்கள் பல படைத்த தசக்கிரீவனே பக்கினக்கிரீவனுய் உருமாய்ந்தான்.

சுக்கிரீவன் சிரகாலம் அடிமையிற் பழகியதே, விபீஷணன் அடைக்கலமென்றபோது அவனைச் சங்கிக்கச் செய்தது. இலட்சுமணனுக்குப் போலவே இவனுக்கும், இராமனுக்குத் தீங்கு எங்கு வருமோ என்ற பயமே பெரிதாயிற்று. குகப்பெருமாள் இலட்சுமணனையே சங்கித்தார் என்றால், சுக்கிரீவன் விபீஷணனைச் சங்கித்தது உசிதமேயன்றோ? 'தம் முனைத்துறந்தது தருமநீதியோ?' 'மாற்றவன் தம்பி இவன் ஆர்க்குறவாகுவன்?' 'அன்னவன் துணைவன் ஆகுமோ?' 'வஞ்சனை யியற்றிட வந்த வாறலால் தஞ்செனநம் வயிற் சார்ந்துளானலன்' என்று சுக்கிரீவன் சொன்னதை நினைந்தே இராமபிரானும், "அபயதானம் ஈதல் என்கடப்பாடு; என்பால் வைத்த காதலால் இயம்பினீர்; இனி வேறெண்ணக் கடவது என்? கதிரோன் மைந்த! கோதிலாதவனை நீயே என் வயிற் கொணர்தி" என்றான். தன்னை இராமானுஜனுகவே கொண்டு வாலியின் தம்பியாயிருந்ததை இது வரையும் மறந்திருந்த சுக்கிரீவன் இதைக் கேட்டவுடனே தன் முற்பிறப்பை நினைந்து கொண்

டான். வானரத்தன்மை நீக்கி தசரத புத்திரனுக்கப் பெற்றதை நினைத்து, சரணாகதனான இவனும் ஸாதுவாய் தசரத தனயனுக்க் கொள்ளப்பட்டதை உணர்ந்து, ஏவக்கடவப் பணி செய்தலையே சகோதர வுரிமையெனக் கொண்ட சுக்கிரீவன் தன்னுடைய புதிய சகோதரனைத் தழுவி இராமஸந்நிதிக்கு அழைத்து வந்தான். தன்னைப் போலவே விபீஷணனும் தூயசிந்தையன் என்பதைக் கண்டு மகிழ்ந்தான்.

தொல்லருங் காலமெல்லாம்
 பழகினும் தூயரல்லார்
புல்லர்; உள்ளந்தூயார்
 பொருந்துவர் எதிர்ந்த ஞான்றே;
ஒல்லை வந்துணர்வு மொன்ற
 இருவருமொரு நாளுற்ற
எல்லியும் பகலும் போலத்
 தழுவினர் எழுவிற்றோளார்.

பிறகு, இராமன் இலட்சுமணனை விபீஷணனுக்கு 'மகுடம் சூட்டு' என்று ஏவினதையும் அவன் பரதனுக்கு அளித்த மகுடத்தையே வேண்டினதையும் இராமன் அவனையும் தம்பியாக்கொண்டு 'தொடுகழற் செம்பொன் மௌலி' சூட்டிக்கொள்ள அனுமதிக்கும் போது தன்னையும் உடனுதித்தவர்களோடும் ஒருவனாக அனுவதித்ததையும் கேட்ட சுக்கிரீவன் ஆனந்த பரவசன் ஆனான்.

பின்பு, இலங்கா யுத்தத்தின் ஆரம்பத்திலே இராமனுக்கு எதிரே இராவணன் போர்க் கோலம் பூண்டு நிற்க, அதனைக் காணச்சகியாது சுக்கிரீவன் இராவணன்மேற் பாய்ந்து சென்று அவனை மகுடபங்கஞ் செய்தான்; செய்து மீண்டும் அதனால் திருப்தி யடையாமல்,

காட்டிலே கழுகின் வேந்தன்
 செய்தன காட்டமாட்டேன்
நாட்டிலே குகனார் செய்த நன்மையை
 நயக்க மாட்டேன்
கேட்டிலேனின்று கண்டுங்
 கிளிமொழி மாதராளை
மீட்டிலேன்; தலைகள் பத்துங்
 கொணர்ந்திலேன் வெறுங்கை வந்தேன்

என்று வெட்கிப் பேசினான். இதுவன்றோ அடிமையின் சிறப்பு?

இச் சிறப்பினை ஹனுமானுடைய வாக்கினின்றும் அறிந்த பிராட்டி, "என்னை நினைந்து நாயகன் இங்கே வாராமல் பரதனை நினைந்து அயோத்திக்குச் சென்றாலும், கவியின் மன்னனிடம் சுந்தரத் தோளனைத் தொடர்ந்து காத்துப் போய் அந்தமில் நெடுநகர்க்கு அரசனுக்கு வாய் என்று சொல்லவேண்டும்" என்றாள்.

சுக்கிரீவ சக்கியத்திற்கு முன்பே, தம்பியரைத் தன் உயிரனையராகக் கொள்ளவேண்டுமென்ற தன் குலமுதல்வனின் கருத்துக்கிசைய, இராமபிரான் 'தம்பியரல்லது தனக்கு வேறுயிர் இம்பரின் இலதென வெண்ணியேய்ந்தவன்' என்று எங்கும் புகழ்பெற்றிருந்தான்*; அத்தகைய பெரியோன் சுக்கிரீவனை 'மர்க்கடம் விலங்கு' என்னாது வலியவந்து அடிமை கொண்டு அவனை மானுடரோடு ஒப்ப வைப்பதோடு நில்லாமல் இக்ஷ்வாகு வமிசத்தவருக்கும் உடன்பிறப்பாக்கிய பரமஔதார்யத்தை நன்கு விளக்குவது சுக்கிரீவசரிதை.

---

* ஆசார்யன் பரப்பிரம்மத்தின் மூர்த்தி; தந்தை பிரஜாபதியின் மூர்த்தி; தாய் பூதேவியின் மூர்த்தி; உடன்பிறந்தான் தன் ஆன்மாவின் மூர்த்தி—என்பது மனு வசனம்.

விபீஷண நம்பி

(ராவ்ஸாகிப். மு. ராகவையங்கார் எழுதியது.)

"படிகொண்ட கீர்த்தி இராமாயணம் எனும் பத்திவெள்ளம்" என்பது முன்னோர் திருவாக்கு. இப்பத்திப் பெருவெள்ளத்தில் இழிந்து ஆடுவதற்குப் பழைமையாகவே அமைந்த புண்ணியத்துறை, ஸ்ரீவால்மீகி பகவான் அருளிய இராமாயணம் ஆகும். ஆனால், வடமொழியாளருக்கு மட்டும் உரியதாக அமைந்தது இத் தீர்த்த கட்டம். அதனால் பிற மொழியாளரும், தாம் ஆடித் திளைத்தற் கென்று, பிற்காலத்தில் அமைத்துக் கொண்ட துறைகள் அநேகம் உண்டு. அவற்றுள் நம் நாட்டவர்க்கு அமைந்த முத்தமிழ்த் துறை கம்பராமாயண மாகும். உத்தமகவியாகிய கம்பநாடர் இயற்றிய இம் மகாகாவியம் தமிழ் மொழிக்கே அலங்காரமாயும், சுவைக்கச் சுவைக்கத் தெவிட்டாது, 'அப்பொழுதைக் கப்பொழுதை ஆராவமுதம்' ஆகியும் விளங்குவ தென்பதை அறியாத அறிஞர் உண்டோ?

ஸ்ரீராமபிரானது நற்குணக்கடலில் ஆடி, அவனது பரக்குந் தொல்புக ழமுதினைப் பருகிக் களித்த கம்பர், தாம் அனுபவித்த அப்பிரானது அனந்த கல்யாண குணங்களில், அவனது அளவிலாக் கருணைத் திறத்தையே பலபடப் பாராட்டுகின்றார். அப் பெருமானுக்குக் கருணாகரன் என்ற திருநாமத்தை முன்னோர் இட்டு வழங்கியதும் இதுபற்றியேயாம்.

'இலங்கையெறிந்த கருணாகரன்'
(சயங்கொண்டார்)

'கருணையங் கடல் கிடந்தனன் கருங்கடல் நோக்கி' (கம்பர்)

'கடுமையார் கானகத்துக் கருணையார் கலியேக'
(கம்பர்)

எனக் காண்க. இத்தகைய கருணை ஸ்ரீராமபிரானிடமிருந்து வெளிப்பட்ட சந்தர்ப்பங்கள் எத்தனையோ உண்டு. அவற்றுளெல்லாம் சிறப்பாகக் குறிப்பிடத்தக்கது ஸ்ரீ விபீஷண சரணாகதியே யாகும். இக் கதாபாகம் போல, அப்பெருமானது கருணைப் பிரவாகம் பெருக்கெடுத்து ஓடிய இடம் வேறில்லை என்றே சொல்லலாம். இச் சிறப்புப் பற்றியே, 'சரணாகதி சாஸ்திரம்' என்று ஸ்ரீமத் ராமாயணமும் புகழ் பெறுவதாயிற்று. தண்டகாரணிய முனிவர்களுக்கும் காகாசுரனுக்கும் சுக்கிரீவனுக்கும் இராமபிரான் அளித்த அபயங்களைக் காட்டிலும், சத்துரு பக்ஷத்திலிருந்து வந்த இவ் விபீஷணனிடம் அப்பெருமான் காட்டிய கருணைத் திறத்தில், சரணாகதி லக்ஷணம் பரிபூர்த்தி பெற்று விளங்குகின்றது. தருமாத்மாவான விபீஷணன், சீதாப்பிராட்டி விஷயத்தில் தன் தமையன் புரிந்த தீச் செயல்களைச் சகியாமல் அப் பிராட்டியைச் சிறை நீக்குதற்குச் செய்த பெருமுயற்சி யெல்லாம் வீணானமையாலும், இராவணனால் பகைக்கப்பட்டவன் அவதார மூர்த்தி என்பதை அறிந்தவனாதலாலும், முடிவாகத் தான் கூறிய நன்மொழிகளை யேற்காது, 'த்வாம் து திக் குலபாம்ஸனம்' என்று தன்னை உதறித் தள்ளியவனாதலாலும், இராமபிரானது சீற்றத்தால் இலங்கை பாழாளாவதற்கு முன் அப்புருஷோத்தமனை அடைந்துய்வதே கருமம் என்பதை அவன் நன்கு உணரலாயினன். உணர்ந்து, சிறிதுந் தாழாமல் தன் மந்திரிகள் நால்வருடன் அக்கரை வந்து, ஆகாசத்தில் நின்றபடியே இராம சைந்யங்களை நோக்கி.

"ஸர்வலோக சரண்யாய ராகவாய மஹாத்மநே
நிவேதயத மாம் க்ஷிப்ரம் விபீஷண முபஸ்திதம்"

என்று, சர்வலோக சரண்யனை அடைக்கலம் புகுந்தபடியை அப்பெருமானுக்கு அறிவிக்கும்படி வேண்டினன். இதனைக் கேட்ட வானர வேந்தான சுக்கிரீவன், அச்செய்தியை இராமபிரானிடம் சென்று அறிவிக்க, உடனே அதுபற்றிய மந்திராலோசனை அப்பெருமான் திரு முன்பு நிகழ்வதாயிற்று. அவ்வாலோசனையில் சுக்கிரீவனும் பிற தலைவர்களும், பகைப் புலத்திலிருந்து வந்த விபீஷணனிடம் அதிசங்கை பண்ணி, அவன் சிறிதும் ஏற்றுக் கொள்ளத் தக்கவன் அல்லன் என்று முடிவு கூறினர். ஆனால், மாருதி மட்டும், அவ் விபீஷணன் உண்மையிற் சரணம் புகுந்தவனே யன்றி, வஞ்சகமாக வந்தவனாகான் என்பதற்கு ஏற்ற நியாயங்களை

எடுத்துரைத்தார். இவ்வாறு, தன் படைத் தலைவர்களிற் பெரும்பாலாரும் தன்பால் வைத்த பேரன்பால் மறுத்துரை யாடியதை அறிந்த இராமபிரான், விபீஷணன் ஏற்றுக் கொள்ளத் தக்கவனே என்பதற்குரிய நியாயங்களை மொழிந்ததோடு—"சரணம் என்று வந்தவனை, அவனிடம் எவ்வளவு தோஷம் இருப்பினும், எவ்வகையிலும் கைவிடமாட்டேன்" என்றும், "ஒருகால் சரணம் என்று அடைக்கலம் புகுந்தவனுக்கும், 'உன்னுடையவன்' என்று சொல்லி வேண்டுபவனுக்கும் ஸமஸ்த பூதங்களிடத்தும் பயமில்லாதபடி அபயம் கொடுப்பேன். இதுவே என் விரதம்" என்றும் கூறியருளி, விபீஷணனன்றி இராவணந்தானே வந்திருப்பினும் அவனையும் நீயே சென்று அழைத்து வருக என்று சுக்கிரீவனை நோக்கி ஆணையிட்டனன். இவ்வாணையை ஏற்ற அவன், பெருமானது கருணைத்திறத்தை வியந்து சென்று, விபீஷணனை அழைத்து வந்து இராமபிரான் திரு முன்பு நிறுத்த, வந்த அவனைப் பெருமான் குளிர நோக்கி அவற்கு அபய மளித்தருளியதோடு இலங்கைக்கு அரசனாகப் பட்டாபிஷேகமுஞ் செய்வித்தனன்'—என்பது, வால்மீகத்திற் கண்ட கதைச் சுருக்கம்.

இவ்வரலாற்றைப் பெரும்பாலுந் தழுவியே கம்பரும் விரித்துக் கூறினர். ஆயினும், விபிஷணனுடைய இயற்கைப் பெருமைகளும், இராமபிரானது பெருங்கருணைச் சிறப்பும், அபயப்பிரதானத்தின் மேம்பாடும் சிறந்து திகழும்படி, கதைக்கூறுகளை அங்கங்கே சிறிது வேறுபட அமைத்துக்கொண்டு, அவர் பாடிச்செல்லும் அழகு இன்பமூட்டுவதாகும். 'விபீஷணனை அங்கீகரிக்கலாமா, ஆகாதா' என்ற ஆலோசனையில், அனுமான் கூற்றில் வைத்துக் கூறப்பட்ட நியாயங்களொவ்வொன்றும் ஆணித்தரமானது. அவற்றுள்—

"தேவர்க்குந் தானவர்க்குந் திசைமுகனே
 முதலாய தேவ தேவர்
மூவர்க்கும் முடிப்பரிய காரியத்தை
 முற்றுவிப்பான் மூண்டு நின்றே
ஆவத்தின் வந்தபய மென்றானை
 அயிர்த்தகல விடுதி யாயின்
கூவத்தின் சிறுபுனலைக் கடலயிர்த்த
 தொவ்வாதோ கொற்ற வேந்தே"

என்ற கருத்தொன்றே விபீஷணனை அங்கிகரிக்கச் செய்யவல்லது எனலாம். ஆயினும், அவனது நற்குண நற்செய்கைகளாக அனுமான் நேரில் அறிந்தவற்றைக் கூறியதாகக் கம்பர் எடுத்து மொழிகின்றவை, சந்தர்ப்பத்தைப் பெரிதும் அழகுபடுத்துகின்றன. பிராட்டியைத் தேடியவண்ணம் முன்பு இலங்கையில் திரிந்த அனுமான், இரவில் விபீஷணன் மாளிகை புகுந்து அவனுறங்குவது கண்டு—

"உற்றுநின் றுஅவ னுணர்வைத்தன்
 னுணர்வினு லுணர்ந்தான்
குற்றமில்லதோர் குணமுள
 னிவனெனக் கொண்டான்"

என்று தன்னுட் கூறியதாகப் பாடுகின்றார் கம்பர். இதனால் விபீஷணனது கோதற்ற தன்மைகளை மாருதி முன்னரே நன்கறிந்திருந்தவர் என்பது பெறப்படும். அன்றியும் இராவணன் தர்மைப் பிடித்துக் கொல்லும்படி ஆணையிட்டபோது, தூதாக வந்தவர்களைக் கொல்லலாகாது என்று விபீஷணன் தடுத்து மொழிந்தவைகளாலும் அனுமான் அவனது தூயநிலையை நன்கு தெளிந்திருந்தவரே. இவ்வாறு தான் கண்கூடாகக் கண்ட விபீஷணன் குணங்களை முக்கியமான இம் மந்திராலோசனையில் உடனிருந்த அவர் கூறாதிருப்பின், அது அவரது பேரறிவுக்கும் ஆலோசனைத் திறத்திற்கும் பெருங்குறையேயன்றோ? இவற்றை யுணர்ந்தே, கம்பர்—

"கொல்லுமி னிவனையென் றரக்கன் கூறிய
எல்லையில் தூதரை யெறித லென்பது
புல்லிது பழியொடு புணரும் போர்த்தொழில்
வெல்லலம் பின்னையென் றிடைவிலக்கினான்"

"எல்லியில் நானிவன் இரண மாளிகை
செல்லிய போதினும் திரிந்த போதினும்
நல்லன நிமித்தங்கள் நணிந யந்துள
அல்லது முண்டுநான் அறிந்த தாழியாய்!

நிந்தனை நறவமும் நெறியி லூன்களும்
தந்தன கண்டிலேன் தரும தானமும்
வந்தனை நீதியும் பிறவும் மாண்பமைந்து
அந்தண ரில்லெனப் பொலிந்த தாமரோ"

என்று, ஏற்ற சந்தர்ப்பத்தில் அவற்றை எடுத்துரைக்கலாயினர். இம் முக்கிய விஷயம் வான்மீகி முனிவரால் கூறப்பட்டிலது. ஆயினும், தம் வாலில் வைத்த தீயால் இலங்கை

முழுதையும் அனுமான் எரித்து வந்தபோது, தம்மை இராவணன் கொல்லாமல் தடுத்து மொழிந்த விபீஷணனது மாளிகையில் மட்டும் தீயையிடாமல் அவர் சென்றனர் என்று அம்முனிவர் கூறுவர். இவ்வாறு கூறிய அம் முனிவர்க்கு, விபீஷணனது உத்தம குணங்களை மாருதி முன்னரே அறிந்திருந்தவர் என்பதே கருத்தாமன்றோ? இங்ஙனம் முனிவரிடத்திலிருந்து முகிழ்த்த கருத்தே கம்பரிடத்தில் அலர்ந்து மணக்கலாயிற்று எனக.

இவ்வாறு வெறும் ஊகங்களால் பிற வானரத் தலைவர்கள் கூறிய ஆலோசனைகளை உபேக்ஷித்துவிட்ட பெருமான், பிரத்யக்ஷமாகத் தாம் கண்டவற்றைக் கூறிய அனுமானது அழகிய இவ்வார்த்தைகளைச் செவிமடுத்து அமிழ்தின் மாந்திப் 'பேரறிவாள! நன்று! நன்று!!' என்று புகழ்ந்து பின், அவர் கூறிய முடிவுக்கேற்பவே, தம் கருத்தையும் வெளிப்படுத்தலாயினன். அத்திருமொழிகளில்—

'கருத்துற நோக்கிப் போந்த
காலமும் நன்று; காதல்
அருத்தியும் அரசின்மேற்றே;
அறிவினுக்கு அவதியில்லை;
பெருந்துயர் தவத்தினலும்
பிழைப்பிலன் என்னும்பெற்றி
திருத்திய தாகு மன்றே நம்வயிற்
சேர்ந்த செய்கை'

என்பதும் ஒன்று. 'விபீஷணன் தக்க காலத்தில் சரணாகதனாக வந்தவனல்லன். உள்ளந்தூயனாக வந்தவனுமல்லன்' என்று சுக்கிரீவாதியோர் கருதிக் கூறியவை தவறென்றும், அக்காரணங்களால் இவன் கைவிடத்தக்கவனல்லன் என்றும் சரணாகதி தர்மத்தின் ரஹஸ்யங்கள் பலவும் உள்ளடங்கப் பெருமான் திருவுள்ளத்தை வெளிப்படுத்துவது இப் பாசுரம். 'ப்ரபத்தியாகிய சரணாகதிக்குக் காலதேச நியமங்களேனும் ஜன்மவ்ருத்தி நியமங்களேனும் இல்லை' என்ற முன்னோர் கருத்து இங்கறியத் தக்கது. இனி, சரணம்புக்க விபீஷணனது நோக்கம் இலங்கையரசுப் பேறே என்ற கருத்தைப் பல்லிடங்களினும் குறிப்பிட்டுச் செல்வர் வால்மீகி பகவான். அம்முறையில், 'அருத்தியும் அரசின் மேற்றே' என்று கம்பரும் இங்கே கூறினரேனும், இவர்க்கு, அவ்வரசே அவன் விரும்பிய பேறென்பது உள்ளார்ந்த கருத்தன்று.

"எல்லையில் பெருங்குணத் திராமன் றாளிணை
புல்லுதும் புல்லிப் பிறவி போக்குதும்"

"என்புறக் குளிரும் நெஞ்சுருகுமேல் இவன்
புன்புலப் பிறவியின் பகைஞன் போலுமால்"

"மறவினை நீக்கவில்லா மாயமு மாய வாழ்க்கைப்
பிறவியும் பெயர்த்தேன் பின்னு நாகினிற் பிழைப்
பதானேன்"

என்ற விபீஷண வசனங்களால், பிறவியறுத்துய்தலே அவனுக்கம் என்பதை நன்கு விளக்கிய கம்பர், அரசுப்பேறே அவனருத்தி என்ற கருத்தில் அத்தொடரை அமைத்திரார் என்பது தெளிவு. அதனால் விபீஷணனை ஏற்றுக்கொள்வதில் அதிக ஆக்ஷேபணை கூறிய சுக்கிரீவனைக் குறிக்கொண்டெழுந்த இராமபிரான் கூற்றே இத்தொடர் என்றும், அந்த சுக்கிரீவன் கிட்கிந்தை அரசுப்பேற்றை விரும்பியே சரண்புக்கவனாதலால், அங்ஙனம் சரணடைந்த உன்னைப் போலவே அரசை விரும்பி வந்தவனாக் கூறிய இவ்விபீஷணனும் கொள்ளத் தக்கவனென்ற குறிப்பில் பெருமான் அவனை நோக்கிக் கூறியதென்றும் கொள்வதே இங்குப் பொருந்தும். இனி 'அருத்தியும் அரசின் மேற்றே' என்பதிலுள்ள 'அரசு' என்பது, வெற்றரசையன்றி வீட்டரசைக் குறிப்பதாகக் கொள்ளினும் அமையும். மந்திராலோசனையில் மாருதி கூற்றாக—

"வாலிவிண் பெறவர சிளையவன் பெறக்
கோலிய வரிசிலை வலியுங் கொற்றமும்
சீலமும் உணர்ந்து நிற் சேர்ந்து தெள்ளிதின்
மேலரா செய்துவான் விரும்பி யெய்தினன்"

என்று கம்பர் பாடுகின்றார். இதனில், மேலரசு என்பதனால் குறித்ததும் அந்த மிலின்பத்தரசே யாகும். இவ்வாறாயின் வால்மீகி பகவானுக்கு, விபீஷணசரணாகதியின் முடிந்த பலன் ஐகிகச் செல்வந் தான் என்பது கருத்தோ எனின், அன்று, பரமாத்மாவின் அவதாரத்தை, 'ஆத்மாநம் மாநுஷம் மந்யே' என்ற அப்பகவானது ஸங்கல்பத்தின்படியே

மறைத்து மொழியப் புக்க அம்முனிவர், வீட்டரசே விபீஷணன் விரும்பியதென்று வெளிப்படையாகக் கூற இயலாமையால், அவ்வாறு மொழிந்தனரென்றும், பரமாத்தும நிலையை வெளிப்படப் பாடப்புக்க கம்பர்க்கு அந்நிலை புலப்படக் கூறுதல் எளிதாயிற்று என்றும், ஆகவே அவ்விருவரும் உட்கருத்தில் வேறுபட்டவரல்லர் என்றும் கொள்ளத் தகும்.

வால்மீகி முனிவரின் உட்கோள் இதுவே என்பதை "காகாஸுரனுக்குப் பலம் பிராணம்.....ஸ்ரீவிபீஷணாழ்வானுக்குப் பலம் ராமப்ராப்தி" என லோகாசாரியரும் அருளிச்செய்தார். இவ்வாறாயின், இலங்கையரசை விபீஷணன் ஏற்றுக்கொண்டது பொருந்துமோ எனின், சரண்புகுந்த அவன் பாதந்திரனாயினன் ஆதலின், இம்மையிலும் தன்னை மேனிலையில் வைக்கவிரும்பிய பெருமான் திருவுள்ளத்துக்கு இசைந்து, அவ்வரசை அவன் ஏற்கலாயினன் என்க.

இவ்வாறு, அடைக்கலம் புக்க விபீஷணன் சுக்கிரீவனால் அழைக்கப்பெற்று இராம சந்நிதியை நெருங்கியபோது, அவனடைந்த மன நிலைகளையும் இராமதரிசனத்தால் அவன் பெற்ற பெருமகிழ்ச்சியையும் கல்லுங் கரையப் பாடுகின்றார் கம்பநாடர். அப்பெருமானை அணுகிய விபீஷணனது மெய்ப்பாடுகளையும் பாவங்களையும்—

வீரனை நோக்கியங்கம் மென்மயிற்
  சிலிர்ப்பக் கண்ணீர்
வாரநெஞ் சுருகிச் செங்க
  ணஞ்சனமலை யன்றாகில்
கார்முகில் கமலம் பூத்த
  தன்றிவன் கண்ணன் கொல்லாம்
ஆரருள் சுரக்கு நீதி அறநிறங்
  கரிதோ என்றான்

மின்மினி யொளியின் மாயும்
  பிறவியை வேரறுப்பான்
செம்மணி மகுட நீக்கித்
  திருவடி புனைந்த செல்வன்
தன்முனார் கமலத் தண்ணல்
  தாதையர் சரணந் தாழ
என்முனார் எனக்குச் செய்த
  வுதவியென் றேம்பலுற்றான்

என்று அமைத்து அவர் பாடியவை எவ்வளவு உயர்வும் உருக்கமும் வாய்ந்துள்ளன! தர்மஸ்வரூபியான இராமபிரானைத் தரிசிக்கு முன்பு அவனது திருமேனி வண்ணம் தன் குலத்தவர்க் குரிய கருநிறம் போலன்றி வெண்ணிறமாக வேண்டும் என்று கருதி, அக்கருத்தையே தன் மனத்தும் பதிய எழுதிவைத்திருந்த விபீஷணன் அப்பெருமானை அணுகியதும் அவனது நிறவேறுபாடு கண்டு பிரமித்த நிலைமை இக் கூற்றால் புலப்படும். பொதுவாக அறத்தின் நிறம் வெண்மை என்று கேள்விப்பட்டதுண்டேனும், பேரருள் சுரக்கும் நீதியறத்தின் நிறம் கருமை போலும் என்று, பெருமானின் திருமேனி வண்ணத்தைக் கொண்டு அவன் கருதியதாகக் கம்பர் கூறும் அழகு பெரிதும் அதிசயிக்கத் தக்கது. இவ்வழகிய சந்தர்ப்பத்தில், விபீஷணன் கூற்றுக்களாகவும், இராமபிரான் திருமொழிகளாகவும் நம் புலவர் திலகம் வாரிவழங்கிய கவியமுதங்கள் சுவைக்கச் சுவைக்கத் தெவிட்டாதனவாம். இராமபிரானைக் காணப்பெற்றதும் அவர் திருவடிகளில் ஒரேயடியாக வந்து வீழ்ந்த விபீஷணனை அப்பெருமான் குளிர நோக்கி இருக்கையளித்து 'உலகும் என் பெயரும் வாழு நாளெல்லாம் இலங்கைச் செல்வம் உன்னதே' என்றதோடு

தஞ்சநற் றுணைவனான தவறிலாப்
  புகழான் றன்னைத்
தஞ்சலில் நயனத்தைய
  சூட்டுதி மகுடம்

என்றும் தம்பிளவலை நோக்கிக் கூறியருள, அப்போது, விபீஷணன் கூற்றாகக் கம்பர் பாடிய செய்யுள் குறிப்பிடத் தக்கது.

விளைவினை யறியும் வென்றி
  வீடணன், என்றும் வீயா
அளவறு பெருமைச் செல்வ
  மளித்தனை யாயினைய
களவிய லரக்கன் பின்னே
  தோன்றிய கடன்மை தீர
இளையவற் கவித்த மோலி
  என்னையுங் கவித்தி' என்றான்.

சரணுகதனுக வந்த தர்மாத்மாவான விபீஷணனுடைய பெரு நோக்கம், ராவணுனுஜனுகப் பிறந்த தன் பிறவிக்கேடு நீங்கி, இராம பிரானுக்கு உரியவனுய், வெற்றரசன்றி வீட்டரசைப் பெற்றுய்வதே என்பதை நம் கவிச் சக்கரவர்த்தி இப்பாட்டால் மிகத் தெளிவாக்குதல் காணலாம்.

ஸக்ருதேவ ப்ரபந்நாய
தவாஸ்மீதி ச யாசதே
'அபயம் ஸர்வபூதேப்யோ
ததாம்யேதத் வ்ருதம் மம'

என்ற பகவான் திருவுள்ளத்தின்படி, 'தவாஸ்மி' (உன்னுடையவன்) என்ற மகாபாக்கியமே, 'என்றும் வீயா அளவறு பெருமைச் செல்வமாக விபீஷணன் கருதினன் என்பதை 'அரக்கன் பின்னே தோன்றிய கடன்மை தீர ......மோலி கவித்தி' என்ற அவன் வாக்கியம் தெளிவாக்க வல்லது. இலங்கையரசை விரும்பி வந்தவன் என்று என் ஆசையினளவைச் சிறிதாக மதித்து ஆணையிட்டனை. அச்சிறு பொருளிலன்றி, அளவறு பெருமைச் செல்வத்திற் செல்லா நின்றது என் விருப்பம். அத்தகைய பேற்றை நீ அளிக்கத் திருவுள்ளமாயின், அதனடையாளமாய் உன் திருத் தம்பியான பரதநம்பிக்குச் சூட்டிய திருமுடியை அடியேற்கும் சூட்டவேண்டும்' என்று குறையிரந்தான் விபீஷணன். இவன் வார்த்தைகளைத் திருச்செவி சாத்தியதும், விபீஷணன் விஷயத்தில் தான் புரிந்த இரண்டு தவறுகளைத் தன் திருவுள்ளத்தில் உணரலானுன் பெருமான். ஒன்று, 'தவாஸ்மி' என்று வந்தவனை, இராவணுனுஜனுய்த் தஞ்சம் புக்கவன் என்று கருதியது. இரண்டாவது—கேவலம் இலங்கையரசையே விரும்பி வந்தவனுகக் கொண்டது. இவ்விரண்டு கருத்துக்களையும் இவன் விஷயத்திற் கொண்டது குற்றமே என்பது நினைந்து

'குகனெடும் ஐவரானேம் முன்பு;
பின் குன்றுசூழ்வான்
மகனெடும் அறுவரானேம்;
எம்முழை அன்பின் வந்த
அகனமர் காதலைய, நின்னேடும்
எழுவரானேம்
புகலருங் கானந்தந்து புதல்வரால்
பொலிந்தான் உந்தை'

என்று கூறி உடனே மாற்றிக் கொண்டு, இராவணுனுஜனனவனை இராமர் நுஜர்களுள் ஒருவனுகக் கணக்கிற் பதிந்து கொள்ளலாயினன். 'இளையவற் கவித்த மோலி'யைப் பெருமானிடம் விபீஷணன் விரும்பியதினின்று, தன் திருவடி நிலையைப் பரதனுக்களித்தவாறு அளிப்பது மட்டுமன்றி, அவனைப்போலவே இவனை உடன்பிறப்பாகவும் கொள்ளத்தகும் என்ற திருவுள்ளம் கொண்டனன் அக்கருணுகரன் என்க. திருவடிநிலையால் முடி சூட்டும்படி வேண்டிய அவனுக்கு, அதனை அளிப்பதை விட்டு, 'ஐய! நின்னெடும் எழுவரானேம்' எனத் தன் தம்பியர் கணக்கில் எழுதிக் கொண்டதாக விடை கூறிய கருத்து இதுவே என்பது அறிஞர்க்கு எளிதிற் புலப்படக் கூடியது. தாம் தேடிச் சென்று உரிமை பாராட்டிய குகசுக்ரீவர்கள் போலன்றி, தம்மைத் தேடி உள்ளன்புடன் வந்தவன் விபீஷணன் என்பது, 'எம்முழை அன்பின் வந்த..... ஐய' என்பதனுல் பெறப்படும். இங்ஙனம் விரும்பியதற்கு மேற்பட்ட பெரும்பேறு கிடைத்ததும், 'நாயக! நாயினேனை உடனுதித் தவர்களோடும் ஒருவனென்றுரையாநின்றுய், அடிமையிற் சிறந்தேன்' என்று தான் பெற்ற கைங்கர்யஸ்ரீயைப் பாராட்டியவனுய், அக் கைங்கர்யத்துக்குத் தானே உரியனுயினமை தோற்றப் பெருமான் திருவடிநிலைகளை இளைய பெருமாள் சூட்டுவதற்கு முன் தானே எடுத்துச்சூட்டிக் கொண்டனன் ஸ்ரீவிபீஷணுழ்வான். இவ்வினிய செயலைக்கண்டு இராமலக்ஷ்மணர் "இருவரும் இன்பமுற்றுர் யாவரும் இன்பமுற்றுர், பொருவரு மமரர் வாழ்த்திப் பூமழை பொழிவதானுர்' என்று இச்சரணுகதி சரிதத்தைப் பூர்த்தி செய்கின்றுர் நம் கவிச் சக்கரவர்த்தி.

இவ்வாறு கம்பர் கூறிய கதாபாகம் வால்மீகத்திற் காணப்படவில்லை. ஆயினும், எம்பெருமான் பின் பிறந்தவர்கள் போலவே கொள்ளப்பட்டனன் விபீஷணன் என்பது முன்னேரின் திருவுள்ளமேயாகும். "இராவணன் தன் தம்பியான விபீஷணுழ்வானை 'குலபாம்ஸனம்' என்றுன்; பெருமாள் இக்ஷ்வாகு வம்சியராக நினைத்து வார்த்தை அருளிச் செய்தார்" என்ற ஸ்ரீவசன பூஷண வாக்கியமும், இக்ஷ்வாகு குலநாதரான பெருமாள் ஆதாபூர்

வமாக அங்கீகரித்த அனந்தரம் 'ஆக்யாஹிமம தத்வேந ராக்ஷஸாநாம் பலாபலம்' என்று, ராக்ஷஸருடைய பலாபலமிருக்கும்படியை நமக்குச் சொல்லும் என்கையாலே திருத்தம்பிமாரோபாதி அபிமானித்து வார்த்தை அருளிச்செய்தார் என்கை' என்ற அதன் வியாக்கியான பங்தியும் இங்கு நோக்கத்தக்கன.

இவ்வாறு, 'இலங்கை வேந்தன் பெற்றது ஆர்பெற்றார்' என்று உலகம் வியந்துபோற்றும்படி அமைந்த இச்சரணாகதியின் ரஹஸ்யங்களை அறிந்து பகவானிடத்து ஈடுபட்ட பெரியோர்கள் அனந்தம். இதுபற்றியன்றோ; "செல்வ விபீடணற்கு வேறாக நல்லானை" என்றார் திருமங்கை மன்னன். வானரத்தலைவர்கள் எவ்வளவோ தடுத்தும், அவர்களை விலக்கியும் சரணாகதனைக் கைக்கொள்ளத் துணிந்தவனன்றோ நம் கருணாமூர்த்தி. அதனால் 'விபீடணக்கு வேறாக நல்லானை' என்றார் ஆழ்வார். இனி, 'செல்வ விபீடணனை' என்றது இலங்கைச் செல்வத்தையும் பந்து மித்ரர்களையும் இழந்துவந்து இராமசைந்யத்தின்முன்பு அந்தரத்தில் நின்றவனை 'அந்தரிக்ஷகதஸ்ரீமான்' என்று வால்மீகி பகவான் கூறியதுபோல், விபீஷணன் பெற்ற ஸ்ரீவைஷ்ணவஸ்ரீயை வியந்தபடியாம். இச்சிறப்புக்கள் பற்றியே அவனை விபீஷண நம்பி என்றும் ஸ்ரீவிபீஷணாழ்வான் என்றும் வழங்கலாயினர் நம் பெரியோர். 'விபீடணநம்பிக்கு என்னிலங்கு நாமத்தளவும் அரசென்ற மின்னலங்காரன்' என்றார் பெரியாழ்வார். இவ்வாறு பெருவரம் அளித்ததாக இவ்வாழ்வார் பாடிய செய்திக்கு வால்மீகத்தில் ஆதாரமில்லையேனும், நம் கவிச்சக்கரவர்த்தி—"ஏழுலகும் என் பெயரும் எந்நாள் வாழுநாள் அன்றுகாறும்......... இலங்கைச் செல்வம் நின்னதே தந்தேன்" என்று அத்திருவாக்கை அடியொற்றிப் பாடுதல் குறிப்பிடத்தக்கது. யுத்த ஜயத்துக்குமுன், எதிரியின் ராஜ்யத்தை வேண்டியவனுக்கு அளிக்கும் இவ்வரிய செயலை, உழிஞைத்திணையில் 'கொள்ளார் தேஎம் குறித்த கொற்றம்' என்ற துறையில் அமைப்பர், தொல்காப்பியர். 'பகைவர் நாட்டினைத் தாம் கொள்வதற்கு முன்னேயும் கொண்டாற்போல வேண்டியார்க்குக் கொடுத்தலைக் குறித்த வெற்றி' என்ற அதன் உரையும், "இராமன் இலங்கை கொள்வதன் முன் வீடணற்குக் கொடுத்த துறையும் அது" என்ற அதனுரையும் இங்கு அறியத்தக்கன. விபீஷணாழ்வானை இவ்வாறு கடாட்சித்த பெருமான், பிராட்டி புருஷகார மாக இவன் தன்னைப் பற்றாமையாலே, அக்குறையும் நீங்கும்படி செய்த இடமுமுண்டு. அஃதாவது—இராவண வதத்தின் பின்பு, பிராட்டியைத் தன்பக்கல் அழைத்துக்கொள்ளத் திருவுளங்கொண்டு, விபீஷணனையே அக்காரியத்தில் ஏவி, அப்பிராட்டியின் திருவருணோக்கமும் பெறச் செய்ததேயாம்.

இவ்வாறு, சரண்புகுந்தவனுக்கு, அதனுடன் உடன்பிறப்புரிமையையும் அளித்த இவ்வற்புத சரிதம் அரிய பெரிய தத்துவங்களையெல்லாம் உள்ளடக்கிவிளங்குவது என்பது பூர்வாசாரியர்கள் அருளிய ரஹஸ்ய கிரந்தங்களால் விசதமாகக் கூடியது. அவற்றையெல்லாம் இங்கு விரிப்பிற் பெருகும். முடிவாக, தம்பியரார்வம் படைத்த இராமபிரான், அத்தகையாரை நாடெங்கும் தேடிக் கண்டு உறவு கொண்டாடியவர்களிலே இவ்விபீஷண நம்பியே இறுதித்தம்பி என்பதும், அன்புமிகுதியால் தம்மைத் தேடிவந்த சிறப்பையும், அப்பெருமானது திருவடி நிலையைச் சூடி அரசாட்சி பெற்ற பெருமையையும் முதற்றம்பியாகிய பரதநம்பியும் இறுதித் தம்பியான இவனுமே வாய்க்கப்பெற்றவர் என்பதும், இவருள்ளும் சரணாகதியின் பலனை முற்றவும் பெறாத பரதாழ்வானிலும், உத்தேசியத்துக்கு மேற்பட்ட பேறுபெற்ற விபீஷணாழ்வான் பெருமை இணையற்றதென்பதும் கவிச்சக்கரவர்த்தியான கம்பர் திருவாக்கினின்றும் நாம் அறியத்தக்கன.

வால்மீகியின் 'து'வுக்குக் கம்பர் பொருளுரைத்தல்.

(தி. சுந்தராசாரியார், பி.ஏ., பி.எல்., சீர்காழி.)

வடமொழியில் செய்யுளின் அடிகளில் ஏற்படும் எழுத்துக் குறைவுகளை நிரப்ப வேண்டி, 'ச', 'வை', 'ஹி' 'ஹ' முதலியவைகளைப்போல 'து' என்பதையும் ஓர் அசையாகக் கொள்வது வழக்கம். சிற்சில விடங்களிலோ "பேதேவதாரணே து ஸ்யாத்" என்னும் நிகண்டுப்படி வேற்றுமை, விசேஷக் குறி, இவற்றை உணர்த்துதல் பொருட்டு இத்'து' என்பது வருதலுமுண்டு. ஸ்ரீ ராமாயணத்தில் பாலகாண்டத்தில் ஒன்பதாவது சருக்கத்தில் மூன்றாவது சுலோகமாயுள்ள,

"காச்யபஸ்யதுபுத்ரோஸ்தி
விபண்டக இதிச்ருத:
ரிச்யச்ருங்க இதி க்யாத:
தஸ்ய புத்ரோபவிஷ்யதி"

என்பதில் இத்'து'வைக் காண்கிறோம். இதற்கு விசேஷக் குறிப்பு ஏதுமிருப்பதாக உரையாசிரியர்களுள் ஒருவரும் கூறவில்லை. அவர்கள் அதை ஓர் அசையென்றே நினைத்து விட்டார்கள்போலும். ஆனால், இச்சுலோகத்தைக் கேட்ட கம்ப நாட்டாழ்வாரோ, அதை அப்படி அனுதரவு செய்யவில்லை. அவர் பாடுவதைப் பாருங்கள்.

'மாசறு சுரர்களோடு மற்றுளோர் தமையு
மீன்ற
காசிபனருளு மைந்தன் விபண்டகன்
கங்கை சூடு
மீசனும் புகழ்தற் கோத்தோனிருங்கலை
பிறவு மெண்ணிற்
றேசுடைத் தந்தை யொப்பான் திருவருள்
புனைந்த மைந்தன்.'

இப்பாடலில், 'மாசறு சுரர்களோடு மற்றுளோர் தமையுமீன்ற காசிபன்' என்ற துவக்கத்தை நினைத்திடுங்கால், வால்மீகத்தில் 'காச்யபஸ்யது' என்னும் போது, 'து'வினுள்ள விசேஷக் குறிப்பு (அவதாரணம்சம்) யாதாகுமென்பது நன்கு விளங்கும். அதாவது: உலகங்களில் பிராணிவர்க்கங்களைப் பெருக்கும்பொருட்டு நான்முகக் கடவுளின் சிந்தைப் புதல்வர்களாக அத்ரி, காசிபர் முதலிய சிருஷ்டிப்ரஹ்மாக்கள் அவதாரம் செய்தார்கள். குற்றமற்ற தேவர் குழாங்களையும், 'கசட்டுறு வினைத்தொழிற் கள்வராயுழல் அசட்டர்கள்' இவருடன் நீங்காது உறவு பூண்ட தானவக் கூட்டங்களையும், தானொருவரே ஈன்று, மேலுலகும் கீழுலகும் நிரம்பச் செய்து, தனக்குரிய சிருட்டிக்கடனை நிறைவேற்றியதால், மற்றெல்லாப் பிரஜாபதிகளைக் காட்டிலும் காசிபருக்கு ஏற்ற மேற்பட்டது. இதுவே இத் 'து'வின் பொருளென்பது கம்பர் கருத்து. பிறகு "அருளும் மைந்தன் விபண்டகன்" என்பதால், "புத்ரோஸ்தி விபண்டக இதிச்ருத:" என்பதற்கு முந்தி, இத்'து'வின் இருப்புபற்றி, அதற்கிசைந்த விசேஷப் பொருள்கள் உணர்த்தப்படுகின்றன. சுவர்க்கம், பாதாளம் இவற்றிலுள்ள சுராசுரர்களைக் காசிபர் ஈன்றார். விபண்டகரையோ வென்றால், அவர், இப்பூவுலகு புனிதமாகுமாறு, அருளினார். காசிபருக்கு சுராசுரர்களிடத்தில் 'இவன் என் மைந்தன்' (அயம் மே புத்ர:) என்று தனித்ததோர் அபிமானம் இல்லை. விபண்டகர் ஒருவரிடமே அது நிலைபெற்று நின்றது. இவ் விதமெல்லாம் 'து'வின் பொருளை விளக்கி வருங்கால், நம் புலவர் பிரானுக்கு அத்ரி, தன் நேத்திரத்தினின்று சந்திரனை இவ்வுலகிருளை நீக்குவதற்கருளிய கதை, நினைவுக்கு வந்தது போலும். அச் சந்திரனையும் விபண்டகர் தாழ்வுபடச் செய்தவர் என்று தோற்றுமாறு, 'ச்ருத:' என்று முதல் நூலில் இருப்பதையும் கம்பர் மனத்திட்டு, "கங்கை சூடுமீசனும் புகழ்தற் கொத்தோன் இருங்கலை பிறவு மெண்ணிற் றேசுடைத் தந்தை யொப்பான்" என்று பாடினார். அத்ரி பெற்ற சந்திரன் கலைகளில் ஒன்றைக் கங்கையுடன் கூட ஈசனொருவரே தன் சிரத்தாற் றாங்கினார். இவ்விபண்டகரையோ அவ்வீசன் மட்டுமல்ல, மற்றுள்ள மூர்த்திகளும் தலையசைத்துப் புகழ்வார்கள். சந்திரன் கலைகள் வளருவன தேய்வனவாய் புற இருளைமட்டும்

போக்க வல்லவை. விபண்டகர்பாலுள்ள கலைகளோ, அவர் பிதாவை ஒக்க, நித்திய ஒளிவாய்ந்தனவாய் அகத்தினுட் கிடக்கும் அந்தகாரத்தையும் அற்றுப்போம்படி செய்யும் பெருமை பெற்றன. சந்திரன் புதல்வனை புதனையும் விடப் பன்மடங்கு ஞான அருள் புனைந்த மைந்தனையும் இவ் விபண்டகன் பெற்றார் என்று சொல்லி இப்பாடல் முடிகிறது.

'கவிஞரே கவிஞரை அறிவர்' என்பதின் உண்மை இவ்வாறாகும். வால்மீகியிடத்தில் கம்ப நாட்டாழ்வாருக்கு இருந்த அளவிறந்த பக்தியும் இதனால் புலப்படும். "ருஷீணாம் புநராத்யானாம் வாசம் அர்த்தோநுதாவதி" என்னும் முதுமொழி பழுதாகாது. வால்மீகி மகரிஷியின் 'து'வைத் துரத்தி வந்த பொருள் இவ்வகைப் பட்டதென்று இவ்வாழ்வார் நமக்கருளியது மிக்க அரியது. 'கம்ப சித்திரம்' என்பது, கம்பரின் கவிதையை மட்டுமல்ல, ஆன்றோர் வாக்கில் ஆழ்ந்துள்ள பொருள் களைக் கண்டு உணர்த்துவதில் அவருக்கிருந்த சில்பஸ்ரீயையும் சிறப்பிப்பதாகும்.

மேக தர்சனம்.

(மாயக்கூத்தன் எழுதியது.)

காளிதாஸ மஹாகவி "புகையும் சோதியும் நீரும் காலும் சேர்ந்த மேகம் எங்கே? உயிர்களுக்கே உரியனவாய் தூது செல்வதற் கேற்ற காரணங்கள் எங்கே?" என்று பாடியுள்ளார். அத்தகைய மேகத்தைத் தரிசிப்பதால் ஆழ்வார்க்குண்டாம் எண்ணங்களை இங்கே தொகுத்துக் காட்டுவேன்.

மேகத்தின் தோற்றப் பொலிவு ஆழ்வார்க்குத் திருமாலின் தோற்றத்தினை நினைப்பூட்டுகின்றது: ஊழி முதல்வன் உருவம்போல் மெய்கறுத்திருக்கின்றது மேகம்; அவன் கையிலுள்ள ஆழிபோல் மின்னுகின்றது; அவனுடைய வலம்புரிபோல் நின்று அதிர்கின்றது; அதிர்ந்து, தாழாமே சார்ங்கமுதைத்த சரமழை போலே மழை பொழிகின்றது, இவ்வாறு பலவகையிலும் பரம ஸாரூப்யம் பெற மேகங்கள் எத்தவம் செய்தனவோ என்று பெருவியப்படைகிறார் ஆழ்வார்: அம் மேகங்களை நோக்கி, 'மேகங்களோ! உரையீர்! திருமால் திருமேனி யொக்கும் யோகங்கள் உங்களுக்கு எவ்வாறு பெற்றீர்? உயிரளிப்பான் மாகங்களெல்லாம் திரிந்து நன்னீர்கள் சுமந்து நுந்தம் ஆகங்கள் நோவ வருத்தும் தவமாம் அருள் பெற்றதே?' என்று.

காக்கும் இயல்பினனான கண்ணனை அனுகரித்து உயிர்களை அளிப்பதற்காக திக்குக் களிலே எல்லாம் திரிந்து, மெய்வருத்தி நோன்பு நோற்பவர்போலவே, நன்னீரைச் சுமந்து தானும் மலையேறி அவனது அருளைப் போலப் பொழியும் தன்மையாலே தான், மேகமும் 'கண்ணன் பால் நன்னிறம் கொள்'வதாயிற்று. இப்படிச் செய்யும் தவத்தை நினைந்து வியந்தே, இவ் வாழ்வார் "தங்கா முயற்றியவாய்த் தாழ் விசும்பின் மீது பாய்ந்து, எங்கே புக்கு எத்தவம் செய்திட்டன கொல்?" என்கிறார், பெரிய திருவந்தாதியிலே.

இவ்வாறு மேகத்திற்கு ஏற்பட்ட ஸாரூப்யத்தாலே மயங்குகிறாள் ஆழ்வாராகிய நாயகி. "தொக்க மேகப் பல் குழாங்கள் காணுந்தோறும் தொலைவன் நான்" என்று தன்மையிலும், "கரும் பெரும் மேகங்கள் காணில் கண்ணன் என்று ஏறப் பறக்கும்" என்று திருத்தாயார் சொல்லிலும், இக்கருத்தை ஆழ்வார் விளக்குகிறார். பின்பு தூநீர் முகிலுக்கும் திருமாலுக்கும் உள்ள வேற்றுமையையும் எடுத்துக் கூறித் திருமாலாகிய காளமேகத்தின் சிறப்பினைக் காட்டுகிறார்: "படிசேர்மகரக்

குழைகளும், பவளவாயும் தோள்களும், துடி சேரிடையும் அமைந்ததோர் சுடர்கொள்வடிவும் தேநீர்க்கமலக் கண்களு முடைய வண்கார் நீல முகிலாகும் கண்ணபிரான்" என்று.

'பெண்டிர் கார் காலத்திலே தம்மைப் பிரிந்த கணவரை நினைந்து ஏங்குவர்' என்று பாடுவது கவிமரபு. அம்மரபு ஆழ்வார் வாக்கிலே அழகு பெறுகின்றது. தான் மறந்தாலும், தனக்குத் தன் நாயகனை நினைப் பூட்டுகின்றது அல்லவா கார்மேகம்? மேகத்தைக் கண்டபோதெல்லாம் 'என் பிரான் உருவே' என்று ஆழ்வாருடைய மனமானது அவரை விட்டுப் பிரிந்து செல்கின்றதாம்; இப்படிக் கார்மேகத்தைக் காணும் தோறும் தொலைவதும் பின்பு மீண்டு வருவதுமாய் ஊசலாடுகின்ற இவரது உயிர்க்கு மேகங்கள் இயமனுகின்றன; அதலால், ஆழ்வார் மேகங்களை நோக்கி, 'கோட்டிய வில்லோடு மின்னு மேகக் குழாங்கள்காள்! காட்டேன் மின் நும் உரு! என் உயிர்க்கு அது காலனே' என்று பிரார்த்திக்கிருர். அந்திப் பொழுதிலே, கார்மேகங்கள் சிவந்து தோன்றுகின்றன; ஆழ்வார் அப்பொழுது, "செக்கர் நல் மேகங்கள் சிதைக்குமாலோ!" என்று ஆற்ருமையால் அலற்றுகிருர்.

ஆழ்வார் மூன்று பிரகாரமாக மேகத்தைப் பாடுகிருர். முதலில், திருமாலை யொத்த நிறத்தைக் கொண்டாடி, 'இது இந்நிறம் பெற என்ன தவம் செய்ததோ' என்று வியப்படைகிருர்; பின்பு, மேகத்திற்கும் திருமாலுக்குமுள்ள ஒப்புமைவேற்றுமைகளைக் கண்டறிந்து இன்புறுகிருர். கார்மேகமானது, எருவிட்டு, நீர்பாய்ச்சி, வித்து விதைத்த வயலிலே மழைபொழிந்து பயிரை வளர்க்கும்; திருமாலாகிய காளமேகமோ, காதல் என்னும் பயிரைக் கடல்போலச் செழித்துத் தோன்றுமாறு விளைவிப்பதில், எல்லாப்பிரகாரத்தாலும் உதவுகின்றது; செங்கனிவாயும் முறுவலும் நான்கு தோள்களும் கமலக்கண்களுமுடைய இந்தக் காளமேகம் முதலிலே ஊரவர் கவ்வைப் பேச்சாகிய எருவை இட்டுத் தலைவியிடத்தே காமப்பயிர் தோற்ற உதவுகின்றது; அன்னைமார் ஹிதோபதேசங்களாகிய சொற்களால் தலைவியின் மனமானது பக்தியாகிய பாசனத்தால் பதப்படுகின்றது, எருவிட்டு நீர்பாய்ச்சிய வயல் போலே. பின்பு, அந்தக் காளமேகமே ஈரநெல் வித்தாகிய பிரேமாங்குரங்களை அவளுடைய மனதிலே விதைக்கின்றது; உரிய காலத்திலே மேகம்போல் அருள் பொழிந்து முழுமேனி காணும்படியான நல்விளைவாக்குகின்றது, ஆழ்வாரின் நெஞ்சப் பெருஞ் செய்யிலே. இவ்வாறு தன் நெஞ்சிலே விளைந்த காதற்பயிரைத் தன் தோழிக்குக் காட்டுகிருர் ஆழ்வாராகிய நாயகி.

"ஊரவர் கவ்வை யெருவிட்டு, அன்னை
சொல் நீர் படுத்து
ஈரநெல் வித்தி முளைத்த நெஞ்சப் பெ
ருஞ்செய்யுள்
பேரமர் காதல் கடல் புரைய விளைவித்த
காரமர் மேனி நம் கண்ணன், தோழீ,
கடியனே"

என்று. மூன்ருவதாக, பிறநாயகிகளினும் அதிகமாகத் தாம் மேகதரிசனத்தாலே படும் துன்பங்களைத் தாங்க இயலாது, மேகங்களை நோக்கி, 'உங்கள் உருவங்களைக் காட்டாதீர்கள்' என்று அவைகளை வேண்டுகிருர்.

இவ்வாறு ஆழ்வார்க்கு வியப்பையும் இன்பத்தையும் துன்பத்தையும் தருவதாகிறது மேகதர்சனம்.

புதுக் கற்பனைகள்.

கடிகாரங்கள்.

(கை. சு. வே.)

நான் கடிகாரமே வாங்குகிறதில்லை — விலைக்கானாலும் சரி, இனாமானாலும் சரி; ஒரே ஒருதரம், என் பணக்கார மாமா ஒருத்தர் நான் ஏதோ பரீக்ஷையில் தேறினதற்காக ஒரு சட்டைப்பைக் கடிகாரம் வெகுமதியனுப்பினார். என் தகப்பனாரிடம் அதே மாதிரி ஒரு கடிகாரம் வெகுநாளாய் ஓடாமலிருந்தது. இரண்டையும் சேர்த்து வைத்தால் ஒன்றைப் பார்த்து ஒன்று ஓடப் பழகட்டு மென்றெண்ணி, இரண்டினுடைய தலைத்திருகுகளையும் கழற்றி எறிந்துவிட்டு, முட்களையும் கண்ணாடிகளையும் பிடுங்கி எறிந்துவிட்டுப் பழைய குடைக்கம்பி ஒன்றை மையபத்தாணிகளில் மாட்டி, 'ஸைகில்' என்கிற 'மிதிவண்டி' மாதிரி என் சொந்த உபயோகத்துக்குச் செய்து கொண்டேன். ஏறி உட்கார்ந்து ஓட்டமுடியாவிட்டாலும் கையினால் தள்ளிக் கொண்டே போனால் எவ்வளவு தூரம் வேண்டுமானாலும் ஓடும்; பாதி வழியில் சக்கரத்தின் காற்றுப் பட்டையில் ஆணிதைத்து விட்டதாக நினைத்துக் கொண்டு, மனதிற்கு சமாதானம் சொல்லிக் கொண்டேன்: அடுத்த பரீக்ஷை தேறு முன் என் மாமாவும் இறந்து விட்டார். ஆனால் அன்று என் முதுகில் பதிந்த என் தகப்பனார் கை முத்திரையே கடிகாரங்கள்மேல் நான் கொண்டிருக்கும் தீராப் பகைக்கு ஆரம்பம்.

விளையாட்டை விட்டு, உள்ளபடியே யோசித்துப் பார்ப்போம். என் போன்ற வொரு நோயற்ற வாழ்வெனுங் குறைவற்ற செல்வம் பெற்றவனுக்கு அவனது உடலில் அவ்வப் பொழுது காணும் இயற்கை உணர்ச்சிகளே காலத்தை அணுத் தவறாது குறித்தற்குரிய கருவியாகும். பூமி தன்னைத் தானே சுற்றிக் கொண்டு இரவு பகலுண்டாக்குவது போலும், கோழி கூவிப் பொழுது விடிவது போலும், தாமரை யிதழ்வாடிப் பொழுது சாய்வது போலும், நம் தேக மனோதாதுக்களின் அணுக்கள் சலித்துச் சுழன்று ஆடியோய்ந்து கணக்காய்ப் பொழுதுபோகச் செய்கின்றன. பூமியின் சுழற்சியையும் கோள்களின் இடப்பெயர்ச்சியையும் கடிகார குண்டு, சுருள் தகடுகளின் புரட்சியையும் எவ்வளவு நம்பலாமோ, அதற்குக் குறையாமல் தூய உள்ளத்திற் காணக்கூடியவற்றையும் நம்பலாம். நான் தூங்கி எழுந்தால் ஐந்துமணி

தான்; ஸ்நானம் செய்தால் ஆறு மணிதான்; வயிற்று நிஷ்டை நேர்ந்தால் ஏழுமணிதான்; தினசரி பாராயணத்தி லுட்கார்ந்தால் எட்டு மணிதான்; இலையிலுட்கார்ந்தால் ஒன்பதரை மணிதான்; அலுவலுக்குப் புறப்பட்டால் பத்துமணி தான்; இடைநேரம் பசித்தால் ஒருமணிதான்; சற்றுக் கண்ணயர்ந்தால் இரண்டு மணிதான்; காலை வீசிப் போகவேண்டும் போலிருந்தால் மாலை ஐந்து மணிதான்; சந்தியா வந்தனத்துக் குட்கார்ந்தால் ஆறு மணிதான்; சாப்பிடப் புகுந்தால் ஏழு மணி தான்; ஏதாவது இலக்கியப் பயிற்சி தேடினால் எட்டு மணிதான்; மார்பில் வைத்த புஸ்தகம் நழுவி விழுந்தால் ஒன்பது மணிதான்; இதுவே இயற்கைக் கடிகாரம். நோயுற்றவனுக்கும், அது சற்று நாகரிகந் தெரிந்த நோயானால், மரியாதையாய் டாக்டர் சொல்லிய கணக்குப்படி குறிப்பிட்ட நேரத்திலேதான் தலைகாட்டும்; சொல்லாமல் வருகிறது, சொல்லிக் கொள்ளாமற் போகிறது என்கிற அநாகரிக வழக்க மெல்லாம் அதனிடம் இராது. கடிகாரத்தைப் பார்த்து மருந்து சாப்பிட வேண்டியவர்கள் வேண்டுமானால் கடிகாரத்தைத் தேடட்டும்; மற்றவர்களுக்கு அது தேவையில்லை என்பது திண்ணம்.

ஆனால் சரீர மனோவிகாரங்களைக் கொண்டே மணி, நாழிகை முதலிய பெரும் பகுதிகளை ஒருவாறு கணக்கிடலாமென்றாலும், நிமிஷம், வினடி முதலிய சிறிய பகுதிகளைக் கணக்கிட முடியாதென்று ஆக்ஷேபிக்கலாம். அதற்கும் சமாதானமுண்டு. ஒருவனது பசி, தாகம், ஜீர்ணம், தூக்கம், கனவு, உணவு எல்லாவற்றையும் கால் அரை முக்கால் எனப் பகிர்ந்து திட்டமாய்ச் சொல்லி விடலாம். மஞ்சள் வெயிலுக்கும், இளவெயிலுக்கும், கடுவெயிலுக்கு மிடையே எவ்வளவு படித்தரங்கள் ஏற்படுத்திக் கொள்ளக் கூடுமோ, அவ்வாறே பனிக் கட்டியின் சீதளத்திற்கும் உலை நீரின் கொதிப்பிற்கு மிடையே நாக்கும் நுனி விரலும் எவ்வளவு படிகள் கட்டி வைத்திருக்கின்றனவோ, அவ்வளவு படிகள் இளம் பசிக்கும், கொடும் பசிக்கும் நிறைந்த வயிற்றிற்கு மிடையேயு முண்டு. கடிகாரப்படி ஐந்து நிமிஷத்தில் தோன்றி மறைந்து போகிற ஒரு கனவின் இனிய துவக்கத்திற்கும் விபரீதமான முடிவிற்கு மிடையே வருஷங்களையே புகுத்தி விடுகிறோமே?

ஆக்ஷேபம்:—நீர் சொல்வதை யெல்லாம் ஒப்புக்கொண்டாலும் கடிகாரத்தைப் போல் வினடிகளைக்கூட உம்மால் கணக்கிட முடியுமா?

சமாதானம்:—இந்த ஆக்ஷேபகன் ஆத்திரப்படுவதை உணர்ந்தே விடைதேடி வைத்திருக்கிறேன். ஆனால் அவ்விடை ஒரு வினை வருவாயிருக்கும்: அதாவது, மாத்திரை, நொடி, இமை, சூக்ஷமம், பிராணன் முதலிய அதி நுட்பகாலப் பகுதிகளை உம் கடிகாரங் காட்டுமா?

ஆக்ஷேபம்.—முடியாதென்றாலும், அவ்வளவு நுட்ப அளவுகள் நமக்கு ஒருபோதும் தேவையானதில்லை.

சமாதானம்:—வினடிகள் மட்டும் (கிண்டிப் பந்தயங்கள் நீங்க) எப்பொழுது தேவையாகின்றன? அப்படியேதானாகட்டும். இரண்டு கடிகாரங்கள், இரண்டு வைத்தியர்கள், இரண்டு ஜோஸ்யர்கள், இரண்டு மேதாவிகள் வேறுபாடின்றி ஒரே முடிவுக்கு வந்ததுண்டா? என் யஜமானர் கச்சேரிக்குப் புறப்படும் போதெல்லாம் தன் கடிகாரத்தைப் பார்த்துவிட்டு எதிர் வீட்டுக் கடிகாரத்தையும் சேவகனை அனுப்பிப் பார்த்துத் தெளிந்த பிறகுதான் புறப்படுகிறார். இதிலொரு வேடிக்கை; எதிர் வீட்டு யஜமானரும் அவ்வாறே செய்கிறார். ஆனால் இது விஷயம் இரண்டு வீட்டு சேவகர்களுக்கு மட்டும் தெரியுமே யொழிய யஜமானர்களுக்குத் தெரியாது. இரண்டு பேருமாக என்றைக்காவது ஒரே படுகுழியில் சேர்ந்து விழுந்தார்களானால் அவர்களுடைய பரஸ்பர சல்லாபம் கொஞ்சம் ரஸமாய்த்தான் இருக்க வேண்டும்; ஆனால் நாம் அதைக் கேட்கக் கொடுத்து வைக்காவிட்டாலும், ஒருவாறு உணர்ந்து கொள்ளலாம். கால் மணிக்குக் குறைந்த வித்தியாசமுள்ள இரண்டு கடிகாரங்களைக் காட்டுங்கள். இன்றைக்கு இரண்டையும் ஒரே நேரம் காட்டித் திருத்தியமைத்தாலும் நாளைப்பொழுது விடியுமுன் — 'இரண்டுபேர் அண்ணன் தம்பி, ஒரே வயிற்றிற்றான் தோன்றினர்; பெற்றோர் தேடியதிற் சமபாகம் பெறுகின்றனர்' என்கிற கதைதான்.

ஆக்ஷேபம் :—தினசரிப்பொழுது தெரிந்து கொள்வதற்கு மட்டும் இப்பொழுது பேச வரவில்லை. ஆனல் ஒரு குறிப்பிட்ட நுட்ப நேரத்துக்குள் ஒரு செயலை முடிக்கவேண்டுமென்றுலோ? அல்லது அந் நேரத்தை அளந்து கொடுக்கச் சொன்னுலோ?

சமாதானம் :—ஆம், அதற்குத்தான் சங்கீதத்தில் லயஞ்ஞானம் என்று பெயர். இசையுணர்ச்சியுள்ள எவனுக்கும் இது பெரிதல்ல. அஃதில்லாத விடத்து ஆசிரியரைத் தேடி தாள ஜாதி வரிசைகள் கற்றுக்கொள்ள வேண்டியதுதான். பூர்வ புண்ணிய வசமாக ஞானம் ஏற்படலாம்.

ஆம், நான் ஸௌககால மனிதன்தான். மேல் ஸ்தாயிகளைக் காட்டிலும் கீழ் ஸ்தாயிகளில் விசேஷ விருப்புள்ளவன். நீங்கள் துரிதகால மனிதர்களாயிருக்கலாம்; துரித காலம் பாடிவிட்டால் அப்புறம் மங்களம் பாடவேண்டியதுதான் என்பது எல்லோருக்கும் தெரிந்த ஸம்பிரதாயம். நான் துரித காலம் வேண்டாமென்று சொல்லவில்லை; துரிதகாலம் மட்டுமே பாடவேண்டுமென்பாருண்டானல், நான் கச்சேரியைவிட்டு எழுந்து போய் விடுவேன்.

பசுக்களின் மகாநாடு.

(அம்மணி அம்மாள் எழுதியது.)

ஒருநாள் ஒரு பெரிய பணக்காரர் வீட்டுச் சீமைப்பசு, மேயப் போனபோது, இடையர்களின் அரை வயிற்றுத் தீனி தின்று மெலிந்த மாடுகளைப் பார்த்து, "நீங்கள் என் இப்படி மெலிந்து இருக்கிறீர்கள். உங்களுக்கு உங்கள் யஜமான் தீனி போடுவதில்லையா? தற்காலத்தில் எல்லாவற்றிற்கும் மகாநாடு கூட்டி, தங்கள் தங்கள் குறைகளையும், என்ன என்ன வேணுமென்பதையும் தெரிவித்துக் கொள்ளுகிறுர்களே? 'ஸாரதா பில்—குழந்தைக் கைம் பெண்களின் கூட்டம்' 'மறுவிவாகம் செய்ய வேணுமென்று பாவிப் விதவைகளின் கூட்டம்' 'புருஷர்கள் நம்மை ரொம்ப கட்டுப்படுத்துகிறுர்கள்; அவர்களுக்கு நாம் வேளா வேளையில் சமைத்துப் போடக்கூடாது; குழந்தை பெறக்கூடாது என்னும் வீரஸ்திரீகளின் கூட்டம்' இவைபோன்று மனிதர் முன்னுக்கு வரும்படியான அநேக கூட்டங்கள் வருஷா வருஷம் டிஸம்பர் மாதக் கடைசியில் நடப்பதை நீங்கள் கவனிக்கவில்லையா? இந்த மனிதர்கள் நமது பாலை (நமது குட்டிகளுக்குத்தான் கொடுக்கிறதில்லை; மன்னித்து விடுவோம்.) தங்கள் குழந்தைகளுக்கும் கொடுக்காமல், காபி என்று சொல்லுவதில் கலந்து குடித்து விடுகிறுர்கள். அதுதான் போகட்டுமென்றுல், நாம் சாப்பிடும் ஆகாரத்தில் கூட கையிட ஆரம்பித்து விட்டார்கள். "வைடாமின்" "வைடாமின்" என்று சொல்லிக்கொண்டு நமக்கு வடித்த கஞ்சிகூட அகப்படாதபடி 'குக்க'ரில் சமையல் செய்கிறுர்கள். கறிகாய்க் காம்புகூட விடாமல் தின்கிறுர்கள். அரிசித் தவிடு கிடைத்துக்கொண்டிருந்த காலம் போய், இப்போது உமித்தூள்தான் போடுகிறுர்கள். பிண்ணுக்கையெல்லாம் சீமைக்கு ஏற்றியனுப்பி விடுகிறுர்கள். இப்படி யெல்லாம் செய்கிறவர்களுக்கு தெய்வம் ஒத்தாசை செய்யுமா? அதனுல்தான் நமது பால் சுண்டி விட்டது. "எளியாரை வலியாரடித்தால் வலியாரைத் தெய்வமடிக்கும்" என்பது அவர்கள் விஷயத்தில் பலித்து விட்டது. சீமையிலிருந்து ஒரு டாக்டர் வரப் போவதாகவும், அவர் இந்தியாவிலுள்ள புல் தினுசுகளை ஆராய்ச்சி செய்து, 'எந்தப் புல்லைத் தின்றுல் மனிதன் சரீரத்தில் "வைடாமின்" சேரும், என்றும், சிரஞ்சீவியாய் வாழலாம்' என்று ஆலோசனை சொல்லுவாராம். "காமதேனு வம்சத்

தைச் சேர்ந்த பசுக்களே! நீங்கள் எல்லாரும் தலைநிமிர்ந்து ஒன்று சேர்ந்து அந்த டாக்டர் இங்கே வந்து 'லெக்சர்' செய்வதைத் தடுத்து விடும்படி கவர்மெண்டுக்கு, ஒரு கூட்டம் கூடி, தெரிவித்துக் கொள்ளுங்கள்" என்று சொல்லிற்று. இதைக் கேட்ட மற்றப் பசுக்கள் அப்படியே செய்கிறோ மென்றும், அந்த வாயில்லாப் பசுக்கூட்டத்திற்கு நீங்கள் தான் தலைமை வகிக்கவேண்டு மென்றும் சொல்லி மேயப்போயின.

சில நாட்களுக்குப் பிறகு இந்தப் பசுக்களின் மகாநாடு கூடி, தங்கள் ஹீனஸ்திதியின் காரணம், முன்னேற்றத்திற்கு வேண்டிய முயற்சிகள் முதலிய விஷயங்களைப்பற்றி, வாய்விட்டுப் பேசவே, இதுபோன்ற மகாநாடுகளின் வழக்கத்தை அனுஸரித்து சில தீர்மானங்களும் அங்கீகரிக்கப்பட்டன.

'மனிதர்களைக் கண்டித்துப் பேசுவதற்கு இடம் இருப்பதால், இந்த மகாநாட்டிற்கு மனிதர்களுக்குப் பிரவேசமே இல்லை'யென்ற அறிக்கையை மீறி, உயிருக்குத் துணிந்து உள் நடந்த விஷயங்களைச் சுருக்கி, முக்கிய பாகங்களின் ஸாரத்தை மாத்திரம் நமக்குக் குறித்து அனுப்பின ரிபோர்ட்டரின் தைர்யம் மெச்சத் தகுந்தது. ரிபோர்ட் பின் வருமாறு:—

எந்த ஸமயத்தில், அவைகளின் சட்டத்தை மீறி நான் உள்ளே நுழைந்ததைக் கண்டு பிடித்து, என்னைக் கொம்புகளால் குத்திக் கொன்று விடுமோவென்று விசாரப்பட்டுக் கொண்டே யிருந்ததால், பேச்சுகளும், தீர்மானங்களும் அரைகுறையாய் காதில் பட்டு, ஒரு பாகம்தான் நான் எழுத முடிந்தது. இருந்தாலும், மகாநாட்டின் முக்கிய கருத்தை அறிய நான் எழுதியிருப்பது போதும்.

'பசுக்களுக்கும் மனிதர்களுக்கும் ஏற்பட்டிருக்கும் ஸம்பந்தம் வெகு நூற்றுண்டுகளானது என்றாலும், மனிதர்கள் தங்கள் சுயநலத்தையே ஒட்டி பசுக்களைப் பாதுகாத்து வருவதால், பசுக்களின் முன்னேற்றத்தை அவர்கள் கவனிப்பதேயில்லை. ஆனால், 'பசுக்களின் க்ஷேமத்திற்காகவே அவைகளை வளர்த்துப் போஷிக்கிறோம்' என்ற பேச்சு மாத்திரம் அடிக்கடி உலாவிவருகிறது. 'வேண்டாம் ஐயா, எங்களை விட்டுவிடுங்கள். நாங்கள் எப்படியாவது போகிறோம்' என்றாலும் விடுவதில்லை.

'உங்களுக்கு வேண்டியது எங்களுக்குத்தான் தெரியும் என்ற பதில் ஸுலபமாய்க் கிடைத்து விடுகிறது. ஆகையால் முழு ஸுதந்திரம் பெற நமக்கு ஸமீபத்தில் ப்ராப்தியில்லா விட்டாலும், நமக்கு இப்போதே வேண்டிய சீர்திருத்தங்களை நாம் கவனிக்க வேண்டியது. நமக்கு ஏற்படும் உபத்திரவம் நாம் கொடுக்கும் பாலாலேயே.

'மனிதர்களின் கெட்ட நடத்தையைப் பாருங்கள். பால் கொடுக்காமல் கன்றுக்குட்டியைக் கொல்லுவது மாத்திரமல்ல. அதன் தோலில் வைக்கோலை அடைத்து, உயிருள்ள கன்றுபோல் நம்மிடத்தில் வைக்க, இந்த மோசத்தைக் கூட அறியச் சக்தியற்ற நாம் பாலைக் கொடுத்து வருகிறோம். ஆனால் இந்த விஷயத்தில் நம்மிடத்தில் குறை இருப்பதால் தானே இப்படி நடக்கிறது. ஏமாற ஜந்துக்கள் இருந்தால் அல்லவா மனிதர்கள் இப்படி ஏமாற்ற முயலுவார்கள்? ஆகையால், இப்படி ஏமாறுமல் ஸ்திரீகளுக்கு விவேகம் ஏற்பட உயர்தாக் கல்விதான் மருந்து. இந்தக் கல்வியில் கன்றுக்குட்டி செத்ததா உயிருள்ளதாவென்று அறியும் சக்தியை உண்டாக்குவது முக்கிய கருத்தாயிருக்க வேணுமென்று, கல்வி இலாகாவுக்கு ஸர்க்கார் உத்திரவு செய்து, இந்த விஷயத்தில் போட்டிப் பரீக்ஷைகள் வைத்து தேறுகிறவர்களுக்கு பரிசுகள் வழங்கவேண்டும்.

'கன்றுகளுக்குக் கொடுத்து மிஞ்சின பால் தான் மனிதர்களுக்கு என்று தீர்மானம் செய்யவேண்டும்! இந்த தீர்மானம் ஒரே மனதாய் அங்கீகரிக்கப்பட்டது. இரண்டாவது நம்மிடம் மனிதர்கள் ஸரியாய் மதிப்பு வைப்பதேயில்லை. நம்மால் லாபம் அடைவதில் குறைவு இல்லை. இருந்தாலும், என்னடா, மாடு மாதிரி யிருக்கிறாய் என்று அவர்களுக்குள் ஒருவரை யொருவர் ஏளனமாய்ப் பேசுகிறார்கள். இதற்குப் பரிகாரமாய், நாமும் "என்ன! மனிதன்போல் ஈவிரக்க மில்லாமல்" என்று சொல்லிவிடலா மென்றாலும், சில விஷயங்களில் நம்மை ஏளனஞ் செய்யச் சரியான காரணங்கள் இருக்கின்றன.

'உதாரணமாக' ஒரு ஸம்ஸ்கிருத கவி எழுதுகிறார் "மனிதரே, உங்களில் புருஷர் எழுபது வயது வரையிலும் அடுத்தடுத்தோ ஒரே ஸமயத்திலோ அநேக கல்யாணங்கள் செய்து கொள்வதுதான் ஸரி. இப்படிப் பண்ணிக் கொண்டால் எத்தனை பார்யைகளைக் காப்பாற்றுவது என்று விசாரப்பட வேண்டாம்; ஒரு காளை எத்தனை பசுக்களை பார்யைகளாய்க் கொண்டாடுகிறது. அந்தப்பசுக்களெல்லாம் தானாய்ப் பிழைக்கின்றனவே தவிர, காளை ஸம்பாதித்துப் போடுகிறதா? இதை உதாரணமாய்க் கைப்பற்றுங்கள்" என்று. இப்படிக் கேலிபண்ணும் பதவி பெற்ற காளைகளுக்குச் சரியான புத்தி புகட்டவேண்டும்.

'ஸோவியட் ரஷ்யாவில் கல்யாணம் நடக்காமலே குழந்தை பிறந்தாலும் தகப்பன் குழந்தைக்காகத் தன் வரும்படியில் ஒரு பாகம் கொடுக்கவேணுமென்று சட்டம் வைத்திருக்கிறார்களாம். அப்படியே நம் ஜாதியிலும் தகப்பன் காளை குழந்தைக்காக புல் சேகரித்துக் கொடுக்க வேணுமென்று தீர்மானிக்க வேணும். இப்படி நடந்தால் நம்முடைய பாதுகாப்பிற்காக சொந்தக்காரன் மனதில்லாமல் போடும் சுவல்பத்தீனி போதாமல் நாம் இப்போது படும் கஷ்டம் ஒருவாறு நீங்கும்.'

இந்தத் தீர்மானமும் அங்கீகரிக்கப்பட்டது.

மூன்றாவது தீர்மானம். இது முன் நோட்டீஸ் கொடுக்காமல் கொண்டு வரப்பட்ட தீர்மானம் ஆனதால், பேச்சு நடுவில் அநேகம் பசுக்கள் தடுத்துப் பேசினது மாத்திரம் அல்ல, முடிவில் இத்தீர்மானம் கலகத்துக்கு இடம் கொடுத்ததால், இந்தத் தீர்மானம் முடியுமுன் நான் எழுந்துவந்து விட்டேன். ஆகையால் இதைப்பற்றித்தான் நான் கடைசியாய் எழுத முடியும். இதற்குமேல் நடந்த விஷயம் எனக்குத் தெரியாது.

'நம் கனம் பொருந்திய அக்கிராஸனாதிபதியே சீமையிலிருந்து மனிதர்கள் ஒரு டாக்டரை வரவழைக்கப் போவதாய்ச் சொன்னார். நாமும் ஏன் ஒரு நல்ல கலப்பில்லாத சீமைப்பசுவை, நம்முடைய க்ஷேமத்தைக் கவனிப்பதற்காக வரவழைக்கக் கூடாது.!' என்றது ஒரு பசு.

"பேஷ்! பேஷ்! ஸரியான யோசனை" "வெட்கம்! வெட்கம்! சீமையிலிருந்துதானா புத்திமதி தேடவேண்டும்" என்ற சப்தம். "ஏன் நம்மைவிட புத்திசாலிகளென்று சொல்லிக்கொள்ளும் மனிதர்கள் கூட சீமையிலிருந்து வரவழைக்கவில்லையா?" "மனிதர்கள் நாசமாய்ப் போகட்டும்" என்ற கத்தல். இப்படிக் குழப்பம் கிளம்பினபிறகு புத்தியற்ற மிருகங்களின் நடுவில் அகப்பட்டுக் கொள்ளக் கூடாதென்று தீர்மானித்து வெளியே வந்து விட்டேன்.

மாடுகளே கோபத்துடன் ஒன்றையொன்று முட்டிக் கொண்டு, கொம்பு முறிந்ததும், கால் நொண்டியுமாய், முன் அங்கீகரித்த தீர்மானங்கள் எப்படியாவது போகட்டுமென்று பிரிந்துபோயின என்று ஊஹிக்கலாம்; நிச்சயமாய்த் தெரியாது.

மறைந்த மலர்.

(ரா. ஸ்ரீ தேசிகன் M.A.,)

ஒரு படிப்பறை. எங்கே பார்த்தாலும் புத்தகம், புத்தகம், புத்தகம்; ஒரு புத்தகக் காடு. நீலகண்டய்யர் அதில் திரியாத நாளில்லை. மேஜை புத்தகக் கனத்தில் முறிந்து போய் விடும் போலிருக்கிறது; மேஜையில் முனகலும் கேட்கிறது.

காலை ஏழு மணி; காப்பி வேளை; காப்பியில் மனம் ஓடுகிறது. மாடி அறையில் பத்திரிகையைப் படித்துக்கொண்டே "காபி ஆகிவிட்டதா?" என்கிறார் நீலகண்டய்யர்.

'ஆகிவிட்டது' என்ற குரல் கீழேயிருந்து வருகிறது.

'சரி; காப்பியை மாடிக்குக் கொண்டுவரப் போகிறாள் தம் மனைவி சாரதா' என்று எதிர்பார்த்த வண்ணமே அவர் இருக்கிறார். பத்து நிமிஷம் ஆகிறது; பதினைந்து நிமிஷமாகிறது; காப்பி வந்தபாடில்லை.

'ஏண்டி! இன்னும் காப்பி கொண்டுவரவில்லை; கீழே என்ன செய்துகொண்டிருக்கிறாய்' என்று கோபத்துடன் உரத்த குரலில் பேசுகிறார் நீலகண்டய்யர்.

'நானென்ன பண்ணுகிறது; சரோஜாவுக்கும், இராமுவுக்கும் எண்ணெய் தேய்த்துக் கொண்டிருந்தேன். தலைக்கு ஜலங்கூட விடவில்லை' என்று சொல்லிக்கொண்டே எண்ணெய்க் கையோடு சாரதா மாடிக்கு வருகிறாள்.

'காப்பியை கணப்படுப்பில் வைத்து மூடியிருக்கிறேன்; வைச்சு ரொம்ப நாழி ஆகிறது; ஆறிப் போய்விடும்; நீங்களே கொஞ்சம் எடுத்துச் சாப்பிடுங்களேன்; எண்ணெய்க் கையாயிருக்கிறேன்' என்று கூறிவிட்டுக் கீழே போகிறாள்.

சாரதா நேரே கையிலே காப்பி தரவில்லை என்ற கோபம். ஆனால் தின்னவும் முடியவில்லை; மெல்லவும் முடியவில்லை. அவள் அளித்த காரணத்தினால் கோபஞ் சற்றுத் தணிந்தது; மனத்தில் பண்டைய ஞாபகங்கள் எழுந்தன. கலியாணமாகிப் புதிதாய் வீட்டுக்கு வந்தபோது, மாமியார் வெளியிலே போன சமயம் பார்த்து, முகத்தில் இளநகை அரும்பப் பக்ஷணங்கள் தந்த தம் மனைவியின் அன்பும் சௌந்தரியமும் அவருக்கு எதிரே நின்றன; 'மாமியார் இரண்டு நாள் வெளியிலே ஊருக்குப் போகமாட்டாரா, தானும் தன் கணவரும் இன்பப் பேச்சுக்களில் இருபத்து நான்கு மணியும் கழிக்க மாட்டோமா' என்று ஆசைப்பட்ட இவளுக்கு இப்படிப்பட்ட மாறுதல் ஏன் ஏற்பட்டது என்று எண்ணினார்.

மச்சுப் பலகணி வழியாய் இவருக்கு ஒரு காட்சி தென்பட்டது. புதிதாய் வீட்டுக்கு வந்த பெண் வித்தியா தன் கணவன் சந்திரசேகரய்யருக்கு முன் ஒரு வெள்ளித் தட்டில் தோசையையும், ஒரு டம்ளரில் காப்பியையும் வைத்துக்கொண்டு நிற்கும் பாவிய இன்பப் படம் நீலகண்டய்யர் மனத்தைக் கவர்ந்தது. இவர்கள் ஒருவருக்கொருவர் நாற்காலிகளில் உட்கார்ந்தபடியே உல்லாசமாய்ப் பேசிக்கொண்டிருந்தனர். அன்பு ததும்பப் பேசும் காதற் பேச்சுக்கள் நீலகண்டய்யர் செவியில் விழுந்தன. இவர்களுடைய சல்லாபம், மறைந்த காதல் உலகக் காட்சிகளையும் ஒலிகளையும் அவர் அகக்கண்ணிற்கு முன் கொண்டுவந்தது. அந்த சுந்திர உலகத்தில் அவர் ஆழ்ந்தார்.

திடீரென மாடியில் யாரோ வருகிற சப்தம் கேட்டது. இவர் சிந்தனையிலிருந்து எழுந்து "யார் அங்கே?" என்றார்.

'நான்தான் பாலகிருஷ்ணன்'

'என்ன ரொம்ப நாளாச்சே, உங்களைப் பார்த்து; ஊரில் இல்லையா?'

'கொடைக்கானலுக்குப் போயிருந்தேன். என்னமோ போலிருக்களே? ஏதானும் உடம்பு அசௌகர்யமா?' என்றார் பாலகிருஷ்ணய்யர்.

'ஒன்றுமில்லை'

'முகஞ் சொல்லுகிறதே'

'அப்படி அகத்திலிருக்கிறது முகத்திலே தெரிந்து விடுகிறதா?'

'நீங்க தான் கட்டுப் புத்தகங்கள் வாசித்திருக்களே; அடுத்தது காட்டும் பளிங்குபோல்' என்று ஆரம்பித்தார் பாலகிருஷ்ணய்யர்.

'போரும், போரும் குறள். எதுக்கெடுத்தாலும் குறளா? குறளைத் தவிர வேறொன்றுங் கிடைக்கவில்லையா இந்த தமிழன்களுக்கு'

'அது இருக்கட்டும்; நான் குறளைப்பற்றிப் பேசவில்லை. மனத்திலிருக்கிறதைச் சொல்லுங்களேன்?'

'இரண்டு பிள்ளைகளைப் பெற்றுவிட்டால் நாம் பத்தாம் பசலியாய்ப் போய்விடுகிறோம்; நம்மை கவனிக்கிறதில்லை, வீட்டில்.'

'காப்பி, நேரே, கருவளையும் கையுமா கொடுக்கவில்லை யென்ற கோபமோ?'

பதில் சொல்லாமல் அசட்டுச் சிரிப்பு சிரித்தார் நீலகண்டய்யர்.

'புதிது போலப் பேசுகிறீர்களே! உங்களுக்குத் தெரியாத விஷயமா? உலகம் உதயமானது முதல் இப்படித்தான் நடந்து வருகிறது. முதல் முதல் நீங்கள் வேட்டாத்துக்குப் போனது, உங்களை உங்கள் ஆத்துக்காரி ஜன்னல் வழியாய் எட்டி எட்டிப் பார்த்ததெல்லாம் ஞாபகமிருக்கோ யில்லையோ. ஒரு தெய்வத்தைக் கண்டதுபோல் உபசரித்த நாளும் உண்டு; முகமலர்ந்து உங்கள் சேவையிலே மறந்த நேரமுந்தான் இருந்திருக்கும். அன்பு ஓர் ஆறுபோலக் கிளம்பிப் பல கிளையாகப் பிரிந்து அநேக இடங்களைக் களிக்கச் செய்கிறது. அதனுடைய தர்மம் அது; உங்களுக்குத் தெரியாததை நான் சொல்ல வரவில்லை; இமய மலையில் பனிக்கட்டி விற்பது போலாகும்.'

'ஆமாம், நீங்கள் சொல்கிறது சரிதான்' என்று தலையை யசைத்தார் நீலகண்டய்யர்.

'நாழி ஆகிறது; நான் போய்விட்டு வரட்டுமா?'

'ஆகா, அப்படியே செய்கிறது.'

தம் மனைவியோடு பழைய காதல் இன்பத்தைப் பத்து நாளேனும் நுகரவேண்டுமென்ற எண்ணம் அவர் மனத்தைத் தொந்தரவு செய்ததுமன்றி அதை யாளவும் ஆரம்பித்தது. அன்றைய தினம் தம் மனைவியோடு அவர் கலகலப்பாய் பேசவில்லை.

இரவு வந்தது. என்ன கலகமேற்பட்டாலும், இராத்திரியில் சாந்தத்தில் சச்சரவு மறைந்துவிடுகிறது. பகலின் பேய்க்கூச்சல் அன்பின் மதுரவொலியில் கரையாமலில்லை. குழந்தைகள் இரண்டும் தூங்குகிற சமயம் பார்த்து, சாரதா தன் புருஷனிடம் வந்து அவரைத் தட்டியெழுப்பி, "என்ன கோபம்? இன்னைக்கு யென்னோடு சரியாப் பேசவில்லையே" என்றாள்.

தூங்குகிறவர் போல் பாவனை பண்ணின நீலகண்டய்யர் "என்ன கோபம்; ஒன்றுமேயில்லையே" என்றார்.

'அடுத்தாத்து நாட்டுப் பெண் வித்தியா சித்திராபௌர்ணமிக்கு அவர் ஆத்துக்காரரோடு மதுரைக்குப் போகிறாளாம். நாமும் போவோமா?'

'நானும் உன்னைக் கேட்கிறதாயிருந்தேன். நீயே அதைக் கேட்டு விட்டாய். குழந்தைகளை அழைத்துக்கொண்டு போகவேண்டாம்; வண்டியிலே இழுத்தடிப்பானேன்.'

'ஆமாம், நீங்க சொல்லறது சரித்தான்; அப்படியே செய்வோம், குழந்தைகளை மாமாவாத்தில் விட்டால் போச்சு; என் தம்பி விச்சுவம் வரல்லை வரல்லை யென்று சதா சொல்லிக் கொண்டிருக்கிறான்.'

'என்னைக்குப் புறப்படலாம்'

'நாளைக்கே கிளம்பணும். இரண்டு மூன்று நாள் முந்தியே போனால் நல்லது; உன் தம்பிக்குச் சொல்லவேண்டாமா?'

'நாளைக்குக்காலம்பற சொன்னால் போச்சு'

'ரொம்ப தூரத்திலிருக்கானா?'

'அடுத்த தெருவில்தானே இருக்கிறுன்'

'இப்படிப் பேசிக்கொண்டிருந்தால் நாழி ஆய்விடும் போய்ப் படுத்துக்கொள். நாளைக் குத்தான் ரயிலுக்குப் போகவேணுமே எனக்கும் கண்ணை அசத்தறது.'

மதுரைக்குப் போகிற வண்டியில் நீலகண் டய்யரும் சாரதாவும் உட்கார்ந்தார்கள். பக் கத்திலுள்ள மனிதர்கள் காட்சிகள் ஒன்றும் இவர்கள் கண்களில் விழவில்லை. ஏதோ ஒரு தனி யுலகத்தில் இவர்கள் மனங்கள் சஞ்சரித் தன. ரயில் விரைவாய் ஓடிக்கொண்டிருந்தது. சினிமா படக்காட்சிகள் போல வயல்கள், ஆறு கள், குடிசைகள், பட்டணங்கள் முதலியன தோன்றி மறைந்தன? எது வந்தென்ன, எது போயென்ன? உவகையுண்டு இவர்கள் மெய் மறந்தனர்! ரயிலின் கடகட சப்தம் சங்கீதம் போல் அவர்கள் செவியில் விழுந்தது.

மதுரையில் பந்துக்களிருந்தாலும், அங்கே போகவில்லை. ரயில்வே ஜங்ஷனுக்குப் பக்கத் தில் ஒரு பெரிய சாப்பாடு ஹோட்டலிருந் தது; அதில் தங்கினுர்கள். கடைக்குப் போவ து கண்ணிக்குப்போவது, வித விதமாய்ச் சோ ப்புகள் வாங்குவது, புதிது புதிதாய் ரவிக்கை கள் புடவைகள் வாங்குவது—இந்த விஷயங் களில் பொழுது போயிற்று. ஒரு மோட் டாரில் உல்லாசமாய் ஊர்முழுவதும் சுற்றி ஞர்கள். மீனுக்ஷியம்மன் தரிசனம் கிடைத்தது. கோவிலுள்ள அற்புதமான சிற்ப வேலைகளைக் கண்டு வியந்தார்கள். திருமலைநாயகனின் பிரம்மாண்டமான கட்டடத்தைப் பார்த்துப் பிரமித்தார்கள்; அஸ்தமிக்க, மதுரைத் தெப் பக் குளத்தைப் பார்க்கப் போனுர்கள்; விசால மான தெப்பக் குளத்தின் நீராழி மண்ட பத்தைப் பார்க்க ஆசையே முதிர்ந்தது; இளங் காற்று வீசிற்று; குறுஅலைகள் சலசலவென படகின்மீது மோதின; ஓடக்காரன் படகை யோட்டத் தயாராயிருந்தான்; நீலகண்டய்ய ரும் சாரதாவும் படகில் அமர்ந்தார்கள்; படகு நீரைக் கிழித்துக் கொண்டு ஓர் அன்னம்போல் நகர்ந்தது.

'ஐந்து வருஷத்திற்கு முன் நாம் படகிலே போனது ஞாபகமிருக்கோ?' என்றுர் நீலகண் டய்யர்.

'நன்ருய் ஞாபகமிருக்கே.'

'நல்ல சந்திரிகை யில்லையா, அன்னைக்கு?'

'ஆமாம்; நேற்று நடந்ததுபோல் எனக்கு இருக்கு. அந்தக் குளத்தைச் சுற்றிப் பஜனை வந்ததே. நீங்க அடிக்கடி சொல்லுவளே, அந்தப் பாட்டுக்கூட ஞாபகமிருக்கு.'

'இந்தப் பாட்டா?

மாசில் வீணையும் மாலை மதியமும்
வீசு தென்றலும் வீங்கிள வேனிலும்
மூசு வண்டறை பொய்கையும் போன்
றதே
ஈசன் எந்தை இணையடி நீழலே'

"ஆமாம்" என்று அழகு பெறத் தலையை ஆட்டினுள்.

இருவரும் நடுமண்டபத்தில் உட்கார்ந்தார் கள். ஒருவருக்கொருவர் பேசவில்லை; பழைய ஞாபகவெள்ளத்தைப் பருகிப் பருகி இன்புற் றனர்; இதுதான் அவர்களுடைய வாழ்வின் இன்ப சிகரம்.

சித்திரா பௌர்ணமித் திருவிழா வெகு நேர்த்தியாய் நடந்தது. உத்ஸவம் கழிந்த இரண்டாம் நாள் பழக்கடைக்குப்போனுர்கள்; ஒட்டு மாம்பழங்கள் குவியல் குவியலாகக் கிடந்தன. இதைப் பார்த்தவுடன் "நம்மாத் திலே ஒட்டுமாமரம் பூத்திருந்ததே; காய்க்க ஆரம்பித்து விடுமோ, இல்லையோ" என்றுள் சாரதா.

'நாம் கிளம்பி வருவதற்கு முன்னேயே காய்விட ஆரம்பித்து விட்டதே; நீ கவனிக்க வில்லையா?'

'நம் குழந்தை இராமுவுக்கு மாம்பழம்னு உயிர்; அதோ பார்த்தகளா ஆப்பில் பழங் கள். சரோஜாவுக்கு ரொம்ப பிரியம். அதுகளை அழைச்சுண்டு வராது போனமே.'

'தம்பி நன்ருய்த்தான் வைத்துக் கொள் ளுவன். அஞ்ஞானம் கேட்கமாட்டேன்கிறது. என்னமோ குழந்தைகள் நேரே நிற்காப்பலே யிருக்கு ஏதோ வெறிச்சுண்டிருக்கிறது.' நீல கண்டய்யர் பதில் சொல்லவில்லை.

மாம்பழங்கள் ஆப்பில்கள் முதலியன வாங்கிக் கொண்டு வீடு வந்து சேர்ந்தார்கள். சாரதா தன் புருஷனுக்கு ஒரு மாம்பழத்தையும் ஆப்பிளையும் நருக்கி ஒரு தட்டு நிறைய வைத்தாள். மற்றொன்றை நருக்கி வாயிலே போட்டுக்கொள்ளும் சமயம்; 'என்ன ஆப்பில் வேண்டிருக்கு? என்ன மாம்பழம் வேண்டிருக்கு? குழந்தைக் கில்லாமல்; என்ன நாக்கு இது?' என்று நினைத்தாள்.

'ஏன் இந்தப் பழங்களை அப்படியே நருக்கின படியே வைத்துவிட்டாய்? புளிக்கிறதா? எனக்குக் கொடுத்த தெல்லாம் நன்றாயிருக்கே?'

'ஒன்று மில்லை! அப்புறம் சாப்பிடலாமென்று வைத்திருக்கிறேன்.'

மறுநாட் காலை சாரதா படுக்கையை விட்டு எழுந்தவுடன் காப்பி போடவில்லை. மனத்தில் ஒரு கவலையெழுந்தது.

'என்ன உடம்பு'

'ஒன்று மில்லை. ராத்திரி துர்சுவப்பனங் கண்டேன்; குழந்தைகளுக்கு ஒன்றும் பண்ணமலிருக்கணமே; பயமாயிருக்கு. "அடுத்தாத்து வித்தியா ஊருக்குப்போகிறாள். நானும் போகிறேன்.'

'ஆகா போ. உன்னை எங்கெங்கேயோ அழைத்துக்கொண்டு போகலாமென்று நினைத்தேன்.'

'சரி, குழந்தைகளைச் சாக்கிரதையாய்ப் பார்த்துக் கொள்ளவும், பட்டணத்திலிருந்து இவ்வளவு தூரம் வந்துவிட்டு மற்ற இடங்களுக்கு உன்னையழைத்துக் கொண்டுபோகாமலிருப்பது எனக்கு என்னமோ போல இருக்கிறது. குழந்தைகளைப் பற்றித்தான் கவலை; என்னைப்பற்றி யென்ன?'

... ...

அழகர் கோயில் கொடைக்கானல் முதலிய இடங்களுக்குப் போய் விட்டு நீலகண்டய்யர் ஊர் திரும்பினார். அவர் மனைவி அன்று காலை வாசற்படியில் உட்கார்ந்து கொண்டு அவர் வரவை யெதிர்பார்த்த வண்ணமாயிருந்தாள்; வீட்டிற்குள் நுழைந்ததும் "குழந்தைக்கு உடம்பு ஒன்று மில்லையே?" என்று கேட்டார்.

'அது ஏன் கேட்கிறகள். இராமு மாம்பழத்தை தண்டியா சாப்பிட்டதில் சுரம் வந்து விட்டது. என் தம்பி விச்வத்திற்கும் பயமாய்ப்போய் விட்டதாம். மீனாட்சிஅம்மன் கிருபையில் உடம்பு சௌகரியமாய் விட்டது'

'குழந்தைகளெல்லாம் எங்கே?'

'பள்ளிக்கூடத்திற்குப் போயிடுத்துகள். இன்றைக்கு காலை $7\frac{1}{2}$ மணிக்கு பள்ளிக்கூடமாம். நீங்க இன்னைக்கு ஆபீசுக்கு போகணுமா?'

'இன்னைக்குப் போக வேண்டாம். நாளைவரையில் லீவு இருக்கும்: நீதான் கூட வரவில்லை. அழகர்மலையில் சிலம்பினியில் ஸ்நானஞ் செய்தேன்; கொடைக்கானலில் இரண்டு நாள் தங்கினேன்; தேவலோகத்திலிருந்தாப்பலே இருந்தது.'

'என்ன பண்ணறது? இதெல்லாம் பார்க்கறதருக்கு பாக்கியம் வேண்டாமா? குழந்தைகளைக் கொடுத்து விடுகிறான் பகவான்; அதோடு அஞ்ஞானம் கவலை யெல்லாம் வந்து விடுகிறது. குழந்தைகளுக்குத் தான் நாமிருக்கிறோம்.'

வந்த சிரமத்தில் இரவு நீலகண்டய்யர் அயர்ந்துதூங்கிவிட்டார்; பொழுது விடிந்தது.

காலைக் கதிரவனின் கிரிசோதி ஒட்டு மாமரத்தில் விழுந்தது; மலர்கள் மறைந்தன; காய்கள் கணக்கில்லாமல் தொங்கின. நீலகண்டய்யர் மனத்திலும் மலர்ந்தன பல எண்ணங்கள் :

'மலர் மறைந்ததற்கு விசனப் படுவார்கள் உண்டோ, மலர்களிருப்பது காய்க்குத்தானே? என் பெற்றோர்கள் எனக்காகவே தானிருந்தார்கள்; அவர்கள் எண்ணங்கள், கனவுகள் என் இரத்தத்தில் கலந்து விட்டன. என்னுடைய மார்பின் படபட அடிப்பிலும், உலகங் தோன்றினது முதற்கொண்டு திரண்டு வந்த அனுபவங்களின் ஒலிகளை நான் கேட்கிறேன்; என் குழந்தைகள் யார்? அவர்களும் இனிப் பிறக்கும் ஜனங்களுக்கு முன் தோன்றின மலர்கள்; தனி இன்பத்தில் ஏன் இச்சை வைத்தேன்? ஏனோ தனி வாழ்வில் ஆசைப் பட்டேன்!'

புதிர்.

(ஸ்ரீ எழுதியது.)

"வெள்ளைக் குதிரையும் கறுப்புக் குதிரையும் வாய்க்காலுக்குப் போயிற்றும்; கறுப்புக் குதிரை கால்வாயோடு போக, வெள்ளைக் குதிரை வீடுவந்து சேர்ந்ததாம்; இதன் பொருள் என்ன?" என்று ஒரு புதிர் உண்டு. குழாயில் நீர் மொண்டு, குத்தித் தோல் போக்கின உளுத்தம் பருப்பைக் கடையில் வாங்கிக் குடித்தனம் செய்பவர்களுக்கு, இந்தப் புதிர், ஊறின உளுத்தம் பருப்பை வாய்க்காலில் தோல் களைந்தெடுப்பதைக் குறிப்பதென்று, சட்டென்று விளங்காது. பல புதிர்கள் இந்த இனத்தைச் சேர்ந்தவை. சில குறிப்புகளைக் கொண்டு, கேட்பவர் நினைத்த பொருள் இன்னதென்று நாம் கண்டு பிடிக்கவேண்டும்.

மற்றொரு வகைப் புதிர்கள் கேட்பவருக்கு விடை இன்னதென்று தெரியாத வினக்கள். இந்தக் கேள்விகள் மனத்தில் உதித்தவர்களுக்கு, எப்படியேனும் விடை தெரியும்வரை நிம்மதியே கிடையாது. தக்க விடை கூறக் கூடிய அறிஞரைத் தேடியும், தப்பு விடை சொல்பவர்கள் மேல் அடங்காக் கோபங் கொண்டும் இவர்கள் அலைவார்கள். இப்படிப் பட்ட வினவிடைகளை சாராம்சமாகக்கொண்ட கதைகள், எல்லா பாஷைகளிலும் எத்தனையோ இருக்கின்றன.

தான் மறந்துபோன பூர்வகதையை ஔவை சொல்லிக்காட்டும் வரையும், "எற்றோ மற்றெற்றோ மற்றெற்று" என்று கண்டவரையெல்லாம் கொன்றுவந்த பிரம்மராக்ஷஸின் கதை தமிழர்கள் அநேகருக்கும் தெரியும். தீர்க்கதிருஷ்டியும், புலமையும், புதிர் அழிக்கும் திறமையும் ஒன்றே என்று நம் முன்னோர் எண்ணினர்கள். இதனல் தான் கேவலம் சொல்வன்மையையும் அற்புதத்தியையும் காட்டும் விடைகள், மஹான்கள் வாக்காகக் கதைகளில் வழங்குகின்றன. 'எது கொடிதிலும் கொடிது?' 'எது கோடி பெறும்' என்றவை போன்ற வினக்களுக்கு ஏற்றவிடை யளித்ததால் ஔவை புகழ்பெற்றாளென்றும், 'சுட்ட பழம் எது' என்று கேட்டு அவளையும் திகைக்க வைத்த பையன் முருகக்கடவுளே என்றும் கூறும் கதை இதற்கு அத்தாட்சியாகும். 'ஸ்பின்க்ஸ்' (சிங்க உருவும் பெண் முகமும் கொண்ட எகிப்திய தேவதை) கேட்ட புதிரைப்பற்றிய, பேர்போன கிரேக்கிய கதையும் இதுபோன்றதுதான். "காலையில் நாலு காலாலும், நடுப்பகலில் இரண்டு காலாலும், மாலையில் மூன்று காலாலும் நடக்கும் பிராணி எது?" என்று ஸ்பின்க்ஸ் அவ்வழிச் சென்றவர்களை எல்லாம் கேட்டு, பதில் சொல்லத் தெரியாதவர்களைக் கொன்றதாம்; கடைசியில் ஈடிபஸ் "அவ்விதப் பிராணிதான் மனிதன்" என்று சரியான விடை கூறினன். இதைக் கேட்டவுடன், ஸ்பின்க்ஸ் தன் ஆக்கிரகத்தை இழந்து, மலை உச்சியிலிருந்து கீழே விழுந்து விட்டது.

இந்தக் கதைகளில், வினு ஒன்று மனத்தை எப்படி உறுத்தக் கூடியதென்று நன்றாய்க் காட்டியிருக்கிறது. ஆனல் விடைகள், அநேகமாய், சாமன்யமாயும், ஏமாற்றமாயும் தோன்றுகின்றன. புத்தர் ஜாதகக் கதைகளில், ஒவ்வொரு ஜன்மத்திலும் புத்தர் சிரேஷ்ட குணங்களோடு விளங்கினர் என்பது தான், கதையின் சாராம்சம். அவர் மகோசதர் என்ற ஞானியாய் ஜனித்தாரென்றும், பத்தொன்பது புதிர்களை அழித்துத் தம் ஞான சித்தியை எல்லாருக்கும் விளக்கினர் என்றும் ஒரு கதை இருக்கிறது. அந்தப் புதிர்கள் தென்னலிராமன் அழிக்கத் தக்கவையே யன்றி, ஞானத்தோடு ஒரு விதத்திலும் சம்பந்தப் பட்டவை யில்லை. உதாரணமாக, அந்தக் கேள்விகளில் ஒன்று, "அரிசி இல்லாமலும், நீர் இல்லாமலும், பானை இல்லாமலும், அடுப்பில்லாமலும், விறகில்லாமலும், ஆணே பெண்ணே சமைக்காமலும் சாதம் ஆக்குவது எப்படி?" என்பது; இதற்கு அம் மகான் அளித்த பதில், "குறுணையையும் பனியையும் அள்ளி ஒரு மண் தாழியில் போட்டு, குச்சிகளால் தீமூட்டி அலி சமைத்தால் ஆகும்" என்பதாம்.

ஞானம் மறைபொருளாயிருப்பதால், மறைபொருள் எல்லாம் ஞானம் என்று

பாராட்டத் தக்கவை என்று ஆதிகாலத்தவர் நினைத்தார்கள். கதை என்றாலும், புதிர் என்றாலும் தாரதம்மிய மின்றி எதையும் விரும்பிக் கேட்கும் குழந்தைமனத்து ஆவலும் அவர்களுக்கு இருந்தது. புதிர்ப் பித்து தற்காலத்தவருக்கும் பூரணமாய் இருக்கிறது; ஆனால் எளிய விடைகளைப் பாராட்டத் தோன்ற வில்லை. "எது உத்தமமானது? எது கடைசியாக உள்ளது? சாவென்றால் என்ன? சத்திய மென்றால் என்ன?" என்ற கேள்விகளுக்கு ஈடான பதிலே கிடையாது. பழைய வினாவிடைகளில், விடைசாரமாயுள்ளது எனக்குத் தெரிந்தவரை ஒன்று தான் உண்டு. கேள்வியை மறந்தபின்னும் ஆழ்ந்து சிந்திக்கத் தக்க வாக்கியம் அது; பாரதக் கதையில் நச்சுப்பொய்கை சருக்கத்தில், யக்ஷன் அடுக்கிக் கொண்டேபோகும் கேள்விகளில். "எது ஆச்சரியம்?" என்பதற்கு தர்ம புத்திரர் கூறும் பதில்: "இவ்வுலகில் நாள்தோறும் பிராணிகள் யமனுடைய வாசஸ்தானத்தைக் குறித்துச் சென்று கொண்டே இருக்கின்றன, மிகுதியுள்ளவைகள் தாங்கள் ஸ்திரமாக இருத்தலை விரும்புகின்றன. இதைக் காட்டிலும் ஆச்சரியம் வேறு எது இருக்கிறது?"

இந்தக் கட்டத்திலேயே தர்மபுத்திரர் பயனற்ற கேள்விகளுக்கு சாமர்த்தியமான விடைகளும் கூறுகிறார். "யக்ஷன், 'எது தூங்கும் பொழுதும் கண்களை மூடாமலிருக்கிறது? எது பிறந்தும் அசைவற்றிருக்கிறது? எதற்கு இருதயம் இல்லை? எது வேகத்தால் விருத்தி அடைகிறது?' என்று வினவ, யுதிஷ்டிரர் 'மீன் தூங்கும்பொழுதும் கண்களை மூடாமலிருக்கிறது. முட்டை பிறந்தும் அசைகிறதில்லை. கல்லுக்கு இருதயமில்லை. நதியானது வேகத்தால் விருத்தி அடைகிறது' என்றார்.

"கல்லுக்கு இருதயமில்லை!" அகராதியில் எல்லா விதச் சொற்களும் இருப்பதுபோல, பாரதம் கதைக் களஞ்சியமாயிருப்பதுதான், இவ்விதப் புதிரும் அதில் சேருவதற்குக் காரணம். இதை எல்லாம் யோசித்தால், வாழ்க்கையில் வினாவுக்கேற்ற விடை கிடைப்பது அரிதென்றும், "இன்பமெனச் சில கதைகள்,.................துன்பமெனச் சிலகதைகள்" நமக்குச் சொல்லித் தூங்கவைக்கும் உலகத் தாய், விடையில்லாத புதிர்களைப் போட்டு நம் ஆவலை வீணில் தூண்டிப் பரிகசிக்கக் கூடுமென்றும் தோன்றுகிறது.

பக்தியின் பெருமை.

(பிரம்மஸ்ரீ Y. மஹாலிங்க சாஸ்திரிகள், M.A., B.L., எழுதியது.)

ஸ்ரீராமபிரான் தெற்கு சமுத்திரக்கரையில் வானர சைன்யங்களுடன் வந்து சேர்ந்தார். லங்கைப் படை எடுப்பிற்கு சமுத்திரம் இடையூறாக இருந்தது. எடுநூறு யோஜனை விஸ்தீர்ணமுள்ள அக்கடலை கடப்பதெப்படி என்று ஸ்ரீராமபிரானும் சுக்கிரீவனும் கவலை கொண்டிருக்கும் தருணம், விபீஷணன் அவ்விடம் வந்து சரணாகதி செய்தான். அவனுடைய ஆலோசனையினால் ஸ்ரீராமபிரான் கடற்கரையில் தர்ப்பங்களின் மேல் சயனித்துக் கொண்டு மூன்று தினங்கள் உண்ணாவிரதமிருந்து சமுத்திரராஜனை வழிகொடுக்கும்படி வேண்டிக்கொண்டார். அதற்குள் ஸமுத்திரராஜன் பிரசன்னமாகாதபடியால் ராமபிரான் கோபம் கொண்டு சரேலென்று எழுந்து வில்லேந்தி ஆக்நேயாஸ்திரத்தைத் தொடுத்து, கடலை வற்றச்செய்யப் பிரயத்தினமானார். அத்தருணமே, ஸமுத்திரராஜன் உள்ளம் கலங்கி நடுநடுங்கிய உருவுடன் முன் தோன்றி "ராமா, கோபம் வேண்டாம். உன் கபி சைந்யத்திலிருக்கும் விசுவகர்மாவின் மகனான நளன் ஸேது பந்தம் செய்யட்டும். நான் அந்த ஸேதுவைத் தாங்கிக்கொண்டு, நீங்கள் என்னை தாண்டிச் செல்வதற்கு உதவி புரிகிறேன்" என்று மறைந்தான்.

உடனே அணைகட்ட ஆரம்பிக்கப்பட்டது. குரங்குகள் கற்களை உருட்டிக் கடலில் தள்ளின; கற்கள் மிதந்தன; என்ன ஆச்சர்யம்! பெரிய பெரிய குன்றுகளெல்லாம் தண்ணீரில் மிதக்கவாரம்பித்தன. வானரர்களின் குதூகலத்திற்கு அளவில்லை. சரேலென்று பாய்வதும், கற்களை தாங்கி ஓடிவருவதும், ராமா என்று உரத்துக்கூவி கற்களை கடலில் போடுவதும், அவை தண்ணீரில் மிதப்பதும், ஆஹா, என்ன ஆச்சர்யம்? நூறு யோஜனை தூரத்தில் பாதிதூரம் 'ஒரே நாளில்' அணைபோட்டாய் விட்டது. வானர ஸைந்யமோ அளவிற்கடங்காத வெள்ளங்கள். அவர்கள் தெய்வப் பிறப்புள்ளவர்கள் ஆனபடியால், பெரும்பாறைகளையும் மலைச்சிகரங்களையும் கூட உருட்டித்தள்ள வல்லவர்கள். இக்காட்சியைக் கண்குளிர, பகல் முழுவதும் பார்த்தார் இராமபிரான். வியந்தார்; களித்தார்; "கல்லும் மிதக்கிறதே. இது விந்தையிலும் விந்தை" என்றார். பக்கத்திலிருந்த அனுமார், "தங்கள் திருநாமத்தின் மகிமை" என்று மெள்ளச் சொன்னார். "அல்ல, ஸமுத்திரராஜனின் கருணை" என்றார் ராமபிரான். வானரக்கூட்டங்களின் ராமநாம கோஷம் இடைவிடாமல் ஓங்கிற்று. அணையும் பெருகிற்று. பொழுதுசாய்ந்ததும் வானரர்கள் வேலையை நிறுத்திக் களைப்பாற்றிக் கொண்டார்கள்.

வானர ஸைந்யம் துயிலில் ஆழ்ந்தது. ராமபிரான் தன்னைச் சுற்றியிருந்த சுக்கிரீவன், அங்கதன், ஜாம்பவான் முதலியவர்களைச் சயனித்துக் கொள்ளும்படி விடை கொடுத்தனுப்பினார்: ஆஞ்சனேய ஸ்வாமியும் ராமபிரானுக்கு விடுதியாக இருந்த குகைத்துவாரத்தில் நித்திரை செய்யவேண்டிப் படுத்துக்கொண்டார். ராமபிரானுக்குத் தூக்கம் வரவில்லை. "ஆஞ்சனேயன் சொன்னது உண்மைதானா? நீரில் கல் மிதக்குமா? இது ஸமுத்திரராஜன் கருணையன்றோ? ஆனால் வானரர்கள் என் நாமத்தை யல்லவா உச்சரித்துக்கொண்டு கற்களை எறிகிறார்கள். என் நாமத்திற்கு அவ்வளவு விசேஷமிருக்கிறதா? சே, சே, என்னிடத்தில் என்ன விசேஷமிருக்கிறது? ஆனால் ஆஞ்சநேயன் முகஸ்துதியாகப் பேசுபவனல்லவே! அவன் சொல்லியதற்கு எதாவது ஒரு பொருள் இருக்கவேண்டும். இதன் உண்மையை நானே ஆராய்ந்தறிவேன். என் நாம கீர்த்தனத்திற்கே கல்லைத் தண்ணீரில் மிதக்கச் செய்யும் பெருமை அமைந்திருந்தால், எனக்கு அப்பெருமை இல்லாமல் போய்விடுமா? என் பெயருக்கிருக்கும் செல்வாக்கு எனக்கும் இருக்கும் என்பதில் ஐயமில்லை. நான் ஒரு கல்லைப் புரட்டி இக்கடலில் தள்ளினால் அதுவும் மிதக்கத்தான் வேண்டும். இந்தப் பரீட்சைக்கு இதுதான் நல்ல தருணம். ஆஞ்சனேயன் உள்பட ஸகல வானரர்களும் துயிலில் அமர்ந்திருக்கிறார்கள். நல்லது பார்க்கிறேன்." ராமபிரான் எழுந்தார்; குகைவாயிலைக்

கடந்தார்; சமுத்திரக் கரைக்குச் சென்றார்; ஒரு கல்லைப் புரட்டினார், இதற்குள் போலித் தூக்கம் கொண்டிருந்த அனுமான் ராமபிரானின் கருத்தை ஊகித்து மெல்லப் பின்னடைந்து பதுங்கியவண்ணம் இருந்தார். கல்லைப் புரட்டும்பொழுது திடீரென்று ஒரு யோஜனை தோன்றியது. "ஆமாம், ஒருவேளை கல் மிதக்காவிட்டால்? அவமானமல்லவா? ஆனால் யாராவது பார்த்தால்தானே அவமானம்! இங்கு யார் பார்க்கிறார்கள்! ஏதோ போட்டுப் பார்த்தால் இரண்டில் ஒன்று புரிந்துவிடும்." இவ்விதம் மனதைத் திடப்படுத்திக் கொண்டு கல்லைத்தூக்கி கடலில் வீசி எறிந்தார். அக்கல்லும், டம் 'என்று சப்தம்செய்து கொண்டு நீரில் மூழ்கியது. கல் விழுந்த அதிர்ச்சியில் மேல் கிளம்பிய நீர் எழுச்சியானது, இவரை நகைக்கும் சமுத்திரராஜனின் கைகொட்டுதல் போல் விளங்கிற்று.

அந்நகைப்புக்குப் பிறகு எதிரொலி போன்று ஒரு நகைப்புக் கேட்டது. ராமபிரான் திரும்பிப் பார்த்தார். ஆஞ்சனேய ஸ்வாமி கைகூப்பி முன் வந்து தெண்டனிட்டார். "ஆஞ்சனேயா!" "ஸ்வாமி!" இதற்குமேல் ராமபிரானுக்கு என்ன சொல்வதென்று தோன்றவில்லை. ஆஞ்சனேயரும் மௌனம் சாதித்தார். அவர்களே பேசாத விஷயத்தில் நாமென்ன சொல்வது?

கைமேற் பணம்!

(கோதண்டராமன் எழுதியது.)

நாடக பாத்திரங்கள் :

புரான்மல்
ரங்கசாமி முதலியார்
சங்கரய்யர்
தேவராஜ முதலியார்

காட்சி ஒன்று

சென்னை சௌகார்பேட்டை, ஆதியப்ப நாயக்கன் தெரு, 6-ம் நம்பர் வீட்டில் வாயிற் கதவைத் தாண்டினவுடன் வலது பக்கமாக விருக்கும் ஒரு அறை பார்வையான இடத்தில் சுவரில் ஒரு கடியாரம். அதற்குக் கீழாக ஜனவரி மாதம்—3 எனக் குறிக்கும் கொட்டை எழுத்து ஆபீஸ் காலண்டர். அறையின் இடது புறத்தின் சுவரின் ஓரமாக ஒரு மெத்தையும் இரண்டு திண்டுகளும காணப்படும். இடது புறத்தில் கணக்குப் புத்தகங்களும் தஸ்தாவேஜுகளும் அடுக்கப்பட்டிருக்கின்றன. ஒரு மூலையில் ஒரு சிறு பெஞ்சியின் மீது ஒரு கை 'பிரஸ்' வைக்கப்பட்டிருக்கிறது. காட்சியின் ஆரம்பத்தில் புரான்மல் சேட் திண்டின் மீது சாய்ந்துகொண்டிருக்கிறார்.

ரங்கசாமி முதலியார் மிகக் கவலையுடனும் அச்சத்துடனும் வீட்டுக்குள் நுழைந்து அறைக்கு வெளியில் நிற்கிறார்.

ரங்கசாமி.—இதுதானா புரான்மல் சேட் கடை?

புரான்மல்:—இதுதான். உள்ளே வாருங்கள். இதோ இப்படி உட்காருங்கள்.

("ஜகதீசா, என்னை ரட்சிக்க வேண்டும்" என்று மெல்ல சொல்லிக் கொண்டே ரங்கசாமி முதலியார் தரையில் விரிக்கப்பட்டிருந்த ஒரு பாயின் மீது உட்காருகிறார்.)

புரான்மல்:—என்ன விசேஷம்?

ரங்கசாமி:—நேற்றைய தினம் பத்திரிகையில் தங்களது விளம்பரத்தைப் பார்த்தேன்.

புரான்மல்:—அப்படியா?

ரங்கசாமி:—அதாவது குடும்ப விஷயமாகக் கஷ்டப்படுவோருக்குத் தாங்கள் கைமேற் பணமாகக் கடன் கொடுத்துதவுவதாகக் கண்டிக்கிறது.

புரான்மல்:—ஆமாம். அது உண்மையே.

ரங்கசாமி:—கடன் கேட்போருக்குத் தாமதமின்றி உடனே கடன் கொடுப்பதாகச் சொல்லி யிருக்கிறீர்கள்.

புரான்மல்:—ஆமாம், அதற்கென்ன தடை?

ரங்கசாமி:—(முகமலர்ந்து) அப்பா! உங்களது உறுதியான பேச்சைக் கேட்டு ஆறுதலடைந்தேன்.

புரான்மல்:—உமக்குப் பணம் தேவையா?

ரங்கசாமி:—ஆமாம் மிகவும் அவசியமாக வேண்டியிருக்கிறது.

புரான்மல்:—சுமார் எவ்வளவு வேண்டியிருக்கும்?

ரங்கசாமி:—அதாவது, அதாவது, (மயங்கிக் கொண்டே) 500 ரூபாய் இருந்தால் போதும்.

புரான்மல்:—(ஆச்சரியக் குறிப்புடன்) 500 ரூபாயா வேண்டும்?

ரங்கசாமி:—(பயந்து கொண்டு) அதிகமாகக் கேட்டுவிட்டேனே?

புரான்மல்:—இல்லை. 500 போதுமா என்றேன்.

ரங்கசாமி:—(மேலே பார்த்து யோசித்துக் கொண்டே) 500 போதாதா?

புரான்மல்:—இந்தச் சொற்பதொகை எங்களுக்கு ஒரு லக்ஷியமில்லை.

ரங்கசாமி:—(பயந்துகொண்டு) 1000 கேட்கலாமென்றுதானிருந்தேன். நீங்கள் கொடுக்கிற பட்சத்தில் அதுவும் எனக்கு வேண்டியதுதான்.

புரான்மல்:—முடிவாகச் சொல்லுங்கள். எவ்வளவு தேவை?

ரங்கசாமி:—(சங்கோஜத்துடன்) 1000 ரூபாய் கொடுங்கள்.

புரான்மல்:—சரி; வட்டி சொல்பம் தான். 100க்கு 6 வீதம் ஒப்புக்கொள்கிறீரா?

ரங்கசாமி:—6 வட்டி நியாயந்தான். அதற்கொன்றும் சொல்லுவதற்கில்லை.

புரான்மல்:—1000 ரூபாய் முடிவுதானே?

ரங்கசாமி:—முடிவுதான்.

புரான்மல்:—பத்திரம் முதலிய காரியங்களைச் செய்துமுடிக்க ஐந்துரூபாய் கொடுங்கள்.

ரங்கசாமி:—ஐந்து ரூபாயா?

புரான்மல்:—சட்டமுறைப்படி செய்ய வேண்டிய காரியங்கள் பல இருக்கின்றன அல்லவா?

ரங்கசாமி:—அப்படியா?

புரான்மல்:—முறைப்படி பத்திரம் வகையரா ஏற்பட்டுவிட்டால், எவ்வளவு வேண்டுமானாலும் கொடுக்கத் தயார்.

ரங்கசாமி:—அப்படியா! சரி அதற்கென்ன?

(ஐந்து ரூபாய் எடுத்துக்கொடுக்கிறார்,)

புரான்மல்:—நல்லது. (ஒரு மோட்டா பாண்டு பேப்பரைக் காட்டி) இதோ உங்களது தஸ்தாவேஜு. (அதில் எழுதுகிறார்.) கடன் பாபத்து 1000 ரூபாய்.

ரங்கசாமி:—இந்த 1000 ரூபாய் எனக்குப் பேருதவியாயிருக்கும். உங்களுக்குச் சொல்லத் தயங்குவானேன்? எனது கலியாணத்தின் பொருட்டே இக்கடனை வாங்குகிறேன்.

புரான்மல்:—அப்படியா! ரொம்ப திருப்தி! ரொம்ப சந்தோஷம்! பகவானுடைய கிருபையால் எல்லாம் சந்தோஷகரமாகவே முடிவு பெறும்.

ரங்கசாமி:—தங்களுக்கு வந்தனம். கலியாணம் செய்துகொண்டு உடனே பெண்ணை அழைத்துக்கொண்டு குடித்தனம் செய்யப் போகிறேன். அதற்குத்தான் பணம் தேவை. முகூர்த்தம் 6-ம் தேதி.

புரான்மல்:—ஆமாம். இதுவரையில் நீங்கள் இதற்காகப் பணம் சேகரித்து வைக்கவில்லையா?

ரங்கசாமி:—சேர்த்துத்தான் வைத்திருந்தேன். ஆனால் எனது துரதிருஷ்டம் எல்லாம் கொள்ளை போய்விட்டது.

புரான்மல்:—என்ன? களவா போய்விட்டது!

ரங்கசாமி:—அந்தக் கதையை என் கேட்கிறீர்கள்? அதற்கு முன் நான் யார் என்பதை உமக்குச் சொல்ல வேண்டியதாயிருக்கிறது. ஜவுளிக்கடை ஆறுமுகஞ்செட்டியாரிடம் நான் குமாஸ்தா. எனக்கு பதினன்கு வருஷங்கள் சர்விஸ் ஆகிறது.

புரான்மல்:—அப்புறம்?

ரங்கசாமி:—எவ்வளவோ சாமர்த்தியமாக 3000 ரூபாய் வரை சேர்த்துவைத்தேன். அது ரொம்ப அதிசயமில்லையா, சேட்வாள்?

புரான்மல்:—ரொம்பவும் அதிசயமே.

ரங்கசாமி:—அதை நாணயமான பெரிய பாங்கில் போட விருந்தேன்.

புரான்மல்:—அப்புறம்?

ரங்கசாமி:—அந்த துரதிருஷ்டத்தை என்னவென்று சொல்லுவது?

புரான்மல்:—ஏன்? என்ன?

ரங்கசாமி:—என் மாமன் அதை ஒரு பாழாய்ப்போன பாங்கில் போட்டால் நல்ல வட்டி கிடைக்குமென்று சொன்னர். அப்படியே அதில் போட்டேன்.

புரான்மல்:—கொஞ்ச நாட்களுக்கு முன் முழுகிப் போச்சே அதிலேயா?

ரங்கசாமி:—அந்த குட்டிச் சுவராய்ப் போன பாங்கில் தான்.

புரான்மல்:—ஐயோ பாவமே!

ரங்கசாமி:—என் தலையெழுத்து அவ்வளவு தான். அது முதல் என் பாடு திண்டாட்டம். கையில் பணமில்லாததால் உம்மிடம் வந்தேன்.

புரான்மல்:—அதற்கென்ன பிரமாதம்? நம்மிடம் வந்தவர்களுக்கு ஒருக்காலும் ஒரு குறையும் ஏற்படாது.

ரங்கசாமி:—இன்றே பணம் கொடுப்பீர்களா?

புரான்மல்:—இன்றைக்கேவா? அது முடியுமா முதலியார்வாள்? நாளைக்குப் பார்ப்போம். உம்மைப்பற்றிய தகவல்களை யெல்லாம் விசாரித்துத் திருப்திகரமாயிருந்தால்..............

ரங்கசாமி:—என்ன விசாரணையா?

புரான்மல்:—கண் மூடிக்கொண்டு பணத்தைக் கண்டவர்களுக்கும் கொடுத்து விடவா கடையை வைத்துக் கொண்டிருக்கிறோம்? பணத்துக்கு உத்தரவாதம் வேண்டாமா? விசாரிக்க வேண்டாமா?

ரங்கசாமி:—விசாரணை ரொம்ப தாமதமாகுமா?

புரான்மல்:—ஆகாது, ஆகாது: நமது ஏஜண்டு சங்கரய்யர் முக்கியமான தகவல்களைப் பற்றி விசாரிப்பார். நாளையதினமே விசாரிக்க ஆரம்பிப்பார். பகல் 12 மணிக்கெல்லாம் எனக்குத் தகவல் கிடைக்கும். நீங்கள் நாளைய தினம் மாலை 4-மணிக்கு வரலாம்.

ரங்கசாமி:—நாளைய தினம் பணம் கிடைத்துவிடுமல்லவா?

புரான்மல்:—உடனே கிடைக்கும். விசாரணை மட்டும்..............................

ரங்கசாமி:—அதைப்பற்றி உங்களுக்குக் கொஞ்சம் கூட கவலையே வேண்டாம். அக்கம்பக்கத்திலுள்ள அனைவரும் என்னை அறிவார்கள். எனது அந்தஸ்தையும் நாணயத்தையும் அறியாதவர் எவருமில்லை.

புரான்மல்:—பார்க்கலாம். பார்க்கலாம்.

ரங்கசாமி:—தங்களுடைய பேருதவிக்கு முன்னதாகவே எனது வந்தனத்தைத் தெரிவித்துக் கொள்ளுகிறேன்,

புரான்மல்:—என்ன பிரமாதம்? இதற்காக வா வந்தனம்?

ரங்கசாமி:—உமது உதவியை நான் என்றும் மறவேன்.

புரான்மல்:—ஒருவருக்கொருவர் உதவி செய்யாமலிருந்தால் மனித வாழ்வு தான் எதற்கு?

ரங்கசாமி:—உமது ஏஜண்டுக்கு வேண்டிய தகவல்களை.........

புரான்மல்:—ஆமாம். மறந்துவிட்டேனே. விசாரணைக்காக ஐந்து ரூபாய் கொடுத்துவிட்டுப் போங்கள்.

ரங்கசாமி:—(கண்களை உருட்டிக்கொண்டு) ஐந்து ரூபாயா? எதற்கு?

புரான்மல்:—ஆமாம் ஐயா, நமது ஏஜண்டு என்ன, தருமத்திற்கு வேலை செய்வாரா? அவரது சிரமத்திற்குக் கூலிவேண்டாமா? யார் கொடுப்பது? நான் கொடுப்பது என்பது உங்களது மனதில் எண்ணமா?

ரங்கசாமி:—நான் நினைத்தேன்............

புரான்மல்:—நாங்கள் சொல்ப வட்டியே வாங்குகிறோமென்பதைத் தாங்கள் அறிந்து கொள்ளவில்லை போலிருக்கிறது. சிலபேர்கள், ஆயிரம் ரூபாய் கொடுத்துவிட்டு இரண்டாயிரம் என்று பத்திரத்தில் எழுதி வாங்கிக் கொள்ளுகிறார்களே, அதைப்போல நாங்களும் செய்வதாயிருந்தால் விசாரணைச் செலவையும் நாங்களே ஏற்றுக்கொள்ளுவோம். நாங்கள் அப்படிப்பட்டவர்கள் அல்ல. எங்களிடம் நம்பிக்கையும் நாணயமுமுண்டு.

ரங்கசாமி:—கோபித்துக் கொள்ளாதீர்கள், சேட்வாள்! கையில் பணமில்லாத குறைதான் வேறொன்றுமில்லை.

புரான்மல்:—(மிக இனிப்புடன்) உம்மிடம் ஐந்து ரூபாய் இல்லையா?

ரங்கசாமி:—தற்சமயம் இல்லை.

புரான்மல்:—சரி, போய் ரூபாயைக் கொண்டு வாருங்கள். அதுவரையில் விசாரணையை ஒத்தி வைப்போம்.

ரங்கசாமி:—(கவலையுடன்) எனக்குப் பணம் கட்டாயமாக நாளைக்கு வேண்டுமே.

புரான்மல்:—உம்மிடம் இப்பொழுது உண்மையாக ஐந்துரூபாய் கூட இல்லையா.

ரங்கசாமி:—வாஸ்தவமாக இல்லை. வைத்துக்கொண்டு இல்லையென்று உமக்குச் சொல்லுவேனா?

புரான்மல்:—நன்றாகப் பாரும்.

(ரங்கசாமி ஜேபியைத் தட்டிப் பார்க்கிறான். ஏதோ கொஞ்சம் சில்லரை நாணயங்கள் வெளிப்படுகின்றன.)

புரான்மல்:—(முகம் மலர்ந்து) அதோ இருக்கிறதே!

ரங்கசாமி:—ஐந்து ரூபாய் இராது சேட்வாள்!

புரான்மல்:—சரி, இருக்கிறதை யெல்லாம் இப்படி வையுங்கள், பார்ப்போம்.

ரங்கசாமி:—(எண்ணிக்கொண்டு) இருப்பது, மூன்று ரூபாய்களே!

புரான்மல்:—மூன்றுதானா? அது போதாதே. சரி, இருக்கட்டும்; நீர் நல்ல மனுஷராயிருக்கிறீர்; உமக்கு உபகாரம் செய்யவேண்டும்; அந்த மூன்று ரூபாயைக் கொடுங்கள்.

(புரான்மல் பணத்தை வாங்கிக்கொள்ளுகிறார்)

ரங்கசாமி:—நாளைக்கு எனக்குக் கட்டாயமாகப் பணம் கிடைத்து விடுமல்லவா?

புரான்மல்:—ஆகா, கிடைக்கும். ஆ! முக்கியமான விஷயத்தை மறந்து விட்டேன்!

ரங்கசாமி:—(கவலையுடன்) என்ன அது?

புரான்மல்:—நாளைக்கு வரும்போது பணத்துக்கு உத்தரவாதமாய் இருக்கக் கூடியவர் ஒருவரை அழைத்து வாருங்கள்.

ரங்கசாமி:—அது ரொம்ப அவசியமா?

புரான்மல்:—அத்தியாவசியம்.

ரங்கசாமி:—எனது நண்பரான மளிகைக் கடை தேவராஜ முதலியாரை அழைத்து வருகிறேன்.

(சங்கரய்யர் உள்ளே நுழைகிறார்.)

புரான்மல்:—இவர்கள் நமது ஏஜண்டு சங்கரய்யர்.

ரங்கசாமி:—அப்படியா?

சங்கரய்யர்:—நமஸ்காரம்.

புரான்மல் :—சங்கரய்யரே, விசாரிப்பதற்குத் தேவையான தகவல்களை அவரிடமிருந்து தெரிந்து கொள்ளுங்கள்.

சங்கரய்யர்:—ஆகா, அப்படியே.

புரான்மல். (ரங்கசாமியைப் பார்த்து) நான் கொஞ்சம் உள்ளே போக வேண்டும். நாளை மாலை 4 மணிக்கு வாருங்கள். பிறகு எல்லாம் பார்த்துக் கொள்ளலாம்.

ரங்கசாமி:—தவறாமல் வருகிறேன்.

(புரான்மல் வீட்டுக்குள் நுழைகிறார்.)

காட்சி இரண்டு

சங்கரய்யர்:—(ஒரு பாண்டு பேப்பரை எடுத்து) கடன் ரூபாய் 1000. (என்று படித்து) இதுதானா அது?

ரங்கசாமி:—ஆமாம் ஏஜண்டுவாள்,

சங்கரய்யர்:—(ஒரு காகிதத்தையும் பேனாவையும் எடுத்துக் கொண்டு) உமது பெயர்?

ரங்கசாமி:—ரங்கசாமி முதலியார்.

சங்கரய்யர்:—என்ன வயது?

ரங்கசாமி:—35.

சங்கரய்யர்:—என்ன உத்தியோகம்?

ரங்கசாமி:—ஜவுளிக் கடை குமாஸ்தா.

சங்கரய்யர்:—இருப்பிடம்?

ரங்கசாமி:—பெரம்பூர் பாரக்ஸ், புளியந்தோப்பு வீதியில் 20ம் நம்பர் வீடு.

சங்கரய்யர்:—வீட்டுக்கு எவ்வளவு வாடகை செலுத்துகிறீர்?

ரங்கசாமி:—மாதமொன்றுக்கு இருபது ரூபாய்.

சங்கரய்யர்:—உமக்கு உத்தியோகம் எந்தவிடத்தில்.

ரங்கசாமி:—தேவராஜ முதலி தெருவிலுள்ள ஆறுமுகம் செட்டியார் கடையில்.

சங்கரய்யர்:—என்ன வருமானம்?

ரங்கசாமி:—மாதம் 50 ரூபாய்.

சங்கரய்யர்:—இது போதுமானது.

ரங்கசாமி:—நீர் தானா விசாரிக்கப் போகிறவர்?

சங்கரய்யர்:—ஆம், நான் தான்.

ரங்கசாமி:—கடைசியாக, உமது ரிப்போர்ட்டினால்தான் என் காரியம் கைகூடவேண்டும்.

சங்கரய்யர்:—அதற்கென்ன சந்தேகம்?

ரங்கசாமி:—என்னைக் கொஞ்சம் பார்த்துக் கொள்ள வேண்டும்.

சங்கரய்யர்:—(சிரிப்பை யடக்கிக் கொண்டு) எனது கடமைப்படி நான் நடப்பேன்.

ரங்கசாமி:—அது தெரிந்த விஷயம் தான்.

சங்கரய்யர்:—தயை தாட்சிண்ய மில்லாமல் உள்ளதை உள்ளபடி சொல்லுவது எனது வழக்கம்.

ரங்கசாமி:—அதெல்லாம் சரியாகவே இருக்கும். ஒன்றும் பிசகாது.

சங்கரய்யர்:—அப்படித்தான் நானும் நினைக்கிறேன். ஆயினும் உண்மையைத் தெரிவிக்கும்போது, அதைப் பல விதமாக ஜோடிக்கலாமல்லவா?

ரங்கசாமி:—எப்படி?

சங்கரய்யர்:—விசாரணை திருப்திகரமாக இருக்கிறதென்றே வைத்துக் கொள்ளுவோம்.

ரங்கசாமி:—ஆமாம்.

சங்கரய்யர்:—உதாரணமாக, ரிப்போர்ட்டில் "ரங்கசாமி முதலியாரைப் பற்றி தகவல்கள் திருப்திகரமாகவே இருக்கின்றன. அவர் மிகவும் யோக்கியப் பொறுப்புடையவர்" என்றிருந்தால், உமது காரியம் முடிந்துவிட்டது. கைமேல் 1000 ரூபாய் கிடைத்துவிடும்.

ரங்கசாமி:—அதுதான் சரி; அப்படித்தான் சொல்லவேண்டும்.

சங்கரய்யர்:—அப்படிச் சொல்லாமல், ஏறக்குறைய அதேமாதிரியாக "ரங்கசாமி முதலியாரைப் பற்றிய தகவல்கள் பாதகமாயில்லை', என்றால்...வித்தியாசம் உமக்குத் தெரிகிறதா?

ரங்கசாமி:—(சரியாகத் தெரிந்து கொள்ளாமல்) ஆகா, தெரிகிறது.

சங்கரய்யர்:—அதோடு 'ரங்கசாமி முதலியாரை யோக்கியமானவர் என்று சொல்லுகிறார்கள்' என்றால்...உமக்குப் புரிந்ததா?

ரங்கசாமி:—ஆமாம், ஆமாம்.

சங்கரய்யர்:—"சொல்லுகிறார்கள்" என்றால் ஏதோ கொஞ்சம் சந்தேகத்தைக் காட்டுகிறது. "நான் கேள்விப்பட்டதைத் தான் சொல்லுகிறேன். என் சொந்த அபிப்பிராய மல்ல. நான் பொறுப் பெடுத்துக் கொள்ளவில்லை" என்பதாகும்.

ரங்கசாமி:—அப்புறம்?

சங்கரய்யர்:—அப்புறம் விழுப்புறம் தான். கடன் கொடுப்பதும் சந்தேகம் தான்.

ரங்கசாமி:—(மனந் தளர்ந்து) அது பெரிய ஆபத்திலன்றோ முடியும்?

சங்கரய்யர்:—விசாரிக்கும்தொழில் லேசல்ல. எவ்வளவோ நாஸூக்காகப் போக வேண்டியதா யிருக்கிறது.

ரங்கசாமி:—நீங்கள் சொல்லுவது ரொம்ப வாஸ்தவம்.

சங்கரய்யர்:—சிரமத்திற்குத் தகுந்த கூலியுமில்லை.

சங்கரய்யர்:—(இப்பொழுதுதான் விஷயத்தை யுணர்ந்து)ஆ! அப்படியா?

சங்கரய்யர்:—எனக்கு ஐந்து குழந்தைகளும் ஒரு மனைவியுமுண்டு. எல்லோரையும் காப்பாற்றி யாகவேண்டும். அதுவும், இக் கஷ்டகாலத்தில்.

ரங்கசாமி:—சம்சாரம் ரொம்பவும் பாரமானது தான்.

சங்கரய்யர்:—அந்த வெட்கக் கேட்டை ஏன் கேட்கிறீர்கள்! அதோடு பாருங்கள், பணத்துக்கு வருகிறவர்களிடம் நானாக ஒன்றும் கேட்பதில்லை.

ரங்கசாமி:—ஊம்.

சங்கரய்யர்:—ஆனால் பொதுவாக அவர்கள் விஷயமறிந்தே நடந்து கொள்ளுகிறார்கள்.

ரங்கசாமி:—என்னைப் பொறுத்த மட்டில், சங்கரய்யர்வாள், தங்களது உதவியை நான் ஒருக்காலும் மறக்கமாட்டேன் என்பதை மட்டும் மனதில் உறுதியாக வைத்துக் கொள்ளுங்கள்.

சங்கரய்யர்:—நான் அதிகமாகக் கேட்பவனல்ல. அவர்கள் கொடுத்ததைத் திருப்தியுடன் வாங்கிக் கொள்ளுவதே எனது குணம். நான் சொன்னது தெரிந்ததா?

ரங்கசாமி:—தெரிந்தது, தெரிந்தது.

சங்கரய்யர்:—நான் தானே விசாரிக்கப்போகிறேன்? என்னால்தானே காரியம் கைகூடப் போகிறது?

சங்கரய்யர்:—நல்லது, நல்லது, ஏஜண்டுவாள் தாங்கள் என் பேச்சை நம்பியிருக்கலாம்,

சங்கரய்யர்:—பேச்சுக்கென்ன பிரமாதம்?

ரங்கசாமி:—பணம் கையில் கிடைத்தவுடனே பாருங்களேன்.

சங்கரய்யர்:—எல்லோரும் அப்படித்தான் சொல்லுவது வழக்கம்; இதோ பாருங்கள்; ரொம்ப வேண்டாம்; பத்து ரூபாய்தான்; நான் ஒன்றும் அதிகமாகக் கேட்கவில்லை.

ரங்கசாமி:—(சுற்றித் திரும்பிப் பார்த்து விட்டு உள் ஜேபிலிருந்து ஐந்து ரூபாய் நோட்டுகள் இரண்டை எடுக்கிறான்) இதுதான் கடைசியாக என்னிடமிருப்பது.

சங்கரய்யர்:—அப்படியா?

ரங்கசாமி:—பணம் கிடைத்தவுடன் அதற்கு மேல் தரவேண்டியதை எல்லாம் கொடுப்பேன்.

(சங்கரய்யர் கையை நீட்டிப் பணத்தைப் பெற்றுக் கொள்ளுகிறார்.)

ரங்கசாமி:—சங்கரய்யர், உம்மைத்தான் பூராவாக நம்பியிருக்கிறேன்.

சங்கரய்யர்:—அப்படியே நம்பியிருக்கலாம். நாளைக்குச் சரியாக நான்கு மணிக்கு வாருங்கள்.

ரங்கசாமி:—டங்கென்று நான்கு அடிக்கும் போதே இங்கு ஆஜராயிருப்பேன். சரி, போய் வருகிறேன் (என்று தண்டமிட்டு தெருவில் இறங்கிச் செல்லுகிறார்.)

காட்சி மூன்று.

(ஜனவரி மாதம் 4-ந் தேதி. கடியாரத்தில் சரியாக நான்கு மணி. புரான்மல் சேட்டும் ஏஜண்டு சங்கரய்யரும் கடையில் உட்கார்ந்திருக்கின்றனர். ரங்கசாமி முதலியார் அறைக்கதவண்டை நிற்கிறார்)

சங்கரய்யர்:—முதலியார்வாள், உள்ளே வாருங்கள்.

(ரங்கசாமி உள்ளே நுழைகிறார்.)

ரங்கசாமி:—(கைகூப்பி) நமஸ்காரம், சேட்வாள்.

புரான்மல்:—தாங்களா? வாருங்கள், வாருங்கள், முதலியார்வாள். தங்களைத்தான் எதிர்பார்த்துக் கொண்டிருக்கிறேன்.

ரங்கசாமி:—எனது நண்பர் தேவராஜ முதலியார் தெருவில் நிற்கிறார். இதோ கூப்பிடுகிறேன். (தெருப்பக்கமாகத் திரும்பி) தேவராஜ முதலியார், உள்ளே வாருங்கள். (தேவராஜ முதலியார் அறைக்குள் நுழைகிறார்.)

புரான்மல்:—நீங்கள் தானா ஜாமீன் கொடுக்கப் போகிறவர்? சந்தோஷம்; இதோ இப்படி உட்காருங்கள்.

(ரங்கசாமியும் தேவராஜ முதலியாரும் பாயின் மீது உட்காருகின்றனர்.)

ரங்கசாமி:—விசாரணை முடிந்துவிட்டதா?

புரான்மல்:—ஆகா.

ரங்கசாமி:—எல்லாம் உங்களுக்குத் திருப்தி தானே?

புரான்மல்:—அதற்கென்ன சந்தேகம்? (ஒரு பாண்டு பேப்பரைக் கையில் எடுத்துக் கொண்டு) உமது பெயர் ரங்கசாமி முதலியார் அல்லவா?

ரங்கசாமி:—ஆமாம்.

புரான்மல்:—உமது வயது 35 அல்லவா?

ரங்கசாமி:—ஆமாம்.

புரான்மல்:—உமது இருப்பிடம் பெரம்பூர் பாரக்ஸ், புளியாங்தோப்பு வீதி 20-ம் நம்பர் வீடு. மாதம் ஒன்றுக்கு 20 ரூபாய் குடிக்கூலி கொடுக்கிறீர்கள். நீங்கள் 14 வருஷகாலமாக ஆறுமுக செட்டியாரின் ஜவுளிக் கடையில் குமாஸ்தாவாக இருக்கிறீர்கள். உமது சம்பளம் 50 ரூபாய். எல்லாம் சரிதானே?

ரங்கசாமி:—எல்லாம் ரொம்ப சரி.

புரான்மல்:—ஜாமீனாய் நிற்கப் போகிறவரைப் பற்றி தகவல்களை எழுதிக் கொள்ளுகிறேன். உமது பெயர் என்ன?

தேவராஜ:—தேவராஜ முதலியார்.

புரான்மல்:—உமது இருப்பிடம்?

தேவராஜ:—புரசைவாக்கம், வேப்பேரி ஐரோட், 58ம் நம்பர் வீடு.

புரான்மல்:—நீர் ஒரு மளிகைக்கடை வைத்துக் கொண்டிருக்கிறீரல்லவா?

தேவராஜ:—ஆமாம்.

புரான்மல் உமது நண்பருக்கு நீர் உத்தரவாதம் தானே?

தேவராஜ:—ஆகா, ஆக்ஷேபணை யில்லாமல்.

புரான்மல்:—சரி, அது போதுமானது.

ரங்கசாமி:—பத்திரம் தயாராய் விட்டதா?

புரான்மல்:—அதற்குமுன் ஆகவேண்டியது ஒன்றிருக்கிறது.

ரங்கசாமி:—அது என்ன?

புரான்மல்:—தேவராஜமுதலியாரைப் பற்றி விசாரித் தறியவேண்டும்.

ரங்கசாமி:—என்ன?

புரான்மல்:—என்னவா? இச் சிறுவிஷயம் உமக்குப் புரியவில்லையா? முன் ஜாக்கிரதையாக உத்திரவாதம் கேட்கிறோம். அந்த உத்தரவாதம் பிரயோஜனமில்லாவிடில்?

ரங்கசாமி:—நீங்கள் சொன்னது.............

புரான்மல்:—இதோ பாருங்கள். நீங்கள் குழந்தைகளல்ல. வியாபாரத்திலீடுபட்டவர்கள் முன்பின் அறியாதவர்களுக்கு 1000 ரூபாயைத் தூக்கிக் கொடுத்து விடுவார்களா? நீங்கள் தான் சொல்லுங்கள், பார்ப்போம்.

தேவராஜ:—அப்படிச் செய்ய முடியாது தான்.

புரான்மல்:—நீங்கள்தான் தேவராஜ முதலியாரென்றும், நீங்கள் வேப்பேரி ஐரோட்டில் குடியிருக்கிறீர்களென்றும் சொல்லுகிறீர்கள். அது உண்மையென்று எனக்கு எப்படித் தெரியும்?

ரங்கசாமி:—நான் அதற்கு உத்தரவாதம்

புரான்மல்:—கொஞ்சம் அவசரப்படாதீர்கள். அவர் தானே ஐயா உமக்கு உத்தரவாதம் ?

ரங்கசாமி:—(கவலையுற்று) நாளைக்குப்பணம் கட்டாயமாக வேண்டும்.

புரான்மல்:—நாளை மாலை, 3 மணிக்குப் பணம் கட்டாயம் கிடைக்கும்.

தேவராஜ:—பார்க்கப்போனால் சேட்வாள் கேட்பது நியாயம்தான். என்னைப்பற்றி யாரை வேண்டுமானாலும் விசாரிக்கலாம். அதைப் பற்றி உமக்குப் பயமே வேண்டாம்.

புரான்மல்:—அதுதான் சரியான பேச்சு. அதுதான் விவகார நியாயம்.

ரங்கசாமி:—ஆமாம், இப்படியே நீடித்துக் கொண்டு போவதுதான் தர்மசங்கடமாயிருக்கிறது.

புரான்மல்:—ஆகவே, ஐந்து ரூபாய் கொடுங்கள்.

ரங்கசாமி:—(திடுக்கிட்டு) என்ன! மறுபடியும் ஐந்து ரூபாயா?

புரான்மல்:—விசாரணையின் செலவுக்காக.

ரங்கசாமி:—முந்தியே மூன்று ரூபாய் கொடுத்திருக்கிறேனே.

புரான்மல்:—அது உம்மைப்பற்றி விசாரிப்பதற்காக. அது உமக்காகக் குறைந்த சார்ஜ். அதற்கும் தேவராஜ முதலியாரைப்பற்றி விசாரிப்பதற்கும் சம்பந்தமே யில்லை.

ரங்கசாமி:—சரி, இந்தாரும். (மூன்று ரூபாய் எடுத்துக் கொடுக்கிறான்.)

புரான்மல்:—(கையில் வாங்கிக் கொண்டு) இதென்ன?

ரங்கசாமி:—இருக்கட்டும் சேட்வாள். அது தான் கையிலிருக்கிறது.

புரான்மல்:—சரி, போகட்டும்.

ரங்கசாமி:—சேட்வாள், பணம் ரொம்ப அவசியமாயிருக்கிறது. நீங்கள் கொடுக்காவிடில் முகூர்த்தம் நின்றுவிடும். உம்மைத்தான் நம்பியிருக்கிறேன்.

புரான்மல்:—என்னைக் கட்டாயம் நம்பியிருங்கள். நாளைக்கு மூன்று மணிக்கு வாருங்கள். அதற்குள் காஷியருக்கு அறிவித்துவிடுகிறேன்.

ரங்கசாமி:—நாளைக்கு சரியாக மூன்று மணிக்கு.

புரான்மல்:—ஆகா, விசாரணைமட்டும் திருப்தியாயிருக்க வேண்டும்.

ரங்கசாமி:—நான் அதற்கு ஜவாப்தாரி.

(இரு நண்பர்களும் போகின்றனர்.)

காட்சி நான்கு.

(சேட் ஆபீசில் உட்கார்ந்திருக்கிறார். சங்கரய்யர் தஸ்தாவேஜுகளைப் புரட்டிக்கொண்டிருக்கிறார். காலண்டரில் ஜனவரி 5-ந் தேதி. கடியாரத்தில் மூன்று அடிக்கிறது.)

புரான்மல்:—ஊம், ஊம், சீக்கிரம் ஆகட்டும். டெலிபோனை எடுத்து வையுங்கள். அதை மறந்து விடுகிறீரே.

சங்கரய்யர்:—(ஒரு உபயோகமற்ற டெலிபோனை எடுத்து சேட் முன் வைக்கிறார். அது டெலிபோன் கம்பியுடன் இணைக்கப்படாதது) இதோ வைத்துவிட்டேன்.

புரான்மல்:—இது நல்ல வேடிக்கை! இதில் பேசினால் யாரும் கேட்கப்போவதில்லை.

சங்கரய்யர்:—இதைப் பார்த்தாலே வருகிறவர்களுக்கு சந்தேகம் தட்டுமே.

புரான்மல்:—இதையா பார்க்கப் போகின்றனர். வருகிறவர்களுக்கு எவ்வளவோ கவலை.

(கதவண்டை ஓசை கேட்கிறது. சங்கரய்யர் சட்டென்று வீட்டுக்குள்ளே நுழைந்து விடுகிறார். ரங்கசாமியும் தேவராஜ முதலியாரும் அறைக்குள்ளே நுழைகின்றனர்.)

ரங்கசாமி:—சேட்வாள். நமஸ்காரம்.

புரான்மல்:—(கிர் கிர் என்று எழுதிக் கொண்டிருந்தவர் தலையை நிமிர்ந்து பார்த்து விட்டு) வாருங்கள், வாருங்கள்.

ரங்கசாமி:—ரொம்ப தாமதமாய் வந்து விட்டோமா?

புரான்மல்:—கடன்வாங்க வருகிறவர்கள் எப்பொழுதும் தாமதமாய் வருகிறதே யில்லை; பணம் திரும்பிக் கொடுக்கும் போது தான் அந்த விஷய மெல்லாம்.

ரங்கசாமி:—எங்களைப் பொறுத்த மட்டில் சேட்வாள்..................................

புரான்மல்:—எல்லாம் பார்ப்போமே. என் நிற்கிறீர்கள்? இப்படி உட்காருங்கள்.

(ரங்கசாமியும் தேவராஜ முதலியாரும் உட்காருகின்றனர்)

ரங்கசாமி:—(கவலையுடன்) பணம் தயாராய் விட்டதா?

புரான்மல்:—ஆகா.

ரங்கசாமி:—(முகமலர்ச்சியுடன்). பணம் கொடுக்கப் போகிறீர்களல்லவா?

புரான்மல்:—இதோ, இப்பொழுதே.

ரங்கசாமி:—தகவல்கள் எல்லாம் திருப்தி தானே.

புரான்மல்:—எல்லாம் திருப்திதான்,

ரங்கசாமி:—அதை உங்களது வாயால் கேட்க மிகவும் சந்தோஷம்.

புரான்மல்:—ரூபாய் செக்காக வேண்டுமா? ரொக்கமாக வேண்டுமா?

ரங்கசாமி:—ரொக்கமாகவே கொடுங்கள்.

புரான்மல்:—சரி, சர்க்கார் முத்திரை போட்ட பாண்டு பேப்பரில் பத்திரம் எழுது கிறேன்.

ரங்கசாமி:—(முகம் சுண்டி) இன்னும் தயா ராக வில்லையா?

புரான்மல்:—நீங்கள் ரொம்ப அவசரப் படு கிறீர்கள். பணமொன்று தான் உங்கள் கவலை.

ரங்கசாமி:—இருக்கிற நிலைமை அப்படி யிருக்கிறது, சேட்வாள்!

புரான்மல்:—எனக்கு ஒரு ரசீதில் கையெ ழுத்துப் போட்டுக் கொடுங்கள். பத்திரத்தில் நாளைக்குக் கையெழுத்திடலாம்.

ரங்கசாமி:—(வியாகுலத்துடன்) ஆனால் பணம் இன்றைக்குக் கிடைக்குமோ இல் லையோ?

புரான்மல்:—ஆகா.

ரங்கசாமி:—(முகமலர்ந்து) சந்தோஷம்.

புரான்மல்:—பத்திரம் எழுதுவதற்கு முத் திரை போட்ட பேப்பர்கள் வேண்டும். அதற் காக இரண்டு ரூபாய் கொடுங்கள்.

ரங்கசாமி:—(தயக்கமின்றி இரண்டு ரூபாய் எடுத்துக் கொடுக்கிறார்) இதோடு எல்லாம் ஆய்விட்டதா?

புரான்மல்:—இதோ ஒரு சீட்டு எழுதிக் கொடுக்கிறேன். காஷியரிடம் கொடுத்தால் பணம் கொடுப்பார்.

ரங்கசாமி:—சந்தோஷம்.

புரான்மல்:—(வாயால் சொல்லிக்கொண்டே எழுதுகிறான்) இந்த உத்தரவைக் கண்டவு டன் ரங்கசாமி முதலியாருக்கு ஆயிரம் ரூபாய் கொடுக்கவும்.

தேவராஜ:—எல்லாம் பகவானுடைய கிரு பையால் கடைசியாக சரியாக முடிந்தது, பார்த்தீரா?

ரங்கசாமி:—அப்பா! எல்லாம் முடிந்தது. முகூர்த்தம் தவறிவிடுமோவென்று பயந்தேன்.

தேவராஜ:—சேட்வாள், நான் சீக்கிரம் போகவேண்டியிருக்கிறது. நாளைக்கு வந்து பத்திரத்தில் கையெழுத்து போடுகிறேன்.

புரான்மல்:—சரி, நீர் போய்வரலாம்.

(தேவராஜ முதலியார் போகிறார்.)

[புரான்மல் சீட்டில் முத்திரை போடுகிறார், ரங்க சாமி அதைப் பெற்றுக்கொள்ள கையை நீட்டுகி றார். அதுசமயம் சங்கரய்யர் கதவைப் படார் என்று அடித்துக்கொண்டு அறைக்குள் நுழைகிறார்]

சங்கரய்யர்:—ஆ! ஆ! சேட்வாள்!

புரான்மல்:—என்ன விசேஷம்?

சங்கரய்யர்:—ஆ! என்னவென்று சொல்லு வேன்?

புரான்மல்:—உமது ஆ! ஊ! ஒன்றும் எனக்கு விளங்கவில்லையே. என்ன விசேஷம் சொல்லும்.

சங்கரய்யர்:—காஷியர் ....(பெருமூச்சு விடுகிறார்.)

புரான்மல்:—காஷியர் என்ன பண்ணினார்?

சங்கரய்யர்:—(முகத்தைக் கோணிக் கொ ண்டு) சவாரி விட்டுவிட்டார்.

புரான்மல்:—என்ன? எங்கே? எனக்கொன் றும் புரியவில்லையே!

சங்கரய்யர்:—இப்பொழுதுதான் ஆபீசுக் குச் சென்றிருந்தேன். எல்லாம் காலி. மேஜை

யின் மீது ஒரு கடிதமிருந்தது. குதிரைப் பந்தயத்தில் பணம் கட்டித் தோற்றாராம். 20,000 ரூபாய் வெள்ளத்தில் போய்விட்டது!

புரான்மல்:—ஆ! 20,000 ரூபாயா? மோசடிப்பயல்!

[பற்களை நறநறவென்று கடிக்கிறார்.]

சங்கரய்யர்:—இந்தக் கிண்டிப்பந்தயத்தின் மீது என்ன மோகம்! ஐயா, ரங்கசாமி முதலியாரே, எப்பொழுதும் இப்பந்தய சமாச்சாரத்தில் போய் அகப்பட்டுக் கொள்ளவேண்டாம்.

ரங்கசாமி:—நான் பந்தயத்தைப் பார்ப்பது கூட இல்லையே.

புரான்மல்:—(சங்கரய்யரைப்பார்த்து) உடனே போலீசுக்குத் தெரிவிக்கவேண்டும். பத்திரிகைகளில் விளம்பரம் செய்யவேண்டும்.

ரங்கசாமி:—சேட்வாள், என்னுடைய ஆயிரம் ரூபா சமாச்சாரமென்ன?

புரான்மல்:—(அவருக்குப் பதில் சொல்லாமல், டெலிபோனை யெடுத்து பேசும் குழாயை வாய்க்கருகில் வைத்துக்கொண்டு) "அலோ! அலோ! நம்பர் 144. போலீஸ் கமிஷனர் ஆபீசா? குட்மார்னிங் கமிஷனர்வாள், நான் புரான்மல் சவுகார். ஆமாம்.................. இன்றையதினம் ஒரு பெரிய விபத்து நடந்திருக்கிறது! என்னுடைய காஷியர் இருக்கிறாரே......ஆமாம், முருகேச முதலி.........ஓட்டம் பிடித்து விட்டார். கஜானா பெட்டியோடே 20,000 ரூபாயோடு; ரொம்ப துரதிருஷ்டம்; நீங்கள் வருகிறீர்களா? சரி, கடையில் காத்துக் கொண்டிருக்கிறேன். சரி, சரி, வருவதற்கு முன் ஒன்றையும் தொடுவதில்லை. உறுதியாய்ச் சொல்லுகிறேன். (குழாயை டெலிபோன் மீது வைத்துவிட்டு, சங்கரய்யரைப் பார்த்து) கஜானாவைப் பூட்டுப் போடுங்கள். அது போலீஸ் வசமாய் விட்டது. திருடன்! துரோகி! அகப்படாமல் எங்கு போகப் போகிறான்? ஆனால் என் பணம் போனது போனதுதானே! ஐயையோ! நான் என்ன செய்வேன்!

ரங்கசாமி:—சேட்வாள்!

புரான்மல்:—(தலைமீது கை வைத்துக் கொண்டு) என்ன படுமோசம் இது!

ரங்கசாமி:—பெரிய மோசடிதான்! என் ஆயிரம் ரூபாய் விஷயமென்ன?

புரான்மல்:—ஐயையோ! நான் முழுகிப் போய் விட்டேனே! பகவானே, உனக்குக் கண்ணில்லையா!

சங்கரய்யர்:—(அவர் கையைப்பிடித்து) என்ன சேட்வாள்! கொஞ்சம் தைரியமாயிருங்கள்.

ரங்கசாமி:—சேட்வாள், என்ன, ரூபா சமாச்சாரம் என்ன?

புரான்மல்:—நடுத்தெருவில் நாராயணா வென்ற கதியாய் விட்டதே!

சங்கரய்யர்:—என்ன சேட்வாள்! இவ்வளவு அதைரியத்தில் விழுந்துவிட்டால் என்ன செய்கிறது!

புரான்மல்:—அந்த மோசக்காரப் பயல் இப்படியும் செய்து விடுவானென்று கனவிலும் கருதவில்லையே!

சங்கரய்யர்:—என்ன, இப்படி இருக்கிறீரே? கொஞ்சமாவது மனிதனுக்குத் தெரியம் என்பது வேண்டாமா?

ரங்கசாமி:—என் கதி என்ன?

புரான்மல்:—ஐயோ, பணமெல்லாம் போய் விட்டதே!

சங்கரய்யர்:—திரும்பித் திரும்பி அதையே சொல்லி என்ன லாபம்?

புரான்மல்:—ஒன்றுமில்லாத ஒட்டாண்டியாய் விட்டேனே!

ரங்கசாமி:—என் விஷயமென்ன, சொல்லி விடும்.

புரான்மல்:—என்ன கொள்ளைக்காரன்! கன்னக் குறவன்! அவனை இப்போது கண்டால் கண்டம் கண்டம் கண்டமாய் வெட்டிப்போடுவேன்!

சங்கரய்யர்:—அந்தப் பாவியை என்ன செய்தாலும் தகும்.

புரான்மல்:—அப்பேர்பட்டவர்களைத் தூக்கிலிடவேண்டும்!

ரங்கசாமி:—ஆமாம் தூக்கிலிடத்தான் வேண்டும். சரி, என் விஷயம் என்ன? அதைப் பற்றி வாயைத் திறக்காமலிருக்கிறீர்களே.

சங்கரய்யர்:—(ரங்கசாமி முதலியாரைப் பார்த்து) உமது ஆயிரம் ரூபாயா? அதுதான் உமது கவலை.

ரங்கசாமி:—பேசுவது ரொம்ப சுலபம்; என் ஸ்திதியில் நீங்கள் இருந்தால் அப்பொழுது தெரியும்.

புரான்மல்:—(சங்கரய்யரைப் பார்த்து)முதலியார் சொல்லுவது நியாயந்தான். ஆனால் நானிருக்கும் நிலைமையில் அவருக்கு எப்படி உபகாரம் செய்யமுடியும்?

சங்கரய்யர்:—அவர் சொல்லுவதைக் கேட்டீரா?

ரங்கசாமி:—ஆமாம், கேட்டேன்.

சங்கரய்யர்:—(கோபத்துடன்) உமது மனம் இரங்க வில்லையா?

ரங்கசாமி:—ஆமாம், இரங்குகிறதுதான். ஆனால்.........

சங்கரய்யர்:—அவ்வளவாவது உமக்குக் காருண்ணியம் இருக்கிறதே.

புரான்மல்:—எப்படியாவது சிரமப்பட்டு உமக்குச் செய்ய வேண்டியதைச் செய்கிறேன். சற்று பொறுத்துக் கொள்ளுங்கள், முதலியார்வாள்.

ரங்கசாமி:—மோசம் போனேனே! முகூர்த்தமும் தப்பிவிடும் போலிருக்கிறதே! ஈசா! எல்லாம் உன் செயல்!

சங்கரய்யர்:—முதலியார்வாள், நல்ல காலமாகக் கடன் வாங்காது தப்பினீர்களே! கடன் வாங்குவது பெரிதல்ல. திருப்பிக்கொடுக்கும் போதுதானே இருக்கிறது எல்லா சங்கடமும்.

ரங்கசாமி:—திருப்பிக் கொடுக்காமல் என்னய்யா?

சங்கரய்யர்:—அப்படியில்லை. கடுவு வந்த போது கையில் பணமிராது, கடன் கொடுத்தவர் கோர்ட்டுக்கு இழுப்பர். சொத்து ஜப்தியாகும். எல்லாம் சங்கடம் தானே.

புரான்மல்:—நான் அப்படிப்பட்டவனல்ல.

சங்கரய்யர்:—நீர் சரிதான். உம்மைப் போலவா இதர மார்வாரிகள் இருக்கின்றனர். அவர்கள் கையில் அகப்பட்டுக் கொண்டால் சமுத்திரத்தில் விழுந்த மாதிரி தானே.

ரங்கசாமி:—இந்த புத்திமதியை யெல்லாம் முன்னமேயே சொல்லியிருக்கக் கூடாதா?

சங்கரய்யர்:—நான் சிநேகிதன் என்னும் முறையில் சொல்லுகிறேன். எப்பொழுதும் கடன் வாங்கப் புறப்படாதீர்.

ரங்கசாமி:—இதுவும் ஒரு நல்ல புத்திமதி தான். ஈச்வரா, இந்த புத்திமதிக்காக நான் பட்ட பிரயாசை யென்ன! நான் செய்த செலவு என்ன! அதிகமாகச் சொன்னால் ஊர் சிரிக்கும். எல்லாம் என் கருமம்!

[தலை குனிந்துகொண்டே போய் விடுகிறார்.]

புரான்மல்:—(சங்கரய்யரைப்பார்த்து) முதலியார் தெருவைத் தாண்டிப் போய்விட்டாரா? பாருங்கள்.

சங்கரய்யர்:—(தெருக்கதவண்டை நின்று பார்த்துவிட்டு) அவர் போய் விட்டார்.

புரான்மல்:—அப்பாடா! ஒரு காரியம் முடிந்தது. இனி நடக்க வேண்டியதைப் பார்ப்போம்.

[சங்கரய்யர் உள்ளே செல்லுகிறார். புரான்மல் ஒரு பெரிய புத்தகத்தில் கிர் கிர் என்று எழுதுகிறார்.]

(பிரெஞ்சு நாடகத்தைத் தழுவி யெழுதப்பட்டது.)

கொலு.

(மஞ்சேரி ஸு. ஈச்வரன் எழுதியது.)

தலைமேலும் அடிகீழும் வீசப்பட்டு, 'ஸ்கிப்பிங்' கயிறு 'சட், சட்' என்று தரையைச் சாட்டை வாங்கிற்று; பறவையின் ரக்கைகள் போல் தன் கைகள் பறக்க, பெண் ஒருத்தி குதித்துக் கொண்டிருந்தாள்; அவளுடைய தம்பியும் தங்கையும் அதை ஆவலோடு பார்த்துக் கொண்டு உட்கார்ந்திருந்தார்கள்.

பெண்ணா குதித்தாள், ஏதோ ஒரு மான் துள்ளிக்கொண்டிருந்தது. கருத்த கண்கள் மையினால் மேலும் தீட்டப்பட்டு ஈட்டிபோல் பாய்ந்து கொண்டிருந்தன. காதில் லோலக்கு துடித்துக்கொண்டு, அவள் ஒவ்வொரு தரம் குதிக்கும்போதும் அவளது தோளின்மேல் தன் மரகதவொளியைச் சொட்டவிட்டுக் கொண்டிருந்தது.

'எவ்வளவு ஆச்சு' என்றாள், திடீரெனத் தன் வேகத்தைத் தளர்த்திக் கொண்டு. அவளுடைய இளம் மார்பும் பெருமூச்சில் எழுந்தது.

'நூறு' என்றாள் அவளுடைய தங்கை.

'இல்லே தப்பா எண்ணிண்டு வந்துருக்கே, எம்பளது தான் ஆச்சு' என்று கமலா கண்டித்தாள்.

குழல் போன்ற குரலில், தன் பள்ளிக்கூடத்தில் கணக்கில் தான் முதல் என்ற தைரியத்துடன், 'நானா தப்பா எண்ணினேன்; நான் ஸரியாத் தான் எண்ணினேன்' என்றாள் தங்கை.

'ஸரி, ஸரி, சண்டைப்படுவானேன்; நூறுனா நீ கயத்தை எடுத்துக்கலாம்னு சொன்னேன்; மின்னாடி வேணும்னா எடுத்துக்கோயேன்; 'அதுக்காக தப்பா எண்ணுவானேன்?'' என்றாள் கமலா.

தங்கையின் முகம் கலங்கிச் சிவந்தது; யாரோ அடித்துவிட்டது போல் அவளுக்கு இருந்தது. கண்களைக் கசக்கினாள்; மார்பு படபட வென்று அடித்துக் கொண்டது;...அவ்வளவுதான், அழ ஆரம்பித்து விட்டாள். இதைப் பார்த்துக்கொண்டிருந்த தம்பி 'அம்மா' என்று கத்துமுன், கெட்டிக்காரியான கமலா, 'இல்லடி, சும்மாச் சொன்னேன், இந்தா' என்று சொல்லிவிட்டு, 'ஸ்கிப்பிங்' கயிற்றைத் தங்கையிடம் கொடுத்துவிட்டு நகர்ந்தாள்.

'அடீ, இருடீ, நா ஒனக்கு எண்ணலையா? எண்ணமாட்டே?' என்று போகும் கமலாவைப் பார்த்துத் தங்கை மேலும் கத்தினாள். கமலா திரும்பிப் பார்த்தாள்; தங்கை அக்காளிடம் வந்து 'எம்மேலே கோவமா?' என்றாள்.

'அதெல்லாம் ஒண்ணுமில்லே' என்று புன்னகையின் அமிர்தத்தால் தங்கையின் கலங்கிய முகத்தை கமலா அலம்பினாள்; அவளுடைய விரல்கள் சூரியகிரணங்கள்போல் தங்கையின் மோவாய்க்கட்டையைத் தொட்டதும், தங்கையின் முகம் தாமரை போல் மலர்ந்தது.

அச்சமயம் கூடத்துக் கதவடியில் ஏதோ சப்தம் கேட்டது; கமலா திரும்பிப் பார்த்தாள்.

'ஸரஸான்னா? நம்பாத்துக் கொலுவைப் பார்க்க வரச்சொல்லியிருந்தேன்' எனறு தங்கையிடம் சொல்லிவிட்டு கதவடிக்குக் கமலா ஒரே ஓட்டமாய் ஓடினாள்; அவள் பின் அவளுடைய தங்கையும் ஓடினாள்; இரண்டு மலர்கள் பறப்பதுபோல் தோன்றிற்று.

ஸரஸாவுக்கு ஏழெட்டு வயது இருக்கலாம்; கொஞ்சம் கறுப்பாயிருந்தாலும் ஸரஸா லக்ஷணமானவள்; அவளுடைய அழகு கஸ்தூரியின் மணத்தை ஒத்திருந்தது. காதில் வைரமில்லாவிட்டாலென்ன? அவளுடைய கண்களின் பளபளப்பொன்றே போதும். ஆனால் ஸரஸா முன்னெல்லாம் இவ்வளவு கறுப்பாயில்லை. அடுப்படியில் ஸமீபத்தில் அவளுக்கு ஓய்வில்லா வேலை ஏற்பட்டுவிட்டதும், அப்படியாய் விட்டாள். 'மலரு முன்னே கருகிவிடுமோ அந்தமொட்டு' என்று அவளுக்கு வேண்டியவர்கள் பயப்படுவதுண்டு.

சித்திரையை அடையாத வஸந்தனை விடுமோ அவளுடைய அழகு என்றும், 'இவளென்ன, வேடன் விடுத்த அம்பொன்று தன்னை நாற்புறமும் விரட்டுகிறதே என்று நடுங்கி, நடுங்கி மிரண்டு மிரண்டு தயங்கும் மான்போல் தோன்றுகிறாளே' என்றெல்லாம் பலர் பேசிக்கொள்வார்கள். ஸரஸா அதே தெருவில் வஸித்து வந்தாள், நாலு வீடு அடுத்தாற்போல்; கமலாவின் தோழி. ஸரஸா போவதும் வருவதும் தெரியவே தெரியாது; 'நிழலோ' என்று சொல்லும்படி நகருவாள். பெரு மூச்சோ, பேச்சோ என்று ஸந்தேஹம் வரும்படி மாறிவிட்டது அவளுக்கிருந்த வீணை சாரீரம்.

'எப்படி வச்சுருக்கென்னு சட்டுனு பார்க்கத்தான் முடியும். சித்தி என்னைக் காணுமேனு சொல்ரத்துக்கு முன்னே நான் ஆத்துக்குப் போய்டணும்' என்றாள் கமலாவிடம் கொலுவைப் பார்க்கவந்த ஸரஸா.

"அடி, இவ்வளவு பயம் எதுக்கு? ஒண்ணும் ஆயிடாது" என்று தேற்றிக்கொண்டுக் கையைப்பிடித்து ஸரஸாவைக் கமலா கொலு வைத்திருக்கும் அறைக்கு அழைத்துக் கொண்டு போனாள்.

கொலு வெகு அழகாய் வைக்கப்பட்டிருந்தது. கமலாவின் தகப்பன் மஹா ரஸிகன். கொலு மண்டபத்தில் அவன் காகிதங்களால் பண்ணியிருந்த வேலைப்பாடு தொழிலாளிகளாலும் செய்ய முடியாது. படிப்படியாய் வைத்திருந்த பொம்மைகள் போகட்டும்; அவன் கட்டியிருந்த குளம், நீராழி மண்டபம், மலைக்கோயில், முதலியன மாலைவந்தால் ஊரரைத் திருவிழா கூட்டுவதுபோல் அவனகத்தில் கூட்டிவிடும். ஸெலுலாய்ட் ஸாமான்கள், சீமை, ஜப்பான் ஆபாஸங்கள் ஒன்றும் அங்கு கிடையாது. மைசூர், திவாங்கூரிலிருந்து சந்தனத்திலும், தந்தத்திலும் செய்த வேலைகள்; புதுச்சேரி பொம்மைகளிலும் அவன் வாங்கி வைத்திருந்த பொம்மைகள் அவனே சொல்லிச் செய்யச்சொன்னவை; ஒரு பக்கம் ராமாயணக்கதை தொடர்பாய் வரும்படி பொம்மைகள் செய்துவைக்கப்பட்டிருந்தன. 'பஞ்சவடிக்' காட்சியை ஏற்படுத்தியிருக்கும் அழகு ஒன்றே போதுமே' என்று ஒரு கூட்டம் சொல்லும். 'அது போகட்டும், இதோ, திருக்கழுக்குன்றம் கோயிலும், கழுகும் பண்டாரமும் வைத்திருக்கே,.........என்று மற்றொரு வகுப்பினர் வியப்பர். நவராத்திரி வந்தால் கவர்ன்மண்டார் லீவு ஏற்படுத்தாவிட்டால் என்ன? கமலாவின் தகப்பன் ராகவ சர்மா ப்ரவிலேஜ் லீவோ, அரைச்சம்பள லீவோ எடுத்துவிடுவான். 'என்ன ஸார், நவராத்திரியை விட்டால் நமக்கு வேறென்ன ஸார் பெரிய உத்ஸவம் இருக்கு" என்று சண்டை போடுவான், ஆபீஸில்கூட வேலை செய்பவருடன். காலையில் அவன் ராமாயணம் பாராயணஞ்செய்வதைக் கச்சேரி கேட்பதுபோல் கேட்டுக்கொண்டிருக்கலாம்.

கமலா வீட்டுக் கொலு வென்றால், அதை ஒரு நொடியில் பார்க்கமுடியாது என்று ஸரஸாவிற்குத் தெரியும். ஈச்வரனின் பிரபஞ்சமே பிடித்துவைக்கப்பட்டது போல், புள்ளினம், விலங்கினம், விதவித மானிடர், தேவர் அவ்வளவும் அக்கொலுவில் இருந்தன. பள்ளிக்கூடங்களில் வாத்தியாரம்மா வருஷம் வருஷமாய் 'பாடனியும்,' 'ஸுவாலஜியும்' சொல்லிக்கொடுத்தாலும் இக்கொலுவிலிருந்து ஏற்படும் மரஞ் செடி கொடி, பக்ஷி ம்ருகப்ரபஞ்ச அறிவும் அவற்றிடம் அன்பும் மன ஒன்றுபாடும் குழந்தைகளுக்கு ஏற்பட மாட்டா.

'அதோ பார், ஸரஸா, இந்த வருஷம் அப்பா, புதிசாச்சேத்தா, அது 'குத்தாலம் அருவி, அந்தப் பக்கமாய் கொழா வச்சுருக்கா' என்றாள் கமலா.

'ஸ்நானம் பண்ணலாமா' என்றாள் ஸரஸாவின் பக்கத்திற்கு நெருங்கி வந்த கமலாவின் தங்கை.

'வருஷா வருஷம் மாலை போடாப்பளே மாப்பிள்ளை மாட்டுப் பொண் வச்சிருப்பாளே அப்பா, இந்த வருஷம் ஊஞ்சலா மாத்தி விட்டா அதை, அதோபார்' என்றாள் கமலா.

'எவ்வளவு வெக்கம்பார், பொண்ணுக்கு!' என்றாள் ஸரஸா.

'ஆமாம், நீயுந்தான் நாளைக்கு அப்படி கால்லே கட்டவெரலைப் பாத்துண்டு ஒக்காந் துண்ட்ருப்பே,' என்றாள் கமலா.

'எனக் கென்னமோ வயஸு எட்டுதான் ஆச்சம்மா; ஒனக்குத்தான் கல்யாணம் நெருங் காது' என்று பதில் விட்டாள் ஸரஸு.

'ஹூம், இப்ப இல்லே, அப்படி ஆனா லும் அத்திம்பேரோட கொலுவுக்கு இங்கே வந்துடுவ கமலா' என்று முனகினாள் கமலா வின் தங்கை.

ஸரஸு சிரித்தாள். 'சும்மா இருடி' என்று தங்கையை ஒரு தட்டு தட்டினாள் கமலா.

'என்னடி, சிரித்தேளே' என்று முதிர்ந்த ஒரு சாரீரம் இப்பொழுது பெண்களின் கவ னத்தை மாற்றிற்று.

'அம்மா' என்று சிறு பெண் ஓடிற்று.

'ஸரஸு, வாம்மா, என்ன கண்ணுலயே படமாட்டேங்கரயே?' என்று கமலாவின் தாய் ஸரஸுவிடம் சென்றாள்.

'நாளைக்கி ஸரஸ்வதி பூஜை, இன்னிக்குத் தான் ஸரஸு வந்துருக்கா' என்றாள் கமலா.

'வரப்படாதுன்னு, அம்மாமி; அவள் ஆத்தை விட்டு நகரவிடமாட்டேங்கரா; நான் இப்போ அவளுக்குத் தெரியாம வந்துருக் கேன், இதோ ஒரு நிமிஷத்துலே திரும்பி ஓடிப் போகாட்டா—'

'எல்லாம் போகலாம், இரு, ஒண்ணும் வந்துடாது; ஒன் பாட்டைக் கேட்டு எவ்வ ளவோ நாளாச்சு' என்றாள் கமலாவின் தாயார்.

'பாட்டாட்டா, கொலு பாத்ததுக்கு காசு கொடுக்கணும், சும்மா கொலுவப் பாத்துட்ட ராதா' என்று கமலாவின் தங்கை சொல் லிக்கொண்டிருக்கும்போது கமலாவின் தாய் மீனாக்ஷி அம்மாள் உள்ளே விரைந்தாள்; ஒரு நொடியில் பொட்டலமும் கையுமாய்த் திரும் னாள்.

"சுண்டலை இங்கேயே சாப்பிட்டுப்போயிடு, ஸரஸு, சித்தி எரிஞ்சு விழுவ" என்று சிறி யவள் எச்சரிக்கை செய்துகொண்டிருக்க, கம லாவைப் பார்த்து, தாயார் "கமலா, ஸந்தியா காலம் வந்துவிட்டது, கூட்டம்வரும், விளக் குகளைப் போடு, மாலைகளைப் போடு" என்ற தும் ஒரே ஓட்டமாய் அதுவரையிலும் சும்மா உட்கார்ந்து கொண்டிருந்த கமலாவின் தம்பி ஓடி, ஒரு ஸ்டூலை இழுத்துப் போட்டுக்கொண்டு எலக்டிரிக் ஸ்விட்ச்சைப் போட்டான். கை யும் சுண்டலுமாய் ஸரஸு கொலுவை எலக் ட்ரிக் வெளிச்சத்தில் பார்த்தாள். கண்ணாடி களில் பல்புகள் பிரதிபலிப்பதையும், ஒரு மரத்தின்மேல் பூக்கள் போலும், பழங்கள் போலும் பலவித வர்ணபல்புகள் சிறிது சிறி தாய்த் தொங்குவதையும், "குத்தால அருவி" யினடியில் வைக்கப்பட்ட பல்புகளினால் விழும் நீர் பளபளவென்று ஜ்வலிப்பதையும் பார்த் தாள் ஸரஸு. சிறிது நேரமானால் அங்கு வைத்திருக்கும் தாஸிப்பொம்மை பரதநாட் டியம் ஆட ஆரம்பித்துவிடும் போலிருந்தது.

'பாடு, ஸரஸு, என்ன இப்படி ஸ்தம்பித் துப் போய் நிற்கிறயே?' என்று மீனாக்ஷியம் மாள் கேட்டாள்.

ஸரஸுவின் தாய் ஸ்காந்தபுராண கீர்த்த னங்கள் தன் பெண்ணுக்குத்தானே சொல்லி வைத்திருந்தாள். தேவியின் கல்யாண கீர்த் தனமொன்றை ஸரஸு பாடினாள்.

'இது எங்கடி கத்துண்டே? ஒக்காரு, சுண் டலை எல்லாருமாத் தின்னுட்டு அப்பரம் நீ ஆத்துக்குப் போகலாம்' என்றாள் மீனாக்ஷி.

ஸரஸு, கமலா முதலியவர் உட்கார்ந் தார்கள்; கமலா வாய்நிரம்ப சுண்டலையடைத் துக் கொண்டாள். ஸரஸு ஒரு பிடி எடுத்து வாய்க்குக் கொண்டு போனாள்.

'ஏ, ஸரஸு!' என்று கடுங் கர்ஜனை ஒன்று கேட்டது. 'பொத்' என்று சுண்ட லைப் போட்டுவிட்டு ஓடினாள் ஸரஸு.

ஸரஸா வாயிலை அடைந்ததும், காதைப் பிடித்து 'போ வீட்டுக்கு' ஏன்று ஸரஸாவை அவள் சித்தி தள்ளியது உள்ளே மீனாக்ஷிக்கும், கமலாவுக்கும் தெரிந்தது.

'பாவம்' என்றாள் கமலா.

'அய்யோ பாவம்' என்றாள் மீனாக்ஷியம்மாள். கமலாவின் தங்கைக்கு அழுகை வந்துவிட்டது. தம்பி, 'சீ' யென்று சண்டலை விட்டெறிந்தான். ஆணாயிருந்ததால், அவனுக்கு துக்கம் கோபமாய் மாறிற்று.

*　　　*　　　*　　　*

'கொழந்தயைப் பார்த்துக் கோடினு, கொலு பாக்கப் போனாளாம், பாத்ததே இல்லயே! அதான் அங்க பொட்டி பொட்டியா கூடத்துலே ஒங்க அம்மா வச்சுண்டுருந்த கொலு பொம்மை எல்லாம் கெடக்கே, பார்த்துண்டுருக்ரதானே. * * * அங்கே, அவாத்துலே பாடினயோ? தொட்டில் ஆட்டுடன்னு, தொண்டயத் தரக்கமாட்டே இந்தாத்துலே! நகரு இனுமே, காலை முறிச்சுடறேன்' * * * *'

சித்தி இடித்த இடிகளுக்கெல்லாம் செவிடாயிருந்த ஸரஸாவுக்கு 'ஒங்க அம்மா வச்சுண்டுருந்த கொலு பொம்மை எல்லாம் கெடக்கே' என்று சொன்னது மட்டும் காதுகளில் தேனாய்ப் பாய்ந்து ஸரஸாவின் முகத்தில் ஒரு ஒளியை பரப்பிற்று, 'அம்மா, இன்னிக்கு ராமாயண பொம்மைகளை ஸீதா கல்யாணம் போல் வைக்கப்போரேன்னு குட்டிகள்ட்டெ எல்லாம் சொல்லிவரச் சொல்லிருக்கேன். நீ நல்ல பக்ஷணமாப் பண்ணணா மாக்கம்' என்று தன் மனதினுள் விண்ணுலகினின்று இறங்கியிருந்த தன் தாயுடன் பேசிக் கொண்டு நின்றாள் ஸரஸா.

(தமிழில் எழுதியது வே. ராகவன்).



மொழி பெயர்ப்புப் பகுதி.

கதைக் கடல்.

நரவாஹனதத்த ஜனன லம்பகம்.

மூன்றாம் அலை.

(டாக்டர் வே. ராகவன்.)

பிறகு, மற்றொரு நாள், மந்திரிகளுடன் தன்னருகில் வந்த வத்ஸராஜனைப் பார்த்துத் தனிமையில் பின்வருமாறு வாஸவதத்தை சொன்னாள்: 'எனக்கு இந்த கர்ப்பம் தோன்றினதிலிருந்து இதைக் காப்பாற்ற வேண்டுமே என்ற கவலை என் மனதைத் தீவிரமாய்ப் பாதிக்கிறது. இன்று அதே நினைவாய் இரவு கஷ்டப்பட்டு தூங்கினேன்; ஸ்வப்னத்தில் யாரோ ஒரு புருஷர் வந்தார்; அவரது உருவம் விபூதிப் பூச்சினால் வெளுத்தும், சந்திரனைக் கொண்டையாய்க் கொண்டும், செம்பட்டையான ஜடையும் கையில் சூலமும் கொண்டிருந்தது. என்னை அணுகி அப் புருஷர் என்னிடம் கருணை கொண்டவர்போல் சொன்னார்: 'குழந்தாய், கர்ப்ப விஷயமாய் நீ யாதொரு கவலையும் படவேண்டாம்; நான் இதைக் காக்கிறேன்; நான் அருளியதே உனக்கிந்த கர்ப்பம்; உனக்கு நம்பிக்கை வருவதற்கு, மேலும் மற்றொரு விஷயத்தைச் சொல்லுகிறேன், கேள்: நாளை ஒரு ஸ்த்ரீ உங்களிடம் ஏதோ விக்ஞாபனம் செய்துகொள்ளத் தன் கணவனை இழுத்துக் கொண்டு, அவனைத் தடுத்துத் தடுத்து அடக்கிக்கொண்டும், வருவாள்; அந்த ஸ்த்ரீ கெட்ட நடத்தையுள்ளவள்; தன் உற்றுறவினருடைய பலத்தால் தன் கணவனைக் கொல்ல ஆசை கொண்டு, முழுதும் பொய்யையே பேசுவாள்; பெண்ணே! நீ முன்னாலேயே வத்ஸராஜனிடம் இதைத் தெரிவித்து அக் கெட்ட ஸ்த்ரீயிடமிருந்து அந்த ஸாதுவான கணவனை விடுபடிம்படிசெய்'. இப்படி உத்தரவிட்டு அம் மஹான் மறைந்ததும் நான் உடனே விழித்துக்கொண்டேன்; இரவும் விடிந்தது.' இப்படி தேவி சொன்னதும், 'சிவபெருமானின் அனுக்ரஹம்தான் இது' என்று சொல்லிக் கொண்டு ஒப்பிட்டுப் பார்ப்பதற்காகக் காலை ஏற்படப்போகும் நிகழ்ச்சியை எதிர்பார்த்த மனதுடன் வியந்து நின்றனர்.

அக்கணமே, துன்புற்றவரிடம் கருணை கூறும் வத்ஸராஜனிடம் வாயிற்காப்பாளிகளின் தலைவன் திடீரென நுழைந்து தெரிவித்தான்: 'அரசே, தன் உறவினரால் சூழப்பட்ட ஒரு ஸ்த்ரீ, தன் ஐந்து பிள்ளைகளுடன், ஸ்வதந்திரத்தை யிழந்து பரிதவிக்கும் தன் கணவனை இழுத்துக் கொண்டு தங்களிடம் ஏதோ தெரிவிக்க வேண்டுமென்று வந்திருக்கிறாள்.' அதைக்கேட்டு, 'வாஸவதத்தையின் ஸ்வப்னத்திற்கு ஒத்திருக்கிறதே இது' என்று வியந்து 'இவ்விடத்துக்கு அவள் அனுப்பப்படட்டும்' என்று வாசற்காப்போனை ஆக்ஞாபித்தான் உதயனன். இதிலிருந்து தனக்குண்டான ஸ்வப்னம் உண்மையானதென்று ஏற்பட, தனக்கு நல்ல ஆண்குழந்தை கிடைக்கப் போகிறதென்று தீர்மானித்துக் கொண்ட வாஸவதத்தை மிகவும் மகிழ்ச்சியை யடைந்தாள். பிறகு வாசலை நோக்கின எல்லோராலும் ஆவலோடு கவனிக்கப்பட்ட அந்த ஸ்த்ரீ, வாசற்காப்போனின் கட்டளையின்மேல் தன் கணவனோடு நுழைந்தாள். நுழைந்ததும். தைன்யத்தை அவலம்பித்தவளாய், முறையே வணங்கி, மஹாராணியுடனிருக்கும் மஹாராஜனிடம் அந்த ஸபையில் தெரிவித்தாள்: 'நான் ஒரு தவறும் செய்யாதவளாயினும், என்னைப் போஷிக்க வேண்டிய கணவனுயிருந்தும், வேறு கதியில்லாத எனக்கு இவன் உணவோ, உடுக்கத் துணியோ கொடுப்பதில்லை.' இப்படி அந்த ஸ்த்ரீ சொன்னதும், அவளுடைய கணவன் சொன்னான்: 'அரசே, இவள் பொய் சொல்லுகிறாள்; தன் உறவினருடன் சேர்ந்துகொண்டு, என்னைக் கொல்ல ஆசைப்படுகிறாள்; இவளுக்கு வருஷம் முடியும் வரைக்கும் வேண்டியதை எல்லாம் முந்தியே கொடுத்துவிட்டேன்; மத்யஸ்தராயிருக்கும் இவளுடைய மற்ற பந்துக்களே இதற்கு ஸாக்ஷிகள்.' இப்படி அவனால் தெரிவிக்கப்பட்டதும் ராஜா சொன்னான்: 'தேவியின் கனவில் சூலம் தரித்த கடவுளே ஸாக்ஷி சொல்லியிருக்கிறார்; ஆகையால், வேறு ஸாக்ஷிகள் எதற்காக? இவளுடைய உறவினரோடு இந்த ஸ்த்ரீதான் கைதி செய்யப்பட வேண்டும்.' இப்படி அரசன் சொன்னதும், புத்திசாலியான யௌகந்தராயணன் பேசலானான்: 'ஆனாலும், அரசே, ஸாக்ஷிகளின் சொல்லைக்கொண்டு, எப்படி உசிதமோ அப்படிச் செய்யவேண்டும்; கனவில் சிவன் சொன்னதை உலகு அறியாததால் கொஞ்சம்கூட நம்பாது.' அதைக்கேட்ட அரசனால் அக்கணமே அழைக்கப்பட்ட ஸாக்ஷிகள், விசாரிக்கப்பட்டதும் அந்த ஸ்த்ரீயே பொய் சொல்லுகிறாள் என்று சொன்னார்கள். அதற்குமேல் நல்லவனான கணவனிடம் வெளிப்படையான பகை கொண்ட அந்த ஸ்த்ரீயை வத்ஸராஜன் அவளுடைய உறவினரோடும் அவளுடைய பிள்ளைகளோடும் தன் நாட்டிலிருந்து வெளியேற்றினான். நல்லோனான அவளுடைய கணவனையும், கருணை நிறைந்த மனதுடைய அரசன், மற்றொரு கல்யாணத்திற்குப் போதுமான ஏராளமான பொருளைக் கொடுத்தனுப்பினான்.

சிரம தசையாகிற குழியில் விழுந்து தவிக்கும் மனிதனை, குரூரமானவளான கெட்ட மனைவி, அவனுயிருடனிருந்தும் அவனை காகம் கொத்தி இழுப்பது போல் இழுப்பாள். நட்பு மிக்கவளாயும், நற் குலத்தவளாயும், பெருமை படைத்தவளாயும், மனதின் வெப்பமனைத்தையும் போக்குபவளாயும் நல்வழியிலுல்லவளாயும் உள்ள மனைவி எவனோ ஒருவனுக்கு அவன் செய்த நல்வினைகளால் கிடைக்கிறாள். அப்படிப்பட்ட மனைவி கிடைப்பது, பாதையின் நடுவில் நெருக்கமாயும் விசாலமாயும் பரவி, வெயிலால் ஏற்பட்ட தாபத்தைப் போக்க வல்ல மரத்தின் நிழல் வழிப்போக்கனுக்குக் கிடைப்பது போல. இப்படி அந்த ஸந்தர்ப்பத்தில் பேசும் அரசனைப் பார்த்து, அவன் பக்கத்திலிருந்த கதை சொல்லுவதில் வல்லவனான வஸந்தகன் பேசினான்:

"அரசே, இப்பிறப்பில் மனிதருக்கு இருக்கும் பகையோ, நட்போ, பெரும்பாலும் பூர்வ ஜன்ம வாஸனையின் பலத்தாலேயே உண்டாகிறது. இவ்விஷயமாய் நான் வர்ணிக்கும் கதையைக் கேளும்:

உபகதை 1

"காசியில் விக்ரமசண்டன் என்ற அரசன் இருந்தான். ஸிம்ஹவிக்ரமன் என்று அவனுக்கு மிகவும் பிரியமான சேவகன் இருந்

தான்; எல்லாச் சண்டைகளிலும் மட்டுமல்ல, எல்லா வகை சூதாட்டங்களிலும் நிகரற்றவனாய் வெற்றி பெறுபவன் இந்த ஸேவகன். அந்த ஸிம்ஹவிக்ரமனுக்கும் உடல், உள்ளம் இரண்டிலும் மிகவும் விகார முள்ளவளாய், கலஹகாரி என்ற உண்மைப் பெயர் கொண்ட மனைவி இருந்தாள். புத்திசாலியான ஸிம்ஹவிக்ரமன் அரசனிடமிருந்தும் சூதாடியும் ஏராளமான பணத்தை அடைந்து, அதை முழுவதும் எப்பொழுதுமே மனைவியிடம் கொடுத்து வந்தான். மூன்று பிள்ளைகள் பெற்றவளாயிருந்தும், மிகவும் போக்கிரியான அந்த கலஹகாரி ஒரு க்ஷணமேனும் கணவனோடு சண்டை போடாமலிருப்பதில்லை. பிள்ளைகளைத் தன் கக்ஷியில் சேர்த்துக்கொண்டு, "நீ வெளியில் குடித்து விடுகிறாய், தின்றுவிடுகிறாய், (வீட்டில்) எங்களுக்கு ஒன்றும் கொடுப்பதில்லை" என்று கத்திக்கொண்டு, கணவனை ஒவ்வொரு நாளும் துன்புறுத்தி வந்தாள். இரவும் பகலும் அன்னம், பானம், வஸ்த்ரம் இவைகளால் திருப்தி செய்விக்கப் பட்டாலும், முடிவில்லாப் பேராசைபோல் மேன்மேலும் அவள் அதிகரித்தாள். பிறகு நாளடைவில் அவளுடைய கோபத்தால் சிரமப் பட்டுப்போன ஸிம்ஹவிக்ரமன் தன் வீட்டைவிட்டு விந்தியவாஸினி அம்பிகையை தரிசனம் செய்யப் போனான். உணவின்றியிருக்கும் ஸிம்ஹவிக்ரமனுக்குக் கனவில் தோன்றி தேவி கட்டளை இட்டாள்: "குழந்தாய், எழுந்திரு, காசி நகரம் செல்; அங்கே எல்லா மரங்களையும்விட பெரிதாயுள்ள நியக்ரோத மரத்தின் அடியை வெட்டினால், உன் இஷ்டப்படி புதையலொன்றை அடைவாய். அப்புதையலின் நடுவில் ஆகாயத்தின் துண்டோ நழுவி விழுந்து விட்டது என்று தோன்றும்படியான கரு நீலக்கல்லால் அமைக்கப்பட்ட பாத்திரம் ஒன்றைப் பெறுவாய். அப் பாத்திரத்தினுள் பார்த்தால், எந்த ஜந்துவின் முன்பிறப்பை நீ அறிய விரும்புகிறாயோ, அப்பிறப்பை அதனுள் பிரதிபலிப்பதுபோல் நீ காண்பாய். அதன் மூலம் உன் மனைவியின் முன்பிறப்பையும் உன் முன் பிறப்பையும் தெரிந்துகொண்டு, உனக்கு வேண்டிய பொருளையும் பெற்று, உன் துன்பம் நீங்கி இன்பத்தை யடைந்தவனாய் அந்த காசியிலேயே வாழ்வாய்." இப்படி தேவியால் சொல்லப்பட்ட ஸிம்ஹவிக்ரமன் விழித்துக் கொண்டு, பாரணை செய்துவிட்டுக் காசியைக் குறித்துச் சென்றான். அங்கு சென்று நியக்ரோத மரத்தடியிலிருந்து புதையலையும் அதன் நடுவில் நீல மணியாலான பாத்திரத்தையும் அடைந்தான். முன் பிறப்பைத் தெரிந்து கொள்ள ஆசை கொண்டு அந்தப்பாத்திரத்தில் முன் பிறப்பில் தன் மனைவியை பயங்கரமான பெண் கரடியாக இருந்ததையும், தான் ஒரு சிங்கமாயிருந்ததையும் பார்த்தான். முன் பிறப்பில் ஏற்பட்ட பெரும் பகையின் பற்றுதலால் தனக்கும் தன் மனைவிக்கும் இருக்கும் பகை போகவே போகாது என்று தெரிந்து கொண்டு, அவ்விஷயத்தில் தனக்கிருந்த துக்கத்தையும் கலக்கத்தையும் விட்டான். அந்த பாத்திரத்தின் மஹிமையாலேயே பார்க்கப் பட்ட பல கன்னிகைகளை தனக்கு மாறுபாடான ஜாதியாயிருந்ததால் விலக்கி விட்டு, முன் பிறப்பில் தனக்கு நிகரான ஸிம்ஹப்பிறவியுள்ள ஒரு கன்னிகையை யோஜித்து தன் இரண்டாவது மனைவியாக மணந்தான். அவளுக்கு ஸிம்ஹஸ்ரீ என்று பெயர். கலகக்காரியென்ற முதல் மனைவிக்கும் ஜீவனம்சத்திற்கு ஒரு பங்கு கொடுத்துவிட்டு, புது மனைவியுடன் தான் பெற்ற புதையலைக்கொண்டு இன்புற்றிருந்தான் ஸிம்ஹவிக்ரமன்.

இப்படியாக, அரசே, மனைவி முதலியவர்களும் இவ்வுலகில் மனிதருக்கு பூர்வஜன்ம ஸம்ஸ்காரத்தை யொட்டிவந்த பகையுடனும் நட்புடனும் ஏற்படுகிறார்கள்." இப்படி வஸந்தகனிடமிருந்து அழகிய கதையைக் கேட்டு, வத்ஸராஜனும் தேவி வாஸவதத்தையும் மிகவும் திருப்தி யடைந்தனர்.

நாட்கள் இப்படிக் கழிந்து வந்தன; அரசனுக்கோ கர்ப்பத்துடன் ப்ரகாசிக்கும் தேவியின் முகசந்திரனை இரவும் பகலும் பார்த்துப் பார்த்துத் திருப்தியே வரவில்லை. இப்படியிருக்கையில், நாளடைவில், வரும் நன்மையை ஸூசிப்பிக்கும்படியான சுபலக்ஷணங்கள் படைத்த பிள்ளைகள் எல்லா மந்திரிகளுக்கும் பிறந்தனர். முதலில் பிரதான மந்திரியான யௌகந்தராயணனுக்கு மருபூதி என்ற பிள்ளை பிறந்தான். பிறகு ருமண்வானுக்கு ஹரிசிகன் என்ற மைந்தன் தோன்றினான். அதற்குப் பிறகு வஸந்தகனுக்கு தபந்தகன் என்ற

புத்திரன் உதயமானான். இத்யகன் என்ற மறு பெயரால் வழங்கப்படும் த்வாரபாலகர்களு டைய தலைவனான நித்யோதிதனுக்கு கோமு கன் என்ற மகன் ஜனித்தான். "பிறந்து சக்ர வர்த்தியாகப்போகும் வத்ஸராஜ குமாரனுக்கு இந்த நால்வரும் பகைவர் குலத்தை ஒழிக்கும் மந்திரிகளாக ஆவார்கள்" என்று, இவர்கள் பிறந்த பெருவிழா கொண்டாடப் படும்போது, வானிலிருந்து அசரீரியான வாக்கு வெளிவந்தது.

சிலநாட்கள் ஆனதும் வத்ஸராஜனின் மஹிஷீ வாஸவதத்தை பிரஸவம் நெருங்கிய வளானாள். புத்ரஸந்தானமுள்ள ஸ்த்ரீகளால் தயார் செய்யப்பட்டதும், எருக்கு, அரணி இவற்றால் ரக்ஷைசெய்யப்பட்ட ஜன்னலோடு கூடியதாயுமுள்ள ஆச்சரியகரமான பிரஸவ மாளிகையை அடைந்தாள். மணிமயமான விளக்குகளின் ஒளியின் சேர்க்கையால் மங்க ளமாய்த்தோன்றும் பலவகை ஆயுதங்கள் அவ ளுடைய கர்ப்பத்தைக் காக்கக்கூடிய தேஜஸை ஜ்வலிக்கச் செய்பவைபோல அந்த மாளிகை யில் காணப்பட்டன. மந்திரசக்தியுள்ளவர் கள் செய்த பல மந்திர தந்திரங்களால் காப் பாற்றப் பெற்ற அந்த பிரஸவ க்ருஹம் பாவம் தீண்ட முடியாததான ஸப்தமாத்ருகைகளின் கோட்டையைப் போலாயிற்று. அந்த ப்ரஸவ க்ருஹத்தில், வெளிக்கிளம்பும் சுத்தமான அம் ருதமயமான காந்தியையுடைய சந்திரனை வான் எப்படியோ, அப்படி அழகான தோற்றமுடைய குமாரனைப் பெற்றாள் வாஸ வதத்தை. அக்குழந்தை பிறந்ததும் அவ்வறை மட்டும் பிரகாசிக்கவில்லை, அந்தத்தாயின் துய ரென்ற இருள் நீங்கிய ஹிருதயமும் பிரகா சித்தது. பிரஸவம் ஆனதும், அந்த மாளிகை யில் அந்தப்புரத்திலிருப்போருக்கு ஆனந் தம் பரவிக்கொண்டிருக்கும்போதே, அந்தப் புர ஸேவக ஜனங்கள்மூலம் வத்ஸராஜன் தனக் குப்பிள்ளை பிறந்ததைக் கேள்விப்பட்டான். அந்த பிரிய ஸமாசாரத்தைத்தெரிவித்த ஸேவ கருக்கு அரசன் தன் ராஜ்யத்தைக்கூட ஏன் கொடுக்கவில்லை யென்றால், அது முறைதவறிய காரிமாயிற்றே என்ற பயத்தாலேயே ஒழிய, தனக்கு ராஜ்யம் வேண்டும் என்ற பேராசையால் அல்ல. ஆவல்கொண்ட மன துடன் உடனே அந்தப்புரம் அடைந்து, வெகு காலங்கழித்துக் கைகூடிய எண்ணத்தோடு கூடி யவனாய்ப் பிள்ளையை அரசன் பார்த்தான். சிவந்து பெரியதாயிருக்கும் உதடாகிற தளம், புருவத்தின் நடுவே சுலித்துக்கொண்டிருக்கும் ஊர்ணை[1] யென்ற கேஸரம்,—இப்படியாய் ஸாம்ராஜ்ய லக்ஷ்மீ வைத்துக்கொண்டு விளையா டும் தாமரை போலிருக்கும் முகம் கொண்டி ருப்பவனும், முன்கொண்டே பயந்துபோன பிற அரசர்களுடைய ராஜ்ய லக்ஷ்மிகளால் விடப்பட்ட தம் அடையாளங்களான குடை, சாமரம் முதலிய குறிகளால் இரண்டு மிருது வான அடிகளிலும் அடையாளம் பண்ணப் பட்டவனுமிருக்கும் மைந்தனைக் கண்டான். பிறகு, களிப்புப் பெருக்கின் வேகத்தால் மலர்ந்தது போன்ற கண்ணால் அரசன் தனக்கிருக்கும் புத்ர ப்ரேமையையே சுரப்பது போல் ஆனந்தக்கண்ணீரைச் சுரந்து கொண்டி ருக்க, யௌகந்தராயணன் முதலிய மந்திரிகள் ஸந்தோஷப்பட்டுக் கொண்டிருக்க, அந்த ஸம யத்தில் பின்வருமாறு ஆகாசத்திலிருந்து ஒரு வாக்கு எழுந்தது. "அரசே, உனக்குப் பிறந் திருக்கும் பிள்ளை காமதேவனின் அவதாரம்; இவன் பெயர் நரவாஹனதத்தன் என்று தெரி ந்துகொள். இந்த சோம்பலற்ற நரவாஹன தத்தன் சீக்கிரத்தில் எல்லா வித்யாதரத் தலை வர்களுக்கும் சக்ரவர்த்தியாகி, தேவ அளவில் ஒரு கல்பம் இருப்பான்". இப்படிச் சொல்லி விட்டு வாக்கு நின்றதும் ஆகாசத்திலிருந்து முதலில் பூமழை பெய்தது; பிறகு துந்துபி யொலி முழங்கியது. இப்படிப் பிள்ளை பிறந்த விழாவை தேவர்களே தொடங்கியதால் அதில் ஊக்கம் மேலிட, விழாவை மேன்மையாக மிக வும் ஆனந்தங்கொண்ட அரசன் நடத்தினான். வீடுகளினுதித்த தூர்யங்களின் சப்தங்கள் 'உங்களுடைய அரசன் பிறந்துவிட்டான்' என்று வித்யாதரர்களுக்குச் சொல்வதுபோல திக்குகளில் சுழன்றன. காற்றினால் மாளி கைகளின் உச்சியில் அடித்துக்கொண்டிருக் கும் சிவப்புக் கொடிகள்கூடத் தங்கள் சிவப்புக் காந்தியால் ஒன்றன்மேல் ஒன்று குங்குமத்

1. 'ஊர்ணா' என்பது புருவங்களுக்கிடையே அர்த்தசந்திரன் போல் உண்டாயிருக்கும் மயிர்; இது க்ஷத்திரியருக்குரிய லக்ஷணங்களில் ஒன்றும்.

தைத்[2] தூவிக்கொள்ளுகின்றனவோ என்று தோன்றிற்று. நகரில் ஒவ்வொரு அடியிலும் கூடிய விலைமாதர்கள், பூலோகத்தில் அங்கங்களுடன் காமதேவன் பிறந்துவிட்டானென்ற திருப்தியால் கூடிய தேவமாதரோ என்று தோன்றும்படி நர்த்தனஞ் செய்தனர். உத்ஸவத்தை நடத்தும் அரசனிடமிருந்து புது ஆடையாபரணங்களை ஜனங்கள் அனைவரும் அடைய, அந்த நகரம்முழுதுமே ஸமமான செல்வச்செருக்குடையதாய் ஆயிற்று. கேட்போருக்கும், தன்னை அண்டி ஜீவிப்பவருக்கும் அரசன் பொருள்களைப் பெய்தபோது, அந்த நகரில் ஒன்றுமில்லாமல் போனது அரசனின் பொக்கிஷம் ஒன்றுதான். வாத்யங்களின் முழக்கத்துடனும், நர்த்தனப் பெண்களுடனும், மங்கள வஸ்துக்களுடனும், காவலாளிகளோடு கூட நற்காணிக்கைகள் நிரம்ப எடுத்துக்கொண்டு நல்லொழுக்கங் கொண்டவர்களான சிற்றரச அந்தப்புர ஸ்த்ரீகள், நாற்புறமிருந்தும் நாலு திக்குகளுமே வருவதுபோல் அந்த நகருக்கு வந்தனர். அந்நகரில் அப்பொழுது கண்ட சேஷ்டையெல்லாம் நர்த்தனமாயிருந்தது; சொல்லப்படும் சொல்லெல்லாம் பூர்ணபாத்ரமா[3] யிருந்தது; வியவகாரமெல்லாம் ஒரே பெருங் கொடையாயிருந்தது. சப்தமெல்லாம் தூர்யவாத்யமயம்; வானெல்லாம் செம்பொடி; தரையெல்லாம் பாடகர்; எல்லாமே அந்த நகரத்தில் ஆனந்த மயமாயிருந்தது. நகரஜனங்களின் பூர்த்தியான மனோரதங்களுக்கு ஒப்ப, பல நாள் வளர்த்தப்பட்ட அந்த புத்திரஜன்ம விழா அந்த நகரத்தில் நடந்தது.

வளர்பிறைச்சந்திரன்போல் நாளடைவில் அந்தக் குழந்தை ராஜபுத்ரனும் வளர்ச்சியடைந்தான். முன் தைவிக வாக்கு கொடுத்த நரவாஹனதத்தன் என்ற பெயரை அரசனும் முறைப்படி நாமகரணத்தன்று குழந்தைக்கு இட்டான். பளபளப்பாயும் வழவழப்பாயும் ஸுந்தரமாயுமுள்ள நகங்கள் ஒளிக்க, அக்குழந்தை தட்டுதடுமாறிப்போடும் இரண்டு மூன்று அடிகளைக்கண்டும், முளைக்கும் பல் முளைகளோடு அக்குழந்தை தட்டுத் தடுமாறிப் பேசும் இரண்டு மூன்று பதங்களைக் கேட்டும் அரசன் மிகவும் திருப்தியை அடைந்தான்.

பிறகு அந்தக்குழந்தையான அரசகுமாரனிடம் அரசனின் சிறந்த மந்திரிகள் நால்வரும் அரசனுடைய மனத்திற்கு இன்ப மளிக்கும் தத்தம் குழந்தையைக் கொண்டுவந்துவிட்டனர்; யௌகந்தராயணன் முதலில் தன் மருபூதியைக் கொண்டுவந்துவிட்டான்; ஹரிசிகனை ருமண்வானும், கோமுகனை இத்யகனும் தபந்தகனை வஸந்தகனும் கொண்டுவந்து விட்டார்கள். புரோகிதரான சாந்திகரரும் தன் தமையனுக்கும் பிங்களிகைக்கும் பிறந்த இரட்டைப் புத்திரர்களான சாந்திஸோமனையும் வைச்வானரனையும் கொண்டுவந்து விட்டார்.

இப்படி இவர் தம் குழந்தைகளை ராஜபுத்திரனோடு கொண்டுவந்து சேர்த்த க்ஷணம் ஆகாசத்திலிருந்து மங்கள வாத்திய கோஷத்தால் அழகுபட்ட திவ்ய புஷ்ப வர்ஷம் விழுந்தது. அம்மந்திரிக் குழந்தைகளையும் பெருமைப்படுத்தி, பட்டமஹிஷி வாஸவதத்தையோடு அரசன் அச்சமயம் பேரானந்தமடைந்தான். இளமைப் பருவத்திலேயே வேண்டியவராயும் தன்னிடமே ஈடுபட்டவராயுமிருக்கும் ஆறு மந்திரிக் குழந்தைகளோடு எப்பொழுதும் கூடியிருந்த ராஜபுத்திரன் நரவாஹனதத்தன் பெரிய விருத்திக்குக் காரணங்களான ஆறு ராஜ குணங்களோடு[4] கூடியவன் போலிருந்தான். தன் விளையாட்டுகளுக்கிடையே அழகிய விநோத மழலைகளை

---

2. கொண்டாட்டங்களில் குங்குமம் முதலிய சிவப்புப் பொடிகளையும் சிவப்பு நீரையும் ஒருவர்மேல் ஒருவர் வாரி இறைத்துக் கொள்ளுவர்.

3. ஆடையாபரணங்களோடு கூடிய பாத்திரங்கள் புத்திரஜன்மம் போன்ற சுபகாலங்களில் வேலையாட்களால் 'எனக்கு, எனக்கு' என்று பிடுங்கிக் கொள்ளப்படும்; இச்செயலுக்குப் பூர்ணபாத்ரம் என்று பெயர்.

4. ஆறு ராஜ குணங்களாவன நட்புச்செய்து கொள்வது, பகை கொள்வது, படையெடுப்பு, வழித்தங்குதல், உதவி தேடுதல், பகைக் கூட்டுறவைப் பிரித்தல்.

பேசிக்கொண்டும், அன்புகொண்ட மனதுடன் வந்துபோகும் அரசர்களில் ஒருவருடைய மடியிலிருந்து மற்றொருவர் மடிக்குப் போய்க்கொண்டும், புன்னகை பூத்த முக கமலத்தோடும் கூடிய தன் பிள்ளையை ஆவலோடு பார்த்துக்கொண்டே இருந்த வத்ஸராஜனுக்குச் சொல்ல முடியாதபடி களிப்புக்குமேல் களிப்பு கூடும்படியாக நாட்கள் கழிந்தன.

மூன்றும் அலை முற்றிற்று.

நரவாஹனதத்த ஜனனம்

என்ற நான்காம் லம்பகம் முற்றிற்று.

துஞ்சினன் காலத்துப் பஞ்சம்.

(பிரம்மஶ்ரீ Y. மஹாலிங்க சாஸ்திரிகள், M.A., B.L.,)

[இது கல்ஹண மஹாகவியின் ராஜதரங்கிணியிலிருந்து சுருக்கி மொழி பெயர்க்கப்பட்டது.]

காச்மீர தேசத்தில் துஞ்சினன் என்ற அரசன் அரசு புரிந்துவரும் ஸமயத்தில் ஒரு கோரமான பஞ்சம் ஏற்பட்டது. புரட்டாசி மாதத்தில் அறுவடை செய்வதற்குத் தயாராக நெற்கதிர்கள் செழித்தோங்கியிருக்கும் போது, திடீரென்று பனி பெய்தது. கதிர்கள் கருகிப்போய் அழிந்தன. அதன்பின் அத்தேசத்தில் கொடூரமான துர்பிக்ஷம் பரவியது. ஜனங்கள் ஆகாரத்திற்கு வழியின்றிப் பசியினால் பரிதவித்து மாண்டனர். வழிகளிலும் தெருக்களிலும் பிணங்கள் குவிந்தன. பசியின் பீடையினால் பெண்டாட்டி பிள்ளை என்ற தாட்சண்ணியமற்று, குரூரமான மனோநிலையையுடைய ஜனங்கள், வெட்கம் மானங்களை விட்டுப் பிறப்பை மறந்து, அகப்பட்டதை அள்ளி, வாயில் போட்டுக்கொள்ளும் நிலையை அடைந்தார்கள். ஒரு திவலை தின்பண்டத்தின் பொருட்டு ஒருவருக்கொருவர் அடிதடியில் இறங்கினார்கள். இவ்விதம் ஜனங்கள் அழிவதைக் கண்டு அரசன் மனமுருகினான். தன்னிடமிருந்த எல்லாப் பொருள்களையும் செலவிட்டு உதவிபுரிந்தான். அவனுடைய பட்டமகிஷியும், இந்த கஷ்டநிவாரணத்தில் ஈடுபட்டுத் தனக்குச் சொந்தமான ஸகல திரவியங்களையும் ஆபரணங்களையும் ஸமர்ப்பித்தாள். அரசனுக்குட்பட்ட பல கனதனவான்களும் தங்களுடைய செல்வங்களை அவ்விதமே விநியோகம் செய்தார்கள். இவ்விதம் சேகரிக்கப்பட்ட தனங்களைக்கொண்டு, தூரதேசங்களிலிருந்து உணவுப் பொருள்களை வாங்கிவரச் செய்து அல்லும் பகலும் ஆட்களை வைத்து விடுதியிலும் தெருவிலும் கரைகளிலும் காடுகளிலும் பசியால் வருந்தி உயிருக்குத் தடுமாறும் ஜனங்களுக்கு உணவளித்துவர அரசன் ஏற்பாடு செய்தான். ஆனால், கொஞ்சகாலத்தில் தனமெல்லாம் செலவாகிவிட்டது. வெளி தேசங்களிலிருந்துகூட உணவுப் பொருள் கிடைப்பது அரிதாகி விட்டது. காருண்யமுள்ள அவ்வரசனுக்குச் செய்வதென்னவென்று தோன்றாமல், அவன் கடுந் துக்கத்துடன் அமைதியற்று நித்திரையில்லாமல் ஓரிரவில் தன் குலதெய்வமான அம்பிகையின் சந்நிதிக்கேகி, கண்ணீருதிர்த்துக் கதறலானான். "பரதேவதே! நான் என்ன பாவம் செய்தேன்? என் பாபத்தினாலல்லவா ஒரு குற்றமுமறியாத இந்த ஜனங்கள் என் காலடியில் இவ்விதம் மரிக்கின்றனர். நான் மிகவும் துரதிர்ஷ்டசாலி. இவ்விபத்திலிருந்து என் பிரஜைகளை மீட்கச் சக்தியற்றவனாய் ஒருவழியும் தெரியாதவனாய், அவர்களின் துக்கத்துக்கு ஒரு சாட்சிபோன்று பார்த்துக்கொண்டிருக்கின்றேன். பிரஜைகளை ரட்சிப்பது என் கடமையாக இருக்க, நான் அவர்களைக் காப்பாற்ற இயலாதவனாக இவ்விதம் உயிர் வைத்திருப்பது எனக்கு சகிக்கவில்லை. ஏதோ சில நாட்களாக, என்னால் முடிந்தவரையில் நான் ஜனங்களுக்கு உணவளித்து வந்தேன். இன்றுமுதல் அப்படிச் செய்வதும் சாத்தியமில்லை. இந்தக் கஷ்டத்திலிருந்து என் பிரஜைகளை நான் எப்படி உத்தரணம் செய்வேன்? இவ்வுலகத்தின் பரிதாப நிலையைப் பார்க்க எனக்குச் சகிக்கவில்லை. இப்பொழுது பொழியும் பனியால்

சூரியன் புலப்படவில்லை. எங்கும் ஜனசஞ்சாரம் கிடையாது. இத்தேசத்தில் விளங்கிய சூரர்களென்ன, புத்திமான்களென்ன, வித்துவான்களென்ன, பெரியோர்களென்ன எல்லோரும் மறைந்து விட்டார்கள். ஜனங்கள் குதூகலத்துடன் இருக்கப் பார்த்து ஆனந்தித்து நிம்மதியான மனதுடன் இரவு படுத்துறங்கும் அரசனே புண்ணியம் செய்தவன். நானோ பாவி'' என்று புலம்பிய வண்ணமாய் அரசன் வஸ்திரத்தினுல் முகத்தை மூடிக்கொண்டு வாய்விட்டு அலறினன். அப்பொழுது அம்பிகையானவள் அசரீரி வாணிரூபமாக இவ்விதம் கட்டளை யிட்டாள்:—அப்பா! தெய்வீகமான விபத்துக்களை நீக்கமுடியாததின் பொருட்டு நீ இவ்விதம் ஏன் வருத்தப்பட வேண்டும்? பிரஜைகள் தங்களுடைய துராசாரங்களின் பலனுக இவ்விதம் பஞ்சத்தினுல் பீடிக்கப்படுகிருர்கள். அவர்கள்பேரில் தேவேந்திரனுக்குக் கடுங்கோபம் பிறந்திருக்கிறது. ஆனுலும், நீ என்னைச் சரணமடைந்ததினுல் நான் உன் குறையை நீக்குவேன். பிரஜைகளின் உயிரைத் தன்னுயிராகப் பாவிக்கும், உத்தமனுன உன் வேண்டுகோளுக்கிணங்கி, உன் பிரஜைகளுக்கு இப்பஞ்சம் நிவிருத்தி ஆகும் வரையில் ஆகாரமளிப்பேன்'' என்று. அரசன் மனம் மலர்ந்து வெளிவந்து அம்பிகையின் அனுக்கிரகத்தை ஜனங்களுக்குப் பறையறைவித்தான். அன்று பொழுது விடியும் தருணத்தில் அத்தேசத்தில் எங்கும் தானிய மழை பொழிந்தது. பனிமூட்டம் விலகி பாஸ்கரனும் ஒளிவீசி உதித்தனன். பஞ்சமும் மறைந்தது; பூபதியும் மகிழ்ந்தான்.

அவந்திவர்மன் அரசியல்.

(பிரும்மஸ்ரீ ய. மஹாலிங்க சாஸ்திரிகள் M.A., B.L.,)

[இது கல்ஹண மஹாகவியின் ராஜதரங்கிணியிலிருந்து சுருக்கி மொழி பெயர்க்கப்பட்டது.]

காச்மீர தேசத்தில் கார்க்கோடக வம்சம் க்ஷீணித்துப் போனபின், சூரன் என்ற மந்திரி உத்பல வம்சத்தைச் சேர்ந்த அவந்திவர்மன் என்ற வாலிபனை அரசனுக்கினுன். அவந்திவர்மன் சூரனின் சொற்படி ராஜ்யத்தை நடத்தி வந்தான். அரசனுக்கும் மந்திரிக்கும் இருந்த அந்நியோந்யமானது ராஜ்ய நிருவாஹத்திற்கு மிகவும் மேன்மை தரக்கூடியதாக இருந்தது. அரசன் பொறுமையுடையவனுகவும் கிருதக்ஞனுகவும் இருந்தான். மந்திரி அகம்பாவமற்றவனும், அரசனிடத்தில் பக்தியோடு கூடினவனுமாக இருந்தான். இவ்விருவரின் ஒற்றுமையால் ஜனங்களுக்குப் பல விதத்திலும் நன்மை பெருகிற்று.

அவந்திவர்மன் வாலிபனுனுலும், விவேகி. தனக்கு முன் அரசுபுரிந்த மன்னர்களின் காலத்தில் விளைந்த ராஜ்யக் கொந்தளிப்புகளையும், ஸிம்ஹாஸனத்திற்காக அவ்வப்போது ஏற்பட்ட அக்கிரமச் செயல்களையும், அரசுரிமையின் நிலையற்ற தன்மையையும், நன்கு தெரிந்து கொண்டவன். அவனுக்கு அந்தரங்கத்தில், லக்ஷ்மியின் சஞ்சலத் தன்மையைக் குறித்து வெறுப்பு இருந்தது. பட்டாபிஷேகம் ஆனபிறகு பொக்கிஷத்தில் இருக்கும் ஏராளமான ஐசுவரியத்தை அவன் பார்வையிட்டான். தனக்குமுன் அரசாண்ட அரசர்களின், பெயர் வெட்டப்பட்ட தங்கப் பாத்திரங்களைப் பார்க்கும்பொழுது, "இவையெல்லாம் வைத்து அன்புடன் அனுபவித்த அம்மன்னர்கள் எங்கே? இவைகளை வைத்து ஆள, எனக்கு மனமில்லை. இவைகளைப் பார்க்கும் பொழுது, எனக்கும் அதே கதி தான் ஒரு காலம் ஏற்படும், என்ற நினைவு எழுந்து உள்ளம் பதறுகிறது'' என்று நினைத்தான். பின்பு இறந்துபோன அரசன் தரித்திருந்த ஆபரணங்

களை நோக்கும்போது அவனுக்கு மேற்கூறிய வண்ணமே அருவருப்பான எண்ணங்கள் தோன்றின. இவ்வித மனப் போக்குடன் அவன் சிந்தையில் ஆழ்ந்து பொக்கிஷத்திலிருந்த பொன் ஆபரணங்கள் இவைகளை பிராமணர்களுக்குத் தானம் செய்து விடுவதென்று தீர்மானித்தான். மறுதினம் தன் தீர்மானப்படியே தங்க சாமான்கள் அனைத்தையும் தங்கப் பொடியாக மாற்றி அப்பொடியை கைகையாக அள்ளிப் பிராமணர்களுக்கு வாரி இறைத்து விட்டான். ஆபரணங்களையும் அவ்விதமே தானம் செய்தான். சத்ர சாமரங்களைத் தவிர வேறொரு பொருளையும் அவன் மிகுதி வைத்துக் கொள்ளவில்லை.

அரசு புரிதலிலும் இவ்விதமே அவன் தனது தாராளத் தன்மையை விளக்கினான். தன் மாற்றாந்தாய்க்குப் பிறந்த தம்பியான சூரவர்மா என்றவனுக்கு இளவரசு சூட்டினான். தன் பந்துக்களுக்குத் தனக்குச் சமானமான பற்பல அதிகாரங்களைக் கொடுத்தான். மேலும் பற்பல கோயில்களைக் கட்டினான். பல கிராமங்களை ஏற்படுத்தினான். இவனது உதார குணங்களைப்பற்றி இவனது மந்திரிகளும் தம்பியும் பந்துக்களும், பற்பல தர்மஸ்தாபனங்களைச் செய்தார்கள். அதில் முக்கியமாக சூரன் என்ற மந்திரியானவர் சிவாலயமும் மடமும் கட்டுவித்தார்; சூரபட்டணம் எனற நகரத்தையும் நிர்மாணம் செய்தார்.

அவந்திவர்மன் கவிகளுக்கு நண்பனாகவும் இருந்தான். முக்தாகணன், சிவசுவாமி, ஆனந்தவர்த்தனர், ரத்நாகரன், முதலிய மஹாப்ரஸித்தி பெற்ற கவிகள், இவனால் போற்றப்பட்டவர்கள். பிரசாரம் குன்றிப் போன பற்பல சாஸ்திர வித்யைகளை, உயிர்ப்பித்து அபிவிருத்திக்கு கொண்டுவரும் பொருட்டு அரசனும் மந்திரியுமாக வெளிதேசங்களிலிருந்து வித்வான்களை வரவழைத்துத் தங்கள் ஸபையில் இருக்கச் செய்தார்கள்.

அரசன் விஷ்ணுபக்தனாக இருந்தபோதிலும் தன் மந்திரியின் மனப்போக்கை அனுஸரிப்பதின் பொருட்டு சிவாலயங்கள் கட்டுவித்து அங்கங்கு தெய்வபூஜையின் நிமித்தம் பல கிராமங்களை தத்தம் செய்தான். மந்திரியும் அரசனின் மனம் சிறிதேனும் நோவாமல் இருக்கும் வண்ணம் எல்லா விஷயங்களிலும் நடந்து கொண்டான். இதற்கு உதாஹரணமாக இங்கு ஓர் சம்பவத்தைக் குறிப்பிடுவோம். மந்திரி டாமரர்கள் என்ற தன்னுடைய இனத்தைச் சேர்ந்த தன்வன் என்ற பெயரையுடைய ஒருவனை அரசனால் கோவிலுக்கு விடப்பட்ட கிராமங்களுக்கு கார்வாராக நியமித்து இருந்தான். சூரனுக்கு தன்வனிடம் அதிக நம்பிக்கையும், பிரீதியும் இருந்தபடியால் அவனைத் தன்மகன் போல் பாவித்து வந்தான்.

ஆனால் தன்வன் மேலதிகாரியிடம் பயமில்லாததினால் சுதந்திரப் போக்குடையவனாகி நெஞ்சில் திரவம் இல்லாதவனாகவும் பேராசை கொண்டவனாகவும் ஆகி பற்பல அகாரியங்களைச் செய்து வந்ததுடன் தர்மசொத்துக்களை தனக்கே உபயோகப்படுத்திக்கொண்டு சுவாமிக்கு நைவேத்தியங்கூட ஸரியாக நடத்தாமல் இருந்து வந்தான். ஒருசமயம் அரசன் சிவதரிசனத்தின்பொருட்டு மந்திரி சிப்பந்திகளிடன், பூதேசுவரருடைய ஆலயத்திற்கு வந்திருந்தான். அங்கு நைவேத்திய பீடத்தில் அர்ச்சகர்கள் வேகவைத்த காட்டுக் கருவேப்பிலையை கொண்டு வைத்தார்கள். அதைக் கண்டு வியந்து அரசன் வினவினான், "ஏன் இதை நிவேதனம் செய்கிறீர்கள்? வேறு நிவேதனம் கிடையாதா?" என்று. அப்பொழுது அர்ச்சகர்கள் தன்வனின் அட்டூழியங்களைச் சொல்ல ஆரம்பித்தார்கள். ஆனால் அரசன் அவ்வார்த்தைகளைக் காதில் வாங்காதவன் போல் நடித்துத் திடீரென்று தனக்கு வயிற்று வலி உண்டானதாகச் சொல்லிவிட்டுப் பூஜையை முடித்துக் கொள்ளாமல் விரைவாய் அவ்விடம் விட்டகன்றான். இதைப் பார்த்துக் கொண்டிருந்த மந்திரி அரசனின் மனவாட்டத்திற்குக் காரணத்தை ஊஹித்து அக்கணமே ஆட்களைக் கொண்டு தன்வனை வரவழைத்து அக்கோயிலில் ஓர் புறத்துள்ள பைரவரின் சந்நிதியில் வாள்வீரர்களைக் கொண்டு அவனைச் சிரச்சேதம் செய்வித்தான். உடனே வெளியே சென்று அரசனிடம் நடந்ததைத் தெரிவித்தான். நடந்ததை அறிந்துகொண்ட அரசன் வெட்கிப்போனான். பின்பு சூரனால்

கோயிலுக்கு அழைத்துக் கொண்டு போகப் பட்டு பூதேச்வரரின் பூஜையை முடித்துக் கொண்டான்.

பரஸ்பரம் இவ்விதமாக மனமொத்து நடந்து கொண்டுவந்த இவ்வரசமந்திரிகளின் தர்ம நிலை வழுவாத நிர்வாகத்தின் மூலமாகக் காச்மீர தேசம் மிக்க உயர்ந்த நிலைமையை அடைந்தது. பத்து வருஷகாலம் அத்தேசத்தில் பிராணிகள் மரிக்கவேயில்லை. குளிர்காலத்தில் கரையோரத்தில் மீன்கள் ஜலத்தைவிட்டு வெளியே வந்து குளிர் காய்ந்தன. மேலும் அக்காலத்தில் கல்லடர் முதலான சித்தர்கள் காச்மீரத்தில் அவதரித்தார்கள்.

அப்படி அவதரித்த அவர்களில் ஸுய்யர் என்பவரால் காச்மீரதேசத்திற்கு வெகு காலமாக ஏற்பட்ட ஜலக்கஷ்டமானது நிவர்த்தியாயிற்று. உண்மையில் காச்மீரதேசத்தில் குறைவு இல்லை, அது மலையடர்ந்த தேசமானபடியால் அதில் ஏராளமான ஜலப்பெருக்காக இருந்தது. ஆனால் ஜலப்பாசன மார்க்கங்கள் சரியாக ஏற்படுத்தப்படாமையினால், ஓர் பக்கம் வெள்ளப்பாழும், மற்றோர் பக்கம் காய்ச்சல் பாழுமாக இருந்து அடிக்கடி அந்த தேசத்தில் பஞ்சம் பாவி வந்தது. ஒவ்வொரு ஸமயம் கடும் பஞ்சகாலத்தில் ஒரு காரி தான்னியம் ஆயிரத்தைம்பது, தினாரங்கள் விலைவிற்றது. அவந்திவர்மனுக்கு முன்னிருந்த அரசனான ஜயாபீடன் ஜலப்பாசன வசதிகளை ஏற்படுத்தக் கொஞ்சம் முயற்சி எடுத்துக்கொண்டான். ஆனால் பின்வந்த அரசர்களின் அசக்தியினால் அம்முயற்சிகள் நிலை நிற்கவில்லை. ஸுய்யர் மஹா புத்திமான். சிறு குழந்தைகளுக்குக் பாடம் கற்பித்துத் தன் ஜீவனத்தை நடத்தி வந்தார். ஒரு ஸமயம் பல பண்டிதர்கள் கூடி காச்மீர தேசத்து பஞ்சக் கொடுமைகளைப்பற்றிப் பரிதாபமாகப் பேசிக்கொண்டிருக்கும் ஸமயத்தில் ஸுய்யர் 'இதை நிவிருத்திக்கும் மார்க்கம் எனக்குத் தெரியும். ஆனால் நான் சொல்வதை யார் கேட்கப் போகிறார்கள்' என்று சொன்னார். இவ்வார்த்தை அரசன் காதிற்கெட்டியது. அரசன் ஸுய்யரை வரவழைத்து உம்மால் என்ன செய்ய முடியும் என்று கேட்டான். அதற்கு ஸுய்யர் எனக்கு யுக்தி தெரியும் என்று பதிலளித்தார். சபையோர்கள் இவன் பைத்தியக்காரன் என்று நகைத்தார்கள். அரசனோ அவருடைய திறத்தைப் பரீட்சித்துத் தெரிந்துகொள்ள வேண்டுமென்றெண்ணி அவர் வசம் ஏராளமான தனங்களைக் கொடுத்து நீர்ப்பாசன விதிகளை அனுஷ்டிக்கும்படி வேண்டிக் கொண்டான். பின்பு ஸுய்யர் மலைகளின் மேலிருந்து நெருங்கிவரும் விதஸ்தா என்ற நதியின் மார்க்கத்தைத் தடுத்து ஜலத்தைக் குறுக்கே திரும்பச்செய்து, மலைச் சிகரங்களிலிருந்து அடிக்கடி உருண்டு விழுந்து ஏற்பட்ட பற்பல கல் அடைப்புகளைப் பிரித்தெடுத்தும் ஆங்காங்கு அணைகளைக்கட்டி ஜலத்தைத் தேக்கிக் கால்வாய்களின் மூலம் வெளிப்படுத்தியும் இன்னும் பலவிதமான பெருமுயற்சிகள் செய்தார், நீரில் மூழ்கியிருந்த கிராமங்களைக் காப்பாற்றியும், நீர்ப்பாசனமளித்து அதி சீக்கிரத்தில் தேசமெங்கும் சுபிக்ஷம் உண்டாகும்படி செய்தார். இவர் பாசனதிட்டங்களை முடித்தபின், பல கால்வாய்களுடன் விளங்கிய விதஸ்தா நதியானது ஒரு உடலும் பல படங்களும் உடைய ஒரு பெரிய நாகம்போல், தேசத்தை ஆக்கிரமித்தது. விதஸ்தை ஸுய்யருடைய காலம் முதற்கொண்டுதான் ஸிந்து ஸங்கமத்தை அடைந்தது. விதஸ்தா ஸிந்து ஸங்கமத்தில் ஸுய்யர் சில விஷ்ணு ஆலயங்களைக் கட்டுவித்தார்.

காச்மீர தேசத்தில் ஸுய்யர் காலத்துக்கு முன் நல்ல சுபிக்ஷம் என்று சொல்லக்கூடிய காலத்தில்கூட ஒரு காரி தானியமானது இருநூறுபொன் விற்றது. ஸுய்யருடைய ஜலப்பாசன சீர்திருத்தங்களுக்குப் பிறகு ஒரு காரி தானியம் இருபத்தாறுபொன் விலைக்கு வந்தது.

விதஸ்தையின் ஜலம் தேக்கப்பட்ட ஸரஸிற்கு, மஹாபத்மஸரஸ் என்று பெயர். அந்த ஸரஸின் கரையில் ஸுய்யாகுண்டலம் என்ற ஒரு கிராமத்தை நிருமாணம் செய்து ஸுய்யர் பிராமணர்களுக்கு தானம் செய்தார்.

இவ்விதம் ஆயிரக் கணக்கான கிராமங்களுக்குப் புத்துயிரளித்த ஸுய்யரை அவந்திவர்மன் மிக்க அன்புடன் பாராட்டி வந்தான்.

கீதப் பகுதி

பர்பவிநாச முதலியார் பாடல்கள்

(பண்டித ச. சோமசுந்திர தேசிகர் உதவியது)

பாபவிநாச முதலியார்.

பாபவிநாச முதலியார் என்ற ஒரு சிறந்த சங்கீத வித்துவான் தமிழ் நாட்டிலே சென்ற பதினேழாம் நூற்றுண்டிலே வாழ்ந்தனர். அவரது ஜீவியசரித்திரம் ஒன்றும் இது பொழுது அறிதற்கியலாவிடினும் அவர் மிகுந்த தெய்வபக்தியுடையவரென்று அவருடைய பாடல்களால் அறிகின்றோம். அவர் பதம் பாடுவதிலும் வல்லவர்; அவருடைய பாடல்களுட் பல நிந்தாஸ்துதியாகவே காணப்படுகின்றன. இன்றும் திருவாரூரில் அவருடைய பாடல்களுட் சில தென்சாளரவாயிலில் தேவரடியார்களால் பாடப்படுகின்றன. அவற்றுள் மூன்று பாடல்கள் இராக தாளங்களோடு கீழே பதிக்கப்படுகின்றன.

ச. சோமசுந்தர தேசிகன்.

1 இராகம் : பைரவி — தாளம் : மிச்ரம்

முகத்தைக் காட்டியே தேகமுழுமையும் காட்டாத
மூடுமேந்திரம் ஏதையா

ஜகத்தி லதிகமான செழுத்த மேனியி
லான முண்டோ ஆரூரில் வாசரே தியாகேசரே[1] ... முக

1. பிரதிபேதம் தியாகராஜரே.

சாயரட்சையில் வந்து களிக்கப் பார்ப்போ மேன்றால்
சாந்தணிந்த செவ்வந்தித் தோட்டைக் காட்டி மயக்கி
மாயாவித் தனமுள்ள மந்தஹாஸ முடனே
மான்மழு வேந்திய கரத்தைக் கூட மறைத்து ... முக

கூத்தாடும் போதங்கே குனிந்து பார்ப்போ மேன்றால்
குதித்துக் குதித்து முன்பின் ஞேடும் விதத்தை யுற்றுப்
பார்த்தாற் பசிகள்தீரும் பரவசமாகச் செய்யும்
பணியால் மறைத்துக்கோண் டோருபாதம் காட்டுவேதல்லால் ... முக

அபிஷேக காலத்தில் அருமைத் திருமேனியை
அதிரக சியமான[1] தகட்டால் மறைக்கிறீர்
விபவந்தந்து ரேட்சிக்கும் திவ்யமங்கள ரூபரே
விடங்கத் தியாகதி ராஜரே பாபவிநாசரே ... முக

2 *இராகம் : பந்துவராளி* *தாளம் : மிச்ரம்*

பேரும் நல்ல த்யாகர் ஊரும் நிறைசெல்வத் திரு ஆரூர்
பிரயோஜனம் என்ன சோல்லையா

வாரிச் சோரிவீ ரேன்றால் வார்த்தை மாத்திரம்—ஒருவரும்
வராம லோருபோல் லாதவனை வாசல் வைத்தீர் ... பேரும்

வாசல் நந்திக்குத் தப்பி வந்து தேசியேன்றால்
வலதுகை யனலேந்திச் சுடுமே
வீசு மனலைத் தள்ளி வருவோமேன்றால்—மனம்
வீரவேண் டயத்துக்கு மிகப்பயப்படுமே ... பேரும்

வீரவேண்டயத்துக் குள்ளாகி யாடரவம்
விஷத்தைத் சோரிவே னென்று இருக்குதே
பேரை நம்பி வந்தோமேன்று சோல்லப் போனால்
பித்தனேன் றேருபேரை வைத்துக்கோண் டிருக்கிறீர் ... பேரும்

பித்தரோ தியாகரோ பேசுமேன்றால் மனம்
பேரும் பாவ நாசமேன் றழைக்கிறீர்
எத்தனை சோன்னாலு மும்மை விடேனேன்றால்
இந்தா நீற்றையேன்று தந்துபின் னசைக்கிறீர் ... பேரும்

1. (பி-ம்.) *அதிரகசியமாக*

3 இராகம் : உசேனி தாளம் : ஆதி

உமக்கு ப்ரீதிவரச் செய்வதெப்படி நான்
ஒருவகையுங் காணேன்

கமலைப் பதியில் வாழுந்தியாகவை[1] போகரே
கருணைவைத் தென்னை முற்றுங் காக்கக் கடனே ஐயா ... உமக்கு

முந்திவந்து பதம்பணிய வேணு மென்றால்
முடியடி வடிவில்லையே சுவாமி
முடியடி வடிவில்லையே
அன்பாக வும்மை வலஞ்சூழ்ந்து வருவதற்கு
அண்டம் ஆதியெல்லாம் அகண்ட பரிபூரண ... உமக்கு

நேயமாகவே நிவேதனஞ் செய்வோ மென்றால்
நித்யதிருப்த ரல்லவோ சுவாமி
தூபதீபங் கொண்டு தொண்டுசெய்வோ மென்றால்
சுயம்பிர காசமான சொரூபர் நீரல்லவோ ... உமக்கு

திருவள ராரூரிற் செழிக்கும் நவரத்ன
சிம்மாசனத் தியாகரே—நவரத்ன
அருள்புரிந் தென்னை நீரே ஆட்கொள்வ தல்லாமல்
அடியேனால் உமக்கொன்றும் ஆவதும் இல்லை ஐயா ... உமக்கு

1. பி-ம். தியாகரே வைபோகரே.

சித்திரப் பகுதி.

சென்னைச் சித்திரக் காட்சி

(பார்க்கவன் எழுதியது)

சென்ற மாதம் நடந்தேறிய சென்னைச் சித்திரசாலைக் காட்சியில், மாணவரும் ஆசிரியரும் தம் தம் சித்திர சிற்பங்களை யெல்லாம் அரங்கேற்றி யிருந்தனர். மூப்பு மேலிட்டு சுருக்கங்கள் நிறைந்த கிழவர் கிழவிகளுடைய அனுகாரங்களாகவே பல சிற்பங்கள் அமைந்திருந்தன. இவைகளைக் கண்டபோது, கிழத்தனத்தால் விகாரமான முகங்களைச் சிற்பிகள் அனுகரிக்காமலிருப்பதற்கு 'காடியர்' என்ற பிரெஞ்சு ஆசிரியர் வேடிக்கையாகச் சொன்ன பரிஹார முறை ஞாபகத்துக்கு வந்தது. அவர் சொன்னதாவது 'இம்மாதிரி பிம்பங்களுக்கு மூலபுருஷர்களை (Models) சிரச்சேதம் செய்து விட்டால், சிற்பிகள் என்ன செய்வார்கள்?' என்பதே. 'பாழடைந்த வீடும், பாழடைந்த கோயிலும் பார்க்கத் தக்கனவே; ஆனால் மூப்பினால் பாழடைந்த மனிதன் முகம் மட்டும் பார்க்கத் தகுந்ததல்ல' என்பது அவ்வாசிரியரது கருத்து. ஆனால் நமது ஊரிலோ இப்படிப்பட்ட கிழ முகங்களே சிற்பத்துக்கு உத்தம விஷயமாகின்றன.

தவிர ஆணைப்போன்ற பெண்களும், பெண்ணைப் போன்ற ஆண்களும், கிரஹணத்தை ஒத்த சந்திரோதயமும், அஸ்தமனத்தை ஒத்த ஸூரியோதயமும், இலையில்லாத மரங்களும், அழகு சூன்யமான இயற்கைக் காட்சிகளும் அபரிமிதமாய்க் காணப்பட்டன. கோயில்களோ, சத்திரத்துச் சமையலறையை ஒத்திருந்தன. சித்திரத்திலும், நமது சித்திரகாரர்களுக்கு, பிச்சைக்காரர்களையும் ரோகிகளையும் தவிர வேறுவிஷயம் கிடைக்கவில்லைபோலும்; ஆனால் இவைகளைப் பற்றிப் புகழுரைகள் பல பத்திரிகைகளில் தோன்றின. பத்திரிகைகளால் புகழப்படாத சித்திரங்கள் மூன்றே. ஒன்று 'ஜய யாத்திரை' என்ற பெயர் கொண்ட ரத கஜ துரக பதாதிகளின் காட்சி. இப்படத்தில், ஜயத்தினால் உண்டான குதூஹலத்தை யானை குதிரைகளின் கதிகளில் காட்டியிருந்தான் சைத்திரிகன். இன்னொன்று அபூர்த்தியாக ரேகையளவிலே நின்றிருந்த 'திரௌபதி வஸ்திராபஹரணம்'; மூன்றாவது வர்ணவைசித்ரியத்தோடு விளங்கிய 'சிசுபால வதம்'.

'இது என்ன! ஒரு கொலையும், துகிலிழந்ததால் அபலைக்கு நேர்ந்த பரிபவமும், சித்திரத்துக்குச் சிறந்த விஷயமாகுமோ' என்று சிலர் கேட்கலாம். திரௌபதிக்கு ஒருவரல்ல, ஐவர் பர்த்தாக்கள். இவர்களுள் ஒவ்வொருவருமே, தனியாகக் கௌரவர் நூற்றுவரையும் கொல்லும் ஆற்றல் வாய்ந்த மஹாரதர். திரௌபதியைவிடப் பிரியமான பொருளும் இந்த ஐவருக்கு இல்லை. இதைவிடப் பெரிய ஆபத்தும் திரௌபதிக்கு ஒருபொழுதும் நேரவில்லை. இப் பேராபத்து நேர்ந்த

போது, துகிலுரியவும் சக்தியற்ற அற்பனை துச்சாசனனை, இந்த ஐந்து மஹா வீரரும் சேர்ந்திருந்தும் தடுக்க முடியவில்லையே? தர்ம சாஸ்திரம் அறிந்த பீஷ்மத்ரோணாதிகள் தாம் தடுத்தார்களோ? ஐந்து நாதர்கள் இருந்தும் அநாதையான அம்மெல்லியலாள் மானத்தைக் காத்தவர் பகவானல்லவா? இப்போபத்தில் திரௌபதிக்கு உதவவே போலும், அன்று கோபஸ்த்ரீகளின் வஸ்திரங்களை அவர் அபஹரித்தது! பந்து வர்க்கங்களெல்லாம் அவள் கண்முன்னே ஸபையை அலங்கரித்துக் கொண்டிருந்த அன்று கண்ணுக்குப் புலப்படாத பகவானன்றோ ஆபத்தில் பந்துவாகி ஸஹாயம் செய்தவர்? தேவதாம்சம் பெற்ற யுதிஷ்டிராதிகளே, திரௌபதி விஷயத்திலே இப்படி இருந்தார்களென்றால், ஸாதாரண ஸஹோதர ஸஹோதரிகளைப் பற்றியும், உற்றார் உறவினரைப் பற்றியும் கேட்க வேண்டுமோ?

ஹிரண்யகசிபு, ராவணன் முதலியவர்களைப் போல உலகத்தை ஹிம்ஸித்து வந்த சிசுபாலனது வதமும், உலகத்துக்கு க்ஷேமத்தை அளித்த மங்களகரமான ஸம்ஹாரமே. துச்சாசனன் திரௌபதியைப் பீடித்தான். சிசுபாலனோ பூமிதேவியையே பீடித்தான். வராஹவதாரத்தில் பூமியை மீட்ட அவரே இங்கு சிசுபாலனிடமிருந்து, அவளை விடுவித்தார். ஆகையால் நரகாஸுர வதத்தை யொப்ப சிசுபால வதமும் சுபகரமாகக் கொண்டாடத் தக்கதே. இவ்விரண்டு சித்திரங்களுக்கும் விஷயம் பகவானே.

இவ்விரண்டு படங்களின் விஷயமோ மிகக்கடினம். பற்பல ரூபங்களையுடைய ஸ்த்ரீ புருஷர்களை, ரஸம் குறையாமலும், அளவு தவறாமலும், உசிதமான வர்ணங்களுடனும், ஆபரணங்களுடனும், ஒரே சித்திர பூமியில், பற்பல ஸ்தானங்களில் அழகுற அமைப்பது சித்திராசாரியருக்கும் எளிதல்ல. ஒரு மாணவன் இதைச் செய்யத் துணிந்து ஜயித்தான் என்றால், அது அதிசயிக்கத் தகுந்ததே.

மாதக் குறிப்புகள்.

ஸ்ரீராமநவமியன்று சில்பஶ்ரீயின் ஆதரவில் சென்னை மயிலாப்பூர் ரானடே ஹாலில் பிற்பகல் 2-30 மணிக்குக் கம்பர் திருவிழா கொண்டாடப் பெற்றது. அண்ணாமலை சர்வகலாசாலைத் தமிழ் ஆராய்ச்சி ஆசிரியர் மஹா வித்வான் பாஷாகவிசேகரர் பண்டித ஸ்ரீ ரா. ராகவையங்காரவர்கள் தலைமை வஹித்தார்கள். அவர்கள் தலைமை உரையாகக் கூறியதன் ஸாரம் வருமாறு:—

"இரகு குலத்து இராமன்தன் கதையை வடகலை தென்கலை வடுகு கன்னடம் என்னும் பாஷையுள் யாதொன்றினுயினும் கேட்பவர் அமரராவர்" என்று உள்ளதால், இன்று வடகலை தென்கலை ஆகிய இரண்டு இராமாயணங்களையுமேனும் சிறப்பித்துக் கொண்டாடுவது மிகப் பொருத்தமாம்; குற்றமே காணவந்தோரும் குணமே கண்டு மகிழும்படியான பெருமை வாய்ந்தது. கம்பரின் சொல்வளம்; இகபரச் செல்வங்களைப் பெற்றவர்க்கும் 'கம்பநாடன் கவிதையிற்போல்' இதயம் களியாது. 'கம்பராம் புலவரைக் கருத்திருத்துவாம்' என்றும் 'கம்பநாடன் கழல் தலையிற் கொள்வாம்' என்றும் தனியன்கள் உள்ளதால், இக்கவி சாதாரணக்கவியாகக் கருதப்படாது, ஆழ்வார்கள் நாயன்மார்களை ஒப்ப ஒரு தெய்வக் கவி

யாகக் கொள்ளப்பட்டார்; அவரைத் தமிழ் மக்கள் திரிகரணத்தாலும் வழிபட்டார்கள்; ஏனெனில், ஆதித்தன் மகனாய்ப் பிறந்த கம்பர் புலவோரின் அக விருள் தன்னை அகலப் போழுங் கதிராக உதித்து புற விருளைப் போக்கும் ஆதித்தியனினுஞ் சிறந்து விளங்கினார்.

"கம்பர் மூவலூர் என்னும் ஊரிலே வாழ்ந்த ஆதித்தனுக்கு மகனாய்ப் பிறந்து அவ்வூருக்கு அருகிலேயுள்ள திருவழுந்தூரிலே வாழ்ந்து திருவெண்ணைநல்லூர்ச் சடையப்ப வள்ளலின் நட்புப் பெற்று அவன் முன் இராமாயணம் பாடினார். திருவழுந்தூர் கும்ப முனியின் சாபத்தைத் தீர்த்த ஊர்; காவேரி பிம்ப வடிவினளாய்த் திருக்கோயில் கொண்டுள்ள பெருமையும் அவ்வூர்க்கு உண்டு; ஆயினும் இவற்றினும் அதிகம் பெருமை அவ்வூருக்கு வாய்த்தது அது கம்பன் பிறந்த ஊர் ஆதலின்.

"கம்பருடைய ராமபக்திக்கு ஓரெல்லையில்லை; கவியின் கூற்றாக அமைந்த பகுதிகளிலே இப்பக்தியைப் பார்க்கக் காணலாம்; 'என்னையாளுடைய ஐயன்' என்பர் பலகாலும்; இதர யானைகள் கம்பத்தைச் சேரும்; கம்பரோ, 'ராமவேழஞ்சேர் கம்பமாய்' விளங்கினார். அவரைப்போலவே இராமனடி சேர்ந்து பெருமைபெற்ற தம்பியர் அறுவரைப் பற்றி உபந்நியாஸங்களை இவ்விழாவிலே படிப்பது உசிதமேயாகும்."

தலைமையுரையானதும், இந்தப் பத்திரிகையில் **201-224** பக்கங்களிலே பதிப்பிக்கப் பெற்ற உபந்நியாஸங்கள் படிக்கப் பெற்றன. தலைவரின் முடிவுரையோடும் சில்பஸ்ரீ ஆசிரியரின் வந்தனோபசாரத்தோடும் கம்பர் திருவிழா இனிது நிறைவேறியது.

அதே சுபதினத்தன்று மாலை அதே இடத்தில் ஸம்ஸ்கிருத ஸேவா ஸமிதியின் ஆதரவிலே 'வான்மீகி முனிவரும் ஸ்நேஹமும்' என்னும் பொருள் பற்றி மேற்கண்ட ஸ்ரீ ரா. ராகவையங்காரவர்கள் உபந்நியஸித்தார்கள். அவர்கள் அப்பொழுது செய்த உபந்நியாஸத்தின் ஸாரம் வருமாறு:—

ஸ்ரீராம பட்டாபிஷேகமான பின்பு அவரையே பின்பற்றியவராய் ஜனங்கள் பரஸ்பரம் இமிசை செய்யாது வாழ்ந்தார்கள் என்று வால்மீகி முனிவர் காவியத்தைப் பூர்த்தி செய்கிறார். 'அஹிம்ஸை' என்றால் இமிசியாதிருத்தல் மட்டுமன்று; நட்புக்கொள்ளுதல் வரை 'அஹிம்ஸை' யின் பொருள் செல்லும். நட்பு இப்பொழுது மிக அரிதாகி விட்டது. சகோதரர்கள் கூட ஒருவரையொருவர் நம்புவதில்லை; பரஸ்பரம் ஸ்நேஹத்தின் உண்மையிற் சந்தேகங்கொண்டு ஆராய்ச்சி செய்கிறார்கள். ஆனால் ஸ்ரீராமசந்திரனோ சிநேகிதனாகக் கொண்ட குரங்குக்கும் ஏதாவது நேர்ந்தால் நித்தியானபாயினியான தன் தேவியாலும் பயனில்லை என்னும் உறுதிகொண்டவன். விபீஷணன் தன்னை நோக்கி வந்தபோது, 'பரமவிரோதஞ் செய்த இராவணன் வரவில்லையே, என்னுடைய ஸ்நேஹத்தைக் காண' என்று வருந்தினான். மித்திரபாவத்தோடு வருவோனை நான் என்றும் கைவிடமாட்டேன்' என்ற பிரானையே பின்பற்றத்தகும்.

வே. நா.

கம்பராமாயண ஆராய்ச்சிக்கே தம் ஆயுளை அர்ப்பணம் செய்தவரும் சில்பஸ்ரீ உதவி ஆசிரியருமான தமிழ் வித்துவான் பிரம்மஸ்ரீ C. S. முத்துஸ்வாமி ஐயரவர்கள் சேலம், ஈரோடு, குன்னூர் முதலிய ஊர்களில் சில்பஸ்ரீயின் சார்பாகச் செய்த ராமாயணப் பிரஸங்கங்களை எல்லாரும் கேட்டு இன்புற்றார்களென்று அறிகிறோம். இவ்வூர்களில் சில்பஸ்ரீயை ஆதரித்த ரஸிகர்களெல்லாருக்கும் எமது வந்தனம்.

* * *

தற்சமயம் சில்பஸ்ரீக்கு விஷயதானம் செய்பவர், தமிழ்த் தாயின் அருந்தவப் புதல்வர்களே. இவர்களுள் அறுவரால் கம்பர் திருவிழா செவ்வனே நடந்தேறியது. இத்திருவிழாவைப் போலவே இதர மஹாகவிகளின் உற்சவங்களையும் நடத்தி அன்னவர் கவிரஸத்தை நாமும் பருகி, பிறரையும் பருகச் செய்யவேண்டும் என்ற எண்ணம் கொண்டோம். அவ்வத் திருவிழாக்களில் நடைபெறும் உபந்யாஸங்களும், வாசிக்கப்படும் கட்டுரைகளும் அவ்வப்போது சில்பஸ்ரீயில் வெளியிடப்படும்.

* * *

சென்ற இதழில் 'பிரம்மசாரியின் மனைவி யர்' என்ற கட்டுரையை உதவிய நண்பர் கை. சு. வேங்கடராம சாஸ்திரிகள், சுமார் 40 வருஷங்களாகத் தமிழ்த் தொண்டு புரிந்து வரும் அபூர்வமான எழுத்தாளர். இவரது நகைச்சுவை, பிரஸித்த ஆங்கில ஆசிரியர்களான கோல்டுஸ்மித், லாம்ப் முதலியவரோடு ஒப்பிடத்தக்க தனிப்பெருமை வாய்ந்தது. சிறு வயதிலேயே சித்திரக்கலையில் மோஹம் கொண்டு, காலஞ்சென்ற ராஜா ரவிவர்மாவிடம் அக்கலையை அப்பியாசம் செய்தவர். கமலாம்பாள் சரித்திரம் எழுதிய ராஜமையரிடம் அளவற்ற பக்தி கொண்டவர். அப்பெரியாரைத் தமது குருவாகவும் வரித்தவர். இவர் கட்டுரைகள் பலவற்றை சில்பஸ்ரீக்கு ஸமர்ப்பித்துள்ளார். ராஜம் ஐயரைப்பற்றிய இவரது கட்டுரை அடுத்த இதழில் வரும்.

* * *

தென் ஆப்பிரிக்காவில் டர்பானிலிருந்து சில்பஸ்ரீக்குச் சிறந்த மதிப்புரை அளித்த ஸ்ரீமான் ச. முனிஸ்வாமி பிள்ளை அவர்களுக்கு வந்தனம். இவர்கள் எழுதி உதவிய அரிய கட்டுரைகளையும் கவிகளையும் பின்வரும் பகுதிகளில் காணலாம். பல்லாயிர மயில்களுக்கப்பால் உள்ள இவர், தாம் குடியேறின தென் ஆப்பிரிக்காவிலும் தமிழ்த்தொண்டில் ஈடுபட்டுத் தமிழுக்கு உழைத்து வருவது, இவரது தமிழன்புக்கும் புலமைக்கும் சிறந்த அடையாளமாகும்.

* * *

"இவர் ஒரு மஹாபுருஷர்; பரமசுத்தர்; எந்த ஆபத்து நேரிடினும் லக்ஷியங்களை விடாதவர்; ஒருவர் தயவை அபேக்ஷிக்காதவர்; புகழுரையையும் தூஷணத்தையும் சமமாக மதித்தவர்; தமக்கு எந்தக் கஷ்டம் நேர்ந்தாலும் பிறருக்கு உபகாரம் செய்வதையே லக்ஷியமாகக் கொண்டவர்; ஆயிரக்கணக்கான இந்தியரது அன்புக்கும், பூஜைக்கும் பாத்திரமானவர்; இவர் அபிப்பிராயங்களை ஒப்பாதவரும் இவரை கௌரவிப்பதில் பின்வாங்குவதில்லை"- இது லாலா லஜபதிராய், சமீபத்தில் காலஞ்சென்ற லாலா ஹரதயால் என்ற மஹாபுருஷரைப் பற்றிப் பல வருஷங்களுக்கு முன் எழுதியது. இவர் இந்தியத்தாயின் புத்திர ரத்தினங்களுள் ஒருவர்; அதிமேதாவி; அதிபுத்திமான்; ஒன்பது பாஷைகளில் நிபுணர்; சிறுவயதிலேயே 'இந்திய மெக்காலே' என்ற பெயர் பெற்றவர்; கலிபோர்னியா யூனிவர்ஸிடியில் 10 வருஷங்கள் வேதாந்த சாஸ்திரத்தை உபந்யாசம் செய்து வந்தார்; அருமையான பல நூல்கள் ஆங்கிலத்தில் எழுதியுள்ளார்; ஆங்கிலத்தில் வியாபகர்களும் பொறுமையுறும்படி அழகாக எழுதும் சக்தியும், பேசும் சக்தியும் வாய்ந்தவர்; புத்தபகவான் குணங்களில் ஈடுபட்டவர். தேசபக்தியினால் தாய்நாட்டில் வாழும் உரிமையை இழந்தவர். வெளிநாடுகளில் இந்தியருக்கு கௌரவம் இருப்பது, ஹரதயால் போன்ற மஹாபுருஷர்கள் காரணமாகவே என்று சொல்லலாம். அவர் ஆத்மா சாந்தி யடைவதாக.

* * *

இந்த இதழ் 238-வது பக்கத்தில் உள்ள படத்தை வரைந்துதவியவர் மா. கிருஷ்ணன் M.A., B.L., அவர்கள்.

பத்திராதிபர்.

புஸ்தக விமர்சனம்

அற்புத உலகம்: பெ. நா. அப்புஸ்வாமி, பி.ஏ., பி.எல்., இயற்றியது. கலைமகள் காரியாலயம், மயிலாப்பூர், சென்னை. 1939. விலை ரூபாய் ஒன்று.

'நாம் வாழும் அற்புத உலகத்தின் விந்தைகளை ஆராயவும் அவற்றின் தத்துவங்களை அறியவும் மேல்நாடுகளில் முயன்று வருகிறார்கள். அம்முயற்சிகளால் புத்தம் புதிய கலைகள் அங்கே தோன்றி வளர்ந்து வருகின்றன' என்று தொடங்குகிறது இந்நூலின் முன்னுரை. பௌதிகசாஸ்திர தத்துவங்களை விளக்கும் நூல்கள் பல ஆங்கிலத்திலே இருக்கின்றன; அவற்றைத் தழுவித் தமிழிலே எழுதவேண்டு

மென்ற ஆசையால் தூண்டப்பெற்று முயல்வோர் பலரை இப்பொழுது காணலாம். இவ்வாறு முயல்வோருள் இருபது வருஷகாலமாக இடையறாத ஊக்கத்தோடு உழைத்து பௌதிகசாஸ்திர உண்மைகளைத் தமிழிலே பிரசாரப்படுத்திய தனிச்சிறப்பு இந்நூலாசிரியருக்கே உரியது.

மேனாட்டார் சாஸ்திரஸம்பந்தமாகச் செய்துள்ள ஆராய்ச்சியின் அருமை பெருமைகளைத் தமிழிலே பிழையின்றியும் தெளிவாகவும் கூறுவது கஷ்டமான காரியம்; திருந்திய சாஸ்திரப்பயிற்சி வேண்டும்; உண்மைகளை உள்ளபடியே தெளிந்து கூறும் ஆற்றல் வேண்டும்; கதைபோல இனிமையாகவும் இரஞ்ஜகமாகவும் சொல்லுஞ் சக்திவேண்டும்; தான் விளக்க முயலும் தத்துவங்களிலே பிரதிஷ்டை வேண்டும்; இவையெல்லாம் இவ்வாசிரியரிடம் வாய்ந்துள்ளது இந்நூலை வாசிப்போர்க்குச் சொல்லாமலே விளங்கும்.

கல்வித்துறைகளிலே ஒன்றில் மட்டும் தேர்ச்சிபெற்று, தான் கண்ட உண்மைகளை பண்டிதர்க்கேயன்றி பாமரஜனங்களுக்கும் தெளிவாக்கும் வன்மை பெறாது தடுமாறுவர் விஞ்ஞான நிபுணர்கள்; இந்நூலாசிரியரோ பல துறைகளிலும் மூழ்கி சாஸ்திரதத்துவங்களாகிய முத்துக்களைப் பொறுக்கிக்கொணர்ந்து அவைகளின் பெருமைகளை எல்லோரும் எளிதில் உணருமாறு கோவைப்படுத்துந் திறமை வாய்ந்து விளங்குகிறார் என்பதை இந்நூலின் பொருளடக்கத்தினின்றுமே அறியலாம். உலகம்தோன்றிய விந்தை, நிறம். ஒளி, ஒலிஇவற்றின் தத்துவங்கள், மலைகள் தோற்றம், சந்திரன் பிறப்பு, செடிகளாகவும் செந்துக்களாகவுமுள்ள நுண்ணுயிர்கள், நூல்களைப் பாதுகாப்பதற்கமைந்த சாதனங்கள், வியவசாய சரித்திரம், வைத்திய வளர்ச்சி, ஆடை, தேளின் இல்வாழ்க்கை. முதலிய பலதிறப்பட்ட அதிசயங்கள் அனைத்தும் யார்க்கும் விளங்கும் வகையிலே விளக்கப்பட்டுள்ளன. பெரும்பான்மை மொழிபெயர்ப்பு நூல்கள் ஆங்கிலம் முதலிய மொழிகளின் போக்கைத் தழுவி அப்பாஷைகளைக் கற்றோர்க்கே விளங்குவனவாகின்றன; அவைபோலல்லாது தமிழ் நடையிலே எழுதப்பெற்றிருப்பது இந்நூலின் சிறப்பாகும். ஆயினும், கட்டிய வீட்டில் குற்றங் காணுதல் நம்மனோர் மரபு; இம்முறையிலே ஒரு சிறிது இந்நூலைப் பற்றியும் கூறலாம். ஒரு சில இடங்களில் பிறமொழிச் சாயல்கள் காணப்படுகின்றன. உதாரணமாக,

(அ) உண்மையான காகிதமே (பச். 81)

(ஆ) அறிவிலிகளின் அன்பிலாக் கையில் (பக். 83)

(இ) ஊதாவுக்கு வெளிப்புறம் உள்ள நிறங்களின் கிரணங்கள் (பக். 99)

சிற்சில வாக்கியங்கள் திருத்தமாய் அமையவில்லை; உதாரணமாக,

(க) வியவசாய விஷயத்தில் இப்பிரதேசமானது அதிகமான செடிவகைகளை உடையதாகக் காணவில்லை (பக். 41)

(ங) அந்தக் காலத்தில் அதிக வித்தியாசம் இல்லை (பக். 66)

இவ்வாசிரியர் தாம் ஆண்பாலார் என்பதை 'தேளின் இல்வாழ்க்கை'யிலே 'நாம் மிகவும் அதிர்ஷ்டசாலிகள்' என்பதாலும், வயதானவர் என்பதை 'விந்தைகள்' என்னும் கட்டுரையில் 'நாமும் ஒரு காலத்தில் குழந்தைகளாய் இருந்தோம்' என்பதாலும் விளக்கி, குழந்தைகளையும் பெண்மக்களையும் உளப்படுத்தாது எழுதியிருப்பினும், இந்நூல் வயதுவந்த ஆடவர்க்கேயன்றிப் பெண்மணிகளுக்கும் குழந்தைகளுக்கும் சாஸ்திர உண்மைகளைப் போதிப்பதற்கான சிறந்த கருவியாம் என்பதை யாராலும் மறுக்க இயலாது.

மும்மொழியாளன்